# ராகவிபோதம்

(ஸ்ரீ ஸோமநாதர் இயற்றியது)

மொழிபெயர்ப்பாளர்

பண்டித. வே. ராமசந்த்ர சர்மா

கலாக்ஷேத்ரம்
அடையாறு, சென்னை
1947

With the best compliments of
the Author and Publishers:
Kalakshetra : Adyar : Madras

# ராகவிபோதம்

(ஸ்ரீ ஸோமநாதர் இயற்றியது)

மொழிபெயர்ப்பாளர்

பண்டித. வே. ராமசந்த்ர சர்மா

கலாக்ஷேத்ரம்

அடையாறு சென்னை

1947

PRINTED AT THOMPSON & CO., LTD., MADRAS.
(MINERVA PRESS)
(P. I. C. No. M. S. 15) 5-8-'47—1,000 Copies.

# ராகவிபோதம்

## முன்னுரை.

மனிதனுக்கு இயற்கை அளித்த திறமைகள் பல. அவற்றுட் சிறந்தது இசைத்திறமை. இசையிற் சிறந்தது தென்னிசை. தென்னிசை தேனிசையே. இதிலுள்ள அவ்வளவு மேள-ஜந்யராக விரிவும், தாளபத்ததியும் வேறெந்த நாட்டு இசைக்கலையிலும் இல்லை. மனித சக்திக்கு எட்டியவரையில் இசைக்கலையை எவ்வளவு தூரம் எவ்வளவு உச்சமாக வளர்க்கலாமோ அவ்வளவு தூரம், அவ்வளவு உச்சமாகத் தென்னிசையை நம் இசைப்புலவர் வளர்த்திருக்கிறார்கள். இந்த இசைக் கலைக்குப்பலர் இலக்கணமும் இலக்கியமான ஸாஹித்யமும் செய்திருக்கிறார்கள்.

சாரங்கதரஸம்ஹிதை, சதுர்தண்டி பிரகாசிகை முதல் இசைக்கலை விளக்கம் வரையில் ஏராளமான இசையிலக்கணங்களுண்டு.

இவற்றுள் ராகவிபோதம் ஓர் அரிய இசையிலக்கணம்; இது யாழிசை நுட்பத்தையும், ராகபேதங்களையும் தெளிவாக விளக்கும் இது வீணையின் அமைப்பு, சுத்தஸ்வரங்கள், விக்ருதஸ்வரங்கள், கமகங்கள், ஸஞ்சாரி வகைகள், மேளத் தொகுதிகள், மேளப்பிரஸ்தாரங்கள், கிரியைகள், ராகலக்ஷணங்கள் முதலிய பல அரிய விஷயங்களைக் கொண்டது.

இந்நூலாசிரியர் ஸோமதேவர், இசைக்கலையிலும், வடமொழியிலும், சிறந்த புலவர். சிவபக்தர், யாழிசைப் புலவர்.

வடமொழியிலுள்ள இந்நூலைத் தமிழில் ஆக்கியவர் பண்டித ஸ்ரீ ராமச்சந்த்ரசர்மா. இவர் இசை நுணுக்கம் அறிந்தவர். மொழிபெயர்ப்பு மூலத்தைப் போலவே தெளிவாயிருக்கிறது.

இந்நூல் யாழிசை மாணவருக்கு ஏழிசைச் சுவையை ஊட்டும் ஆசான் போன்றது. இத்தகைய மொழி பெயர்ப்புகள் தமிழுக்கு நல்லணியாகும்.

புதுயுக நிலையம்
புதுச்சேரி,
8—7—'47.

சுத்தானந்த பாரதி.

## தோற்றுவாய்

கண்ணன் கழலிணைக் கைதொழு
திண்ணஞ் சித்தியாஞ் சிந்தனை நன்கு.

இசை நூல்கள் பலவுள. எனினும் அவைகட்கெல்லாம் காலவரையறையிலே ஏற்பட்டதொரு தொகுப்பே போன்றது ஸ்ரீ ஸோமநாதரின் 'ராகவிபோதம்' என்ற இவ்விசைநூல். நாரதர், ஹநுமான், பரதர், மதங்கர், சார்ங்கதேவர், கல்லிநாதர், ராமாமாத்யர் முதலானவர்களைப் பின்பற்றி ஸ்ரீ ஸோமநாதர் மார்கஸங்கீதமாம் கர்ணாடக ஸங்கீதத்துக்கே தலைசிறந்த தொண்டு புரிந்துள்ளனர் எனவே கூறல் வேண்டும்.

தமக்கு முன்னதான ப்ரஹத்தேசீ, ஸங்கீத ரத்நாகரம், ஸங்கீததர்பணம், ஸ்த்ராக சந்த்ரோதயம், நாட்ய சாஸ்த்ரம், ஸ்வரமேள கலாநிதி, ஸங்கீதபாரிஜாதம், ஸங்கீத மகரந்தம் முதலிய நூல்களை நன்குணர்ந்தாய்ந்தே அநுபவ முதிர்ச்சியுடன் இந்நூலை எழுதத் துணிந்தாரெனத் தெரிய வருகிறது.

பிற்காலத்தவர்களான அஹோபலர், பாவபட்டர். வேங்கடமகி போன்ற இசைப்புலவர்கள் தத்தம் நூல்களிலே ராகவிபோதத்தையே மேற்கோளாகக் கொள்ளுவதால் இதன் பெருமை நன்கு விளங்கும்.

இவருக்குச் சற்று முன் காலத்தவரான ராமாமாத்யரின் ஸ்வரமேள கலாநிதியையும், அவரது கொள்கைகளையும்; இவர் தமது நூலிலே விஞ்சியுரைத்திருப்பதைக் காணலாம்.

இந்நூலை முதல் முதல் ஸர். வில்லியம் என்பவர் கி. பி. 1784-வது ஆண்டிலே அச்சுவாஹநத்தில் ஏற்றினர் என்பார்கள். ஆசிரியரே எழுதிய அழகியதோர் உரையும் இந்நூலுக்கு உண்டு.

### நூலாசிரியர் வரலாறு.

இவரது வரலாறு ஆதாரமுற முற்றும் கிடைத்திலது. ப்ரஹ்மஞானக்கல்வி இலாகா அதிகாரியும், மதனப்பள்ளிக் கல்லூரி ஸ்தாபகருமான ஸ்ரீ எர்னஸ்ட் உட் என்பார் தமது "இந்திய நாகரிகம்" என்னும் நூலின்

ஸ்ரீ ஸோமநாதர் பதினாறும் நூற்றாண்டவர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீ ஸோமநாதரும் தமது நூலின் முடிவுரையில் 1531-வது சகம், ஸௌம்ய ஆண்டு, புரட்டாசித் திங்கள், சுக்ல பக்ஷ பிரதமை ஸோமவாரம், ஹஸ்த நன்னாளில் முடிவுற்றதாகக் கூறுகின்றார். எனவே இந்நூல் கி. பி. 1609-வது ஆண்டு ஸெப்டம்பர் மாதம், 18-ம் தேதி எழுதி முடித்ததாகத் தெரியவருகிறது. ஆகவே இவர் கி. பி. 1550-க்கு மேல் பிறந்துள்ளவர் என விளங்குகின்றது.

இவரது காலம் ஷாஜஹானின் காலமாகும். பாமினி ராஜ்யத்தின் பொற்காலத்தவர். ராஜமஹேந்த்ரத்துக்கருகேயுள்ள ஒரு சிற்றூரில் பிறந்தவர். தாயார் ஜம்பாம்பாள், தந்தையார் மேங்கநாதர் 'ஸகலாகலா' என்னும் குடும்பத்திலே வந்தவர். இவரது பாட்டனார் ஸ்ரீ முத்கலஸூரியாவர். ஆந்திர நாட்டு அந்தணர். இவரது முன்னோர்களின் பெயரும், இவரது நாமதேயமுமே இவர் ஒரு சிறிய சிவபக்தர்—சைவர்—என விளங்கும். இவர் இந்த ராகவிபோதம் என்ற விமர்சக ஸங்கீத சாஸ்த்ரத்தைத் தவிர வேறு நூல்களொன்றும் செய்ததாகத் தெரியவில்லை. இவரைப்பற்றிய ஏனைய வரலாறனைத்தும் அறிஞரது ஆராய்ச்சிக்குரியதாகும்.

**நூல் நயம்.**

ஆசிரியர் இருபத்திரண்டு ச்ருதிகளின் வியர்பகத்திலேயே ஸ்வரங்களின் அமைப்பை அமைத்துள்ளார். விக்ருதஸ்வரங்களால் ராமாமாத்யர், சார்ங்கதேவர், இவர்களை மறுத்த இவர் புதியனதும், அதிகமானதுமான எட்டுஸ்வரங்களைக்கண்டு வெளியிட்டுள்ளார். எனவே இவர் காலத்தில் சுத்த ஸ்வரங்கள் ஏழுடன் விக்ருத ஸ்வரங்கள் பதினைந்து வழங்கின.

இவர் தம் காலத்துக்கும் சற்று முன்னதாகவும், வியாபகத்திலே ஓங்கியிருந்த ஷட்ஜக்ராமத்தை விடுத்து காந்தாரமத்யமக்ராமங்களுக்கும் விளக்கம் கொடுத்ததோடு, அவற்றை இயற்றிய முந்தைய ஆசிரியர்களுடன் மாறுபட்டவராயினர்.

ஸ்வரங்களுடைய நஷ்டம், உத்திஷ்டம், வர்ணம், அலங்காரம் முதலியவைகளும், மூர்ச்சனை, தானங்கள் முதலியவைகளும் இவரால் நன்கு விளக்கப்பட்டுள்ளன. மூர்ச்சனையே தானம் என்பர் ஸோமநாதர். இவரது

காலத்திலே இருபத்து மூன்று மேள ராகங்களே நடைமுறையிலுள்ளன எனத் தெரிகின்றது. இவைகளுக்கு க்ரஹம், அம்சம், ந்யாஸம், முதலியவை இவரால் காணப் பெற்றன.

மத்த கோகிலம் என்ற இருபத்தோரு தந்திகளுள்ள ராமாமாத்யரின் வீணையானது ஸோமநாதருடைய நான்கே தந்திகளுள்ள ருத்ரவீணையின் வியாபகத்தால் மறைத்துவிடப்பட்டது. அவரது சுத்த மேள வீணையின் பிரிவாகிய அகிலராகமேளவீணையே இன்றைக்குத் தஞ்சையிலே செய்யும் வீணையேயாகும். ஏகராகமேள வீணையே வடநாட்டிலே வழங்கும் 'ஸிதார்' என்ற வாத்ய மாகும்.

ஸோமநாதரின் வீணையின் உருவகம் அவரது நிதய் விகப்பற்றினைக் குறிக்கும். மேளப்ரஸ்தாரங்கள் மொத்தம் தொள்ளாயிரத்தறுபது எனக் கணித்தது கர்னாடக ஸங்கீதத்துக்கே ஒரு தனிப்பெருஞ் சாதனையாகும்.

ராகங்களுடைய நாதமயம், தேவமயம் என்னும் இருவகை ரூபங்களும் கற்றுணர்வோருக்குக் களியூட்டும். மற்றும் பல இசைச் செய்திகளில் ஸோமநாதர் ராமாமாத்யரையே பின்பற்றியவர் என்பர் இசைவல்லுநர்.

**மொழி பெயர்ப்பு.**

இந்நூலை வடமொழியிலிருந்து சுமார் ஐம்பது ஆண்டுகட்கு முன்பே ஆங்கிலத்திலும், மராட்டியிலும், மொழிபெயர்த்திருக்கின்றனர். மற்றும் சிலர் சில அத்தியாயங்களை மட்டும் வேற்று மொழியிலே செய்துமுள்ளனர்.

ஆயினும் அவை அக்காலத் தேவையையே பெரிதும் நோக்காகக் கொண்டவையாதலின், அவற்றைத் தெள்ளிய முறையிலே தாராளத் தன்மையுடனும், தக்க விளக்கங்களுடனும் ஸ்ரீ M. S. ராமஸ்வாமி அய்யர் அவர்களால் 1933-வது ஆண்டில் தஞ்சை பண்டித ப்ரஹ்மஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரியார் அவர்களின் நற்றுணை கொண்டு விரிவான மொழி பெயர்ப்பு ஒன்று ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது. அவ்வமயம் யான் ஸ்ரீ சாஸ்திரியார் அவர்களுடன் ஒத்துப் பணியாற்றினேன்.

ஆங்கில மொழிபெயர்ப்புக் காலமுதல் அவ்வப்போது உடனிருந்து என்னை இப்பணியிலே முயற்சி தளராது ஊக்கி வழிகாட்டியவரும், இதேபோல மற்றும் பல

நூல்களை வெளியிட வழி வகுத்தவருமான எனது பேரா சிரியர் இந்நூல் வெளியாகும் இந்நாள் இல்லாதது ஒரு பெருங் குறையே யாகும்.

இசையுலகுக்கு முதற்பணியாகிய இந்நூலை கடவுளுடைய நற்றுணைகொண்டு அறிஞர்களுக்கும், ரஸிகர்களுக்கும் அர்ப்பணம் செய்கிறேன். இதேபோல மற்றும் பல முக்கியமான இசைநூல்களையும், அபிநயநூல்களையும், மொழிபெயர்ப்பாகவும், முதநூலாகவும் வெளியிட விரும்புகிறேன்.

இந்நூலாசிரியர் முடிவுரையிலே மொழிந்த வண்ணம் பக்ஷபாதமற்ற நடு நோக்குடன் கலாரஸிகர்களும், ஸஹ்ருதயர்களும் எனது உழைப்பை பயனுள்ளதாகச் செய்து மேல்மேலும் எனது இப்புநிதத் தொண்டைத் தொடர்ந்து செய்து வர ஒத்துழைப்பார்களென நம்புகிறேன்.

இம் மொழிபெயர்ப்பைப் பார்த்து இதனை கலாக்ஷேத்ர பிரசுரப்பகுதியிலே வெளியிடுவதாக வாக்களித்து அன்புடன் என்னை உத்ஸாகப்படுத்திய கலாக்ஷேத்திரத்தின் அத்யக்ஷையான ஸ்ரீமதி ருக்மிணீ தேவீ அவர்கட்கும், இதனை மொழிபெயர்க்குங்கால் உடனிருந்து செவ்விய முறையிலே பிரதி செய்தும், மற்றும் பலவும் செய்த எனது இளவல் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சர்மாவுக்கும், நல்ல முறையிலே இதனை பதிப்பித்துக் கொடுத்த 'தாம்ஸன்' அச்சுக்கூடத்தார் அவர்கட்கும் எனது நன்றி உரித்தாகும்.

ஸித்தாச்ரமம்
அடையாறு

இங்ஙனம்
வாதூல. வே. ராமசந்த்ர சர்மா.

# பொருளடக்கம்

## முதல் விவேகம் 1—22


| | பக்கம் எண். |
|---|---|
| கடவுள் வணக்கம் ... ... | 1 |
| கலைமகள் ... ... | ,, |
| நூலாசிரியர் வரலாறு ... ... | ,, |
| இசையமைப்பு ... ... | 2 |
| மார்க்கமும் தேசியும் ... ... | ,, |
| விஷயங்கள் ... ... | 3 |
| நாதம் ... ... | ,, |
| ஸ்தாயிகளின் பதிவுகள் ... ... | ,, |
| ச்ருதிகள் ... ... | 4 |
| ஸ்வரங்கள் ... ... | ,, |
| சுத்தஸ்வரங்கள் ... ... | 5 |
| வீணையின் அமைப்பில் சுத்தஸ்வரங்களின் ஸ்தானங்கள் ... ... | ,, |
| விக்ருத·ஸ்வரங்கள் ... ... | 6 |
| பன்னிரண்டு விக்ருதஸ்வரங்கள் ஸப்த ஸ்வரங்களில் அடங்கிய விதம் ... | ,, |
| ஓர் விளக்கம் ... ... | 7 |
| விக்ருதஸ்வரங்களின் சாஸ்த்ரீயமுறைகளிற்சில | ,, |
| உத்தர தேசத்தில் வழங்கும் சில மாறுதல்கள் | 8 |
| சாஸ்த்ரீய அடையாளம் ... ... | ,, |
| மார்க்கம் தேசிக்குக் கொடுக்கும் ஸந்தர்ப்பம் ... | 9 |
| ஸம்வாதிகளின் லக்ஷணம் ... ... | ,, |
| க்ராமஸ்வரங்கள் ... ... | 10 |
| மூர்ச்சனை ... ... | 11 |
| தானம் ... ... | ,, |
| தானத்தின் விரிவு அல்லது வளர்ச்சி ... | 13 |
| நஷ்டம் ... ... | ,, |
| உத்திஷ்டம் அல்லது எழுச்சி ... ... | 14 |
| வர்ணமும் அதன் நான்கு வகைகளும் ... | 15 |
| அலங்காரம் ... ... | ,, |
| ஸ்தாயிகளின் ஐவகைகள் ... ... | 16 |
| ஆரோஹியின் ஏழுவகைகள் ... ... | ,, |
| ஸஞ்சாரியின் பதிமூன்று வகைகள் ... | 18 |
| அலங்காரத்தினுடைய மற்றுமிருவகைகள் ... | 21 |

| | | | பக்கம் எண். |
|---|---|---|---|
| அலங்காரத்தின் இன்றியமையாமை | | ... | 22 |
| க்ரஹம், அம்சம், ந்யாஸம் | ... | ... | ,, |


## இரண்டாம் விவேகம் 23—36

| | | | |
|---|---|---|---|
| வீணை | ... | ... | 23 |
| வீணையின் அமைப்பு | ... | ... | ,, |
| வீணையின் இன்றியமையாமை | ... | ... | 24 |
| ஸ்ரீருத்ரவீணையும் அதை அமைக்கும் விதமும் | ... | ... | 25 |
| ருத்ரவீணையின் நான்கு வகைகள்... | | ... | 27 |
| சுத்தமேள வீணை | ... | ... | 28 |
| மீண்டும் ஸம்வாதித்வதத்தின் கொள்கைகள்... | | | 30 |
| ஸ்வயம்பு அல்லது தான்தோன்றிகள் | | ... | ,, |
| மீண்டும் சுத்தமேளவீணை | ... | ... | 32 |
| மத்ய மேளவீணை | ... | ... | 34 |


## மூன்றும் விவேகம் 37—53

| | | | |
|---|---|---|---|
| மேளங்கள் | ... | ... | 37 |
| மேளங்களின் எண்கள் | ... | ... | 39 |
| மேளத் தொகுதிகள் | ... | ... | 41 |
| மேளங்களின் விரி | ... | ... | 42 |
| மேளப்ரஸ்தாரம் | ... | ... | 43 |
| நஷ்டம் | ... | ... | 44 |
| உத்திஷ்டம் | ... | ... | 45 |
| விடப்பட்ட மேளங்கள் | ... | ... | ,, |
| ஆசிரியரின் வேண்டுகோள் | ... | ... | ,, |
| இருபத்துமூன்று மேளங்களின் பெயர்கள் | | ... | 46 |
| முகாரீ | ... | ... | 47 |
| ரேவகுப்தீ | ... | ... | ,, |
| ஸாமவராளீ | ... | ... | ,, |
| தோடி | ... | ... | ,, |
| நாதராமக்ரீ | ... | ... | 48 |
| பைரவம் | ... | ... | ,, |
| வஸந்தம் | ... | ... | ,, |
| வஸந்தபைரவீ | ... | ... | ,, |
| மாளவகௌடை | ... | ... | 49 |
| ரீதிகௌளை | ... | ... | ,, |
| ஆபீரநாடை | ... | ... | ,, |
| ஹம்பீர் | ... | ... | ,, |

பக்கம் எண்.

சுத்தவராடி ... ... 50
சுத்தராமக்ரீ ... ... ,,
ஸ்ரீராகம் ... ... ,,
கல்யாணம் ... ... 51
காம்போதி. ... ... ,,
மல்லாரி ... ... ... ,,
ஸாமந்தம் .. ... ... ,,
கர்ணாடக கௌடை ... ... 52
தேசாக்ஷீ ... ... ... ,,
சுத்தநாடை ... ... ,,
ஸாரங்கம் .. ... ... 53

## நான்காம் விவேகம் 54—68

ராக விளக்கம் ... ... 54
ராகங்களின் முதல் மூன்று வகைகள் ... ,,
,, இரண்டாவது மூன்று வகைகள் ... ,,
,, மூன்றாவது மூன்று வகைகள் ... 55
முகாரியும், துருஷ்கதோடியும் ... ,,
ரேவுகுப்தியும் ஸாமவராளியும் ... ... ,,
வஸந்தவராளியும் தோடியும் ... ... 56
நாதராமக்ரீயும் பைரவமும் ... ... ,,
பௌரவியும் வஸந்தமும் ... ... ,,
டக்கராகமும் ஹிஜேஜையும் ... ... 57
ஹிந்தோளமும் வஸந்தபைரவியும் ... ,,
மாரவிகையும், மாளவகௌடையும், சைதி கௌடையும் ... ... ,,
பூர்வியும் பாடியும் ... ... 58
தேவகாந்தாரமும் கௌடக்ரியையும் ... ,,
குறிஞ்ஜியும் பஹுலியும் ... ... 59
ராமக்ரீயும் பாவகமும் ... ... ,,
அஸாவேரியும் பஞ்சமமும் ... ... ,,
பங்காளமும் சுத்தலலிதையும் ... ... 60
குர்ஜரிகாவும் பரஜுவும் ... ... ,,
சுத்தகௌடையும் ரீதிகௌடையும் ... ,,
ஆபீரியும் ஹம்மீரும் ... ... 61
விஹங்கடையும் கேதாரமும் ... ... ,,
சுத்தவராடியும் தேசகாரமும் ... ... ,,
லலிதையும் ஜைதாஸ்ரீயும் ... ... 62
த்ராவணீயும் தேசியும் ... ... ,,
ஸ்ரீராகமும் மாலாஸ்ரீயும் தந்யாஸியும் ... ,,

| | | | பக்கம் எண். |
|---|---|---|---|
| பைரவியும் தவளாராகமும் | ... | ... | 63 |
| ஸைந்தவியும் கல்யாணமும் | ... | ... | ,, |
| காம்போதியும் தேவக்ரீயும் | ... | ... | 64 |
| மல்லாரியும், நடமல்லாரியும், பூர்வ கௌடையும் | | | ,, |
| பூபாளியும், கௌடையும் | ... | ... | ,, |
| சங்கராபரணமும் நடநாராயணமும் | | ... | 65 |
| நாராயணகௌடையும் கேதாரமும் | | ... | ,, |
| ஸாலங்கநாடையும் வேலாவலியும் | | ... | ,, |
| மத்யமாதியும் ஸாவேரியும் | ... | ... | 66 |
| ஸௌராஷ்டரமும் ஸாமந்தமும் | ... | ... | ,, |
| கர்ணாடமும் அடாணாவும் | ... | ... | ,, |
| நாகத்வனியும் சுத்தபங்காளமும் | ... | ... | 67 |
| வர்ணநாடையும் துருஷ்கதோடியும் | | ... | ,, |
| தேசாக்ஷியும் சுத்த நாடையும் | ... | ... | ,, |
| ஸாரங்கராகம் | ... | ... | 68 |


## ஐந்தாம் விவேகம் 69—91


| | | | |
|---|---|---|---|
| ராக அமைப்புகள் | ... | ... | 69 |
| காலதத்துவத்திற்கேற்ற ராகங்கள் | | ... | ,, |
| ராகங்களின் பொழுதுகள் | ... | ... | ,, |
| ரூபம் என்பது யாது? | ... | ... | 70 |
| நாதாத்ம ரூபம் | ... | ... | 71 |
| வீணைபயிலுவதின் பலவித முறைகளின் பெயர்கள் | ... | ... | ,, |
| ப்ரதிஹதியும் ஆஹதியும் | ... | ... | 72 |
| அநுஹதி, அஹதி, பீடா, தோலநம் | | ... | ,, |
| விகர்ஷம், கமகம், கம்பம், கர்ஷணம் | | ... | ,, |
| முத்ரா, ஸ்பர்சம், நைம்நியம் | ... | ... | 73 |
| ப்லுதி, த்ருதி, பாதா, உச்சதா | ... | ... | ,, |
| இரு நிஜதங்கள், ம்ருது, கடினம் | ... | ... | 74 |
| வீணைமீட்டலின் முறைகளின் ஸங்கேதங்கள் | ... | | ,, |
| சுத்த விக்ருதஸ்வரங்களைப்பற்றிய விசேஷக் குறிப்பு | ... | ... | 76 |
| மீண்டும் ஆசிரியரின் வேண்டுகோள் | | ... | ,, |
| வலக்கை விரல்களின் கிரியைகள் | | ... | ,, |
| இடக்கை விரல்களின் கிரியைகள் | | ... | 77 |
| தேவதாத்ம ரூபங்கள் | ... | ... | 79 |
| ஆசிரியரது நோக்கம் | ... | ... | 90 |
| நர்தமயமும் தேவமயமும் | ... | ... | ,, |
| முடிவுரை | ... | ... | 91 |

## ப்ரதிஹதி முதலியவைகளுடைய விளக்கங்கள்

| | | |
|---|---|---|
| (க) | ப்ரதிஹதி | ஸ oo |
| (உ) | ஆஹதி | ஸ o |
| (ங) | அநாஹதி | ஸ ~ |
| (ச) | அஹதி | ஸ • |
| (ரு) | பிடா | ஸ0 |
| (சு) | தோலநம் | S ஸ |
| (எ) | விர்கஷம் | ம ஸ |
| (அ) | கமகம் | ஸS |
| (கூ) | கம்பம் | ' ஸ |
| (க0) | கர்ஷணம் | - ஸ |
| (கக) | மூத்ரா | ஸ • |
| (கஉ) | ஸ்பர்சம் | ஸ |
| (கங) | நைம்நியம் | ஸ ◡ |
| (கச) | ப்லுதி | ஸப |
| (கரு) | த்ருதி | ஸரிக |
| (கசு) | பாதா | ஸ ம. |
| (கஎ) | உச்சதா | ம ஸ ம |
| (கஅ) | பாதாநிஜதா | ஸ ம 0 |
| (ககூ) | உச்சதாநிஜதா | ம ஸ ₈0 |
| (உ0) | சமம் | ஸ0 |
| (உக) | ம்ருது | 0 ஸ |
| (உஉ) | கடினம் | ⊂⊃ ஸ |
| (உங) | பத்மம் | ஸ |

# ஸ்ரீ ஸோமநாதருடைய வீணாவாதநத்தின்
## முறைகளும், அவற்றிற்கான அடையாளங்களும்

1. மே=மேலே
2. கீ=கீழே
3. பி=பிறை வளைவு
4. ச. கோ=சங்கிலிக்கோடு
5. நீ.வ.பூ=நீண்டவட்டமான பூஜ்யம்
6. ப=படுக்கை வசம்
7. பூ. கீ. சே=பூஜ்யம் கீழே சேர்த்தது
8. கோ=கோடு
9. தா=தாமரைக்குறி
10. உ.பு.சே=உள்ளே புள்ளி சேர்த்தது
11. வ=வலபாரிசம்
12. கொ=கொக்கிபோன்ற குறி 'S'
13. பூ=பூஜ்யம்
14. இ. பூ=இரண்டு பூஜ்யங்கள்
15. செ=செங்குத்துவசம்

| நெ. | பெயர். | குறி. | குறி விளக்கம். | இயற்றுமுறை. |
|---|---|---|---|---|
| 1 | ப்ரதிஹ்தி | ஸ 00 | கீ. இ. பூ. | இருமீட்டலில் உண்டாகும் ஒலி. முன்னது அதாரஷட்ஜத்தையும், பின்னது சுத்த ஷட்ஜத்தை (ஹுங்கார த்வனி)யும் எழுப்புவதேயாகும். |
| 2 | ஆஹதி | ஸ o | கீ. பூ. | முதலாவதைப் போன்றதே ; ஒரே மீட்டலில். |
| 3 | அநுஹதி | ஸ → | கோ. வ. பூ. | முன்னதைப் போன்றதே. |
| 4 | அஹதி | ஸ . | கீ. பூ. பு. | முதலில் கூறியதைப்போலே ; திருந்தின முறையிலே. |
| 5 | பிடா | ஸo S | பூ. வ. | இரண்டு ஸ்வரத்தின் காதம் ; முதல் ஸ்வரம் உரத்து ஒலிப்பது, |
| 6 | தோலனம் | ஸ | மே. செ. கொ. | இங்குமங்கும் விரல்களைத் தட்வச் செய்வதால் உண்டாகும் ஒலி. |
| 7 | விகர்ஷம் | ஶ ஸ | மே. ப. கொ. | அங்குமிங்கும் செல்லாமல் ஒரே இடத்தில் தோலனத்தைப்போன்றே இயற்றுவதாம். |
| 8 | கமகம் | S | வ. செ. கொ. | தோலனத்தைப் போன்றதே ; ஆனால் மெதுவாக 3 அல்லது 4 அசைவுகள்தான். |
| 9 | கம்பம் | ' ஸ | மே. செ. கோ. | விரைந்தொலிக்கும் கமகம்தான். |
| 10 | கர்ஷம் | ‾ ஸ | மே. ப. கோ. | ஒரு ஸ்வரத்வநி அதன் அடுத்த ஸ்வரத்துடன் சேர்ந்து வருதல். |
| 11 | முத்ரா | ஸ — | கீ. ப. கோ. | ஒரு ஸ்வரம் ஒலிக்கும்பொழுது விரலோடு அதன் தொடர்ந்த ஸ்வரத்தை அடக்கி நிறுத்திச் செலுத்துவதாகும். |
| 12 | ஸ்பர்சம் | ◡ ஸ | மே. பி. | அஹதியைப்போன்றதே ; ஆனால் விரலோடு தொட்டர்ந்து ஸ்வர ஸ்தானத்தை யடைந்து அதை ஒலிக்கச் செல்வதாம். |
| 13 | கைம்பியம் | ஸ ◡ | கீ. பி. | சுருதிகளிடை விரல் செய்வதால் உண்டாகும் உரத்த சப்தம். |
| 14 | ப்லுதி | ஸ◡ | வ. பி. | ஆரோஹியிலுள்ள எட்டு ஸ்வரங்களும். |
| 15 | த்ருதி | ஸ ரிங் | கீ. ச. கோ. | விரைவுடன் வாசிப்பதின் விசேஷப் பெயர். |
| 16 | பரதா | ஸ ஶ | கீ. ப. கொ. | ஷட்ஜச்ருதியை அழுத்துவதால் உண்டாகும் ரிஷபத்தின் தோற்றம். |
| 17 | உச்சதா | ஶ ஸ ஶ | கீ. ப. கொ. | ஷட்ஜச்ருதியை அழுத்துவதால் உண்டாகும் காந்தாரத்தின் தோற்றம். |
| 18 | நிஜதா (ப்ரதா) | ஸ ஶ 0 | கீ. ப. கோ. வபூ. | பரதையையே மெல்ல மீட்டுதலாகும். |
| 19 | நிஜதா (உச்சதா) | ஶ ஸ ஶ 0 | மே. கீ. ப. கொ வ. பூ. | உச்க்சதையே மெல்ல மீட்டுதலாகும். |
| 20 | ஸமம் | ஸ0 | நீ. வ. பூ. ை | சவுக்கக்காலத்தில் வாசித்தலின் விசேஷப் பெயர். |
| 21 | ம்ருது | 0 ஸ | மே. நீ. வ. பூ. | கீழ்ஸ்தாயி வாசிப்பு. |
| 22 | கடினம் | 0 ஸ | மே. ப. நீ. வ. பூ. | உச்சஸ்தாயி வாசிப்பு. |
| 23 | பத்மம் | ஸ ❋ | வ. தா. | தோற்றுவாய் அல்லது இ.பு இரண்டையும் ஒலிக்கச் செய்வது. |

## ஸ்ரீ ஸோமநாதரின் 23 மேள ராகங்கள்

| எண்கள் | மேளங்கள் | க்ரஹம் | அம்சம் | ந்யாஸம் | ஸ்வரங்கள் | | | | | | | | | | | | | | | | | | | | | | பாடுங்காலம் | விசேஷக் குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | ஸ | ரி | | | | க | | | | | ம | | | ப | த | | | | நி | | | | | |
| | | | | | சுத்த | சுத்த | தீவ்ர | தீவ்ரதர | தீவ்ரதம | சுத்த | ஸாதாரண | அந்தர | ம்ருதுமத்தியமம் | தீவ்ரதம | சுத்த | தீவ்ரதம | ம்ருதுபஞ்சமம் | சுத்த | சுத்த | தீவ்ர | தீவ்ரதர | தீவ்ரதம | சுத்த | கைசிகீ | காகலீ | ம்ருதுஷட்ஜம் | | |
| 1 | முகாரீ | ஸ | ஸ | ஸ | ஸ | ரி | | | | க | | | | | ம | | | ப | த | | | | நி | | | | எப்பொழுதும் | |
| 2 | ரேவகுப்தி | ரி | ரி | ரி | ஸ | ரி | | | | | | க | | | ம | | | ப | த | | | | நி | | | | மாலை | ஸ, ப நீக்கல். |
| 3 | ஸாமவராளீ | ஸ | ஸ | ஸ | ஸ | ரி | | | | க | | | | | ம | | | ப | த | | | | | | நி | | எப்பொழுதும் | |
| 4 | தோடி | க | க | ஸ | ஸ | ரி | | | | | க | | | | ம | | | ப | த | | | | | நி | | | அருணோதயம் | |
| 5 | நாதராமக்ரீ | ஸ | ஸ | ஸ | ஸ | ரி | | | | | க | | | | ம | | | ப | த | | | | | | | நி | இரவு | |
| 6 | பைரவம் | த | த | ஸ | ஸ | ரி | | | | | | க | | | ம | | | ப | த | | | | | நி | | | காலை | |
| 7 | வஸந்தா | ஸ | ஸ | ஸ | ஸ | ரி | | | | | | க | | | ம | | | ப | த | | | | | | நி | | உதயம் | |
| 8 | வஸந்தபைரவீ | ஸ | ஸ | ஸ | ஸ | ரி | | | | | | | க | | ம | | | ப | த | | | | | நி | | | உதயம் | ப. நீக்கல். |
| 9 | மாலவகௌளை | நி | நி | நி | ஸ | ரி | | | | | | | க | | ம | | | ப | த | | | | | | | நி | அந்திமயக்கம் | க, த சில சமயம் நீக்கல் ; சில சமயம் 'ஸ' ந்யாஸத்தில் வருவதுண்டு. |
| 10 | ரீதிகௌளை | நி | நி | நி | ஸ | ரி | | | | க | | | | | ம | | | ப | | | த | | | நி | | | மாலை | |
| 11 | ஆபீரநாட்டை | க | க | ஸ | ஸ | | | ரி | | | க | | | | ம | | | ப | த | | | | | | | நி | அந்திமயக்கம் | |
| 12 | ஹம்மீரை | க | ப | ஸ | ஸ | | | ரி | | | | | க | | ம | | | ப | த | | | | | | | நி | இரவு | நிஷாதம் சிறிதே பயன்படும். |
| 13 | சுத்தவராடி | ரி | ஸ | ஸ | ஸ | ரி | | | | | க | | | | | ம | | ப | த | | | | | | | நி | பகல் | |
| 14 | சுத்தராமக்ரீ | ஸ | ஸ | ஸ | ஸ | ரி | | | | | | | க | | | ம | | ப | த | | | | | | | நி | | |
| 15 | ஸ்ரீராகம் | ரி | ரி | ஸ | ஸ | | ரி | | | | க | | | | ம | | | ப | | த | | | | நி | | | அந்திமயக்கம் | காந்தார, தைவதம் சில வேளை விலக்கல். |
| 16 | கல்யாணம் | ஸ | க | ஸ | ஸ | | | ரி | | | க | | | | | | ம | ப | த | | | | | | | நி | " | |
| 17 | காம்போதி | ஸ | ஸ | ஸ | ஸ | | | ரி | | | | க | | | ம | | | ப | | | த | | | | நி | | மாலை | நிஷாதம் சில வேளை விலக்கல். |
| 18 | மல்லாரி | த | த | த | ஸ | | | ரி | | | | | க | | ம | | | ப | | | த | | | | | நி | காலை | காந்தார, நிஷாதம் விலக்கு. |
| 19 | ஸாமந்தம் | ஸ | ஸ | ஸ | ஸ | | | | ரி | | | க | | | ம | | | ப | | | | த | | | நி | | மாலை | |
| 20 | கர்நாடகௌளை | நி | நி | நி | ஸ | | | | ரி | | | | க | | ம | | | ப | | த | | | | நி | | | நடுநிசி | சில சமயம் ரிஷப, தைவதம் விலக்கல். |
| 21 | தேசாக்ஷி | க | க | க | ஸ | | | | ரி | | | | க | | ம | | | ப | | | த | | | | | நி | உதயம் | மத்யமம், நிஷாதம் விலக்கிப் பாடுதல் நலம் |
| 22 | சுத்தநாட்டை | ஸ | ஸ | ஸ | ஸ | | | | ரி | | | | க | | ம | | | ப | | | | த | | | | நி | அந்திமயக்கம் | |
| 23 | ஸாரங்கம் | ஸ | ஸ | ஸ | ஸ | | | ரி | | | | | | க | | | ம | ப | | | | த | | | | நி | பிற்பகல் | |

# பிழைத்திருத்தம்

| | பக்கம் | வரி |
|---|---|---|
| ரஞ்ஜன | 4 | 23 |
| ஸந்தர்ப்பம் | 9 | 17 |
| அபரக்ரமம் | 16 | 12 |
| ரஞ்ஜிதம் | 19 | 4 |
| ச்யோநம் | 21 | 7 |
| ரஞ்ஜனை | 22 | 5 |
| மரத்துண்டோ | 23 | 19 |
| பிராஹ்மணர் | 24 | 7 |
| ,, | ,, | 8 |
| யாக்ஞவல்கியர் | ,, | 16 |
| தொள்ளாயிரத்து | 39 | 34 |
| மேளங்களையும் | 42 | 1 |
| அதனதன் | ,, | 6 |
| கூடாததாயின் | 44 | 10 |
| கைசிகி | 48 | 13 |
| ,, | 49 | 15 |
| ,, | 50 | 21 |
| பஞ்சமமும் | 53 | 1 |
| வகைகள் | 55 | 10 |
| பஞ்சமமும் | 59 | 22 |
| ,, | 61 | 8 |
| தேசகார | 83 | 6 |
| தன்னுடைய | ,, | 24 |
| ஒசிந்து | 88 | 8 |

# ராகவிபோதம்

## முதல் விவேகம்

### ச்ருதிகளும் ஸ்வரங்களும்

———o———

#### கடவுள் வணக்கம்

பூஜ்யர்களின் பேரானந்தத்துக்கு மூலகாரண மானவரும், தெய்விக ஆசிரியரும், தேவர்களின் ப்ரார்த்தனைகளுக்குப் பாத்திரரும், உந்நத நிலையிலே நின்றருளுவதால் பக்தர்களின் வேண்டுகோளுக்கு மகிழ்பவருமாகிய மஹாகணபதியை, எனது ராகவிபோதம் என்ற நூலின் பரிபூர்ண வெற்றியின் பொருட்டு வணங்குகிறேன். (க)

#### கலைமகள்

ஸகல பாஷாவ்யவஹாரங்களுக்கும் தனிநிலையென உலக முற்றும் நிலைத்த புகழினளும், தனது வீணையின் மீது அருள், அழகு, வளம் இவற்றை ஒருங்கே கொண்ட கரத்தால் ஒப்பற்ற ஆனந்தத்தை இசை மயமாகப் பொழிபவளும், ப்ரஹ்ம தேவனின் மனைவியுமாகிய ஹே ஸரஸ்வதி! உன்னை வணங்குகிறேன். நினது இன்னருள் உயர்ந்தோங்க அருளுவாய். (உ)

#### நூலாசிரியர் வரலாறு

ஸர்வகலைகளையுமுணர்ந்தோரென்ற புகழுடைய குடும்பத்திலே தோன்றியவரும், புகழினுயர்ந்த புலவர் மேங்கநாதன் என்பவரின்

புத்திரர் முத்கலஸூரி என்பவருடைய குமாரனு மாகிய ஸோமதேவன் என்ற யான் முற்கூறிய பெரியவர்களிடையே என்னையும் உங்களுக்கு அறிமுகமாகச் செய்து கொள்ளுகிறேன். (௩)

### இசையமைப்பு

பூர்விக இசைநூல்களிலிருந்து தாராளமாகப் பெற்றுள்ள முக்கியக் குறிப்புக்களின் உதவியி லேயே ஸங்கீதக் கலைக்கும் தத்துவத்திற்கு மிடையே யுள்ள அபிப்பிராய பேதங்களை யகற்றி வெற்றிபெறும் வகையிலே பெருநோக்கத்துடன் நான் இந்த ராகவிபோதம் என்ற நூலை எழுதத் துணிந்தேன். (௪)

எனது நூல், பத்ய (செய்யுள்) வகையில் 'ஆர்யா' என்ற சந்தஸிலும், சிறிது 'விபுலா' என்ற சந்தஸின் வகையிலும் முன்னதைப் போன்றே தொடங்கி, அதன் மூலம் எனது கருத்தை நிறைவேற்ற முயன்றுள்ளது. (௫)

### மார்க்கமும் தேசியும்

ஸங்கீதம் மார்க்கம், தேசி என இருவகைப் படும். மார்க்க ஸங்கீதமே பாராட்டுதற்குரியது. இந்த மார்க்க ஸங்கீதமே ப்ரஹ்மாதி தேவர்களால் கடைப்பிடிக்கப் பட்டதாகும். சிவபெருமானின் முன்னிலையில் பரதர் முதலான மஹர்ஷிகளால் தேவர்களுக்கும் முன்னதாக இது அப்யஸிக்கப் பட்டது. (௬)

மார்க்க ஸங்கீதம் உலகை மகிழ்விக்கத் தவறி யதன் விளைவாக இக்காலம் நிலைத்துள்ள தேசி உபஸாதகமாக முன்னதற்கு உதவியது. பல் வேறு நாட்டவரின் பல்வேறு மக்களை ரஞ்சிக்கச் (மகிழ்விக்க) செய்யும் ஸங்கீதமே தேசியாகும். (௭)

### விஷயங்கள்

இந்நூல் ஐந்து அத்தியாயங்களை வரிசைக் கிரமங்களில் முறையே கற்க அனுமதிக்கின்றது. "(1) ச்ருதிகளும் ஸ்வரங்களும்; (2) வீணைகளும் அவைகளின் வகைகளும்; (3) மேளங்களுடைய எண்ணிக்கைகள்; (4) ராகங்கள்; (5) ராகங்களின் அமைப்புக்கள்" என்பன அவை. (அ)

### நாதம்

ஸகல புருஷார்த்தங்களையும் பெறும் வகையிலே ஒரு விவேகி ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரர்களை உபாஸித்த போதிலும் நாதத்தைத் தியானிக்க வேண்டும். என்னையோவெனின், பூர்விக ஸூரிகள் அம்மூர்த்திகளை நாதத்தாலே அறிந்து கொண்டனராதலின்! (௯)

சப்திக்க விரும்பும் ஜீவன் மனதைத் தூண்ட, தூண்டப்பட்ட மனம் சரீரத்துள்ள ப்ராண ஜ்வாலையை ஓங்கச் செய்ய, ஓங்கிய ப்ராண ஜ்வாலை காற்றினை ஒழுங்குபெற அமைக்க, அக்காற்று மேலுங்கீழும் உந்தப்பெற்று உந்திக்கமலம், மார்பகம், தொண்டை, சிரம், வாய் இவற்றினூடே முறையே சென்று, அதிஸூக்ஷ்மம், ஸூக்ஷ்மம், புஷ்டம், அபுஷ்டம், க்ருத்ரிமம் என்ற இன்னிசைகளை உண்டாக்குகின்றது. இவைகளே ஸங்கீதக் கலைக்கு வேண்டிய இன்றியமையாத நாதங்களாகும். (௧௦, ௧௧)

### ஸ்தாயிகளின் பதிவுகள்

மார்பு, நெஞ்சு (தொண்டை), சிரம் இவற்றிலிருந்து வெளியாகும் நாதங்கள் முறையே மந்த்ரம், மத்யம், தாரம் என்றே அழைக்கப் பெறுகின்றன.

இவற்றுள் வென்றி கொண்டோங்கும் ஒரு நாதம் முன்னதான நாதத்திலும் இரட்டிப்பதுடன் அளவிலே உயர்ந்தும் தோன்றும். இனி இவ்வித முண்டாகும் சப்த நாதங்கள் எங்ஙனம் ச்ருதி களையும் ஸ்வரங்களையும் பெறுகின்றன என்பதைக் குறிக்கின்றேன். (௧௨)

### ச்ருதிகள்

மார்பகத்தில் நிமிர்ந்தோங்கிய நரம்பு நுண்மங் களின் கூட்டம் ஒன்றுள்ளது (ஸுஷும்ணை, இடை, பிங்கலை). இவை ஒன்றோடொன்று பின் னப்பட்டு இருபத்திரண்டு நுண்ணிய நரம்புகளால் ஆனவை. இவை குறுக்காக விரிந்து கிடக்கின்றன. இவைகளே இருபத்திரண்டு ச்ருதிகளை யுண்டாக்குகின்றன. ஒவ்வொரு ச்ருதியும் தனக்கு முன்னதாகவுள்ள ச்ருதியைக் காட்டிலும் நாதத்திலுயர்ந் தோங்கி யொலிக்க வல்லது; இவ்வொழுங்கு முறையே தொண்டை யிலும், சிரத்திலுமமைந்துள்ளது. (௧௩)

### ஸ்வரங்கள்

முற்கூறிய இருபத்திரண்டு (௨௨) ச்ருதிகளி னின்றும் ஏழு (௭) ஸ்வரங்கள் வெளிப்பட்டுச் சப்திக்கின்றன. இவை 'ஸப்தஸ்வரங்கள்' எனப் படும். இவற்றிற்கு இயல்பாயமைந்த ரஞ்சனஸ்வபா வத்தால் இவை ஸங்கீதானுபவத்தில் ப்ரஸித்தி பெற்றவை. (௧௪)

இவை ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்யமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்பன. இவற்றின் ஸம்ஜ்ஞைகள் முறையே ஸ, ரி, க, ம, ப, த, நி என்பன. (௧௫)

### சுத்த ஸ்வரங்கள்

சுத்த ஸ்வரங்களின் ச்ருதிகள் முறையே 4, 3, 2, 4, 4, 3, 2. இவ்வெண்களின் சேர்க்கையே இருபத்திரண்டு சுருதிகளாகும். இந்த ஸப்த ஸ்வரங்களும் நான்கு, ஏழு, ஒன்பது, பதில்மூன்று, பதினேழு, இருபது, இருபத்திரண்டு முதலிய ச்ருதிகளில் முறையே நன்கு இசையுடன் கேட்கப் படும். (கசு, கள)

### வீணையின் அமைப்பில் சுத்த ஸ்வரங்களின் ஸ்தானங்கள்

வீணையொன்றின் மேருவின் மீது நான்கு கம்பிகள் ஓடுகின்றன (இது இரண்டாவது விவேகத்தில் விவரிக்கப்படும்.) இந்நான்கு கம்பிகளுள் முதற்கம்பி தாழ்ந்தொலிக்கும் ஸ்வரத்தையும், ஏனைய மூன்று கம்பிகளும் முறையே கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்தும் ஒலிக்கின்றன. நான்கு கம்பிகளின் கீழே இருபத்திரண்டு சிறிய நேர்க் கோணவரை இழைகள் உளவாதலின் கம்பிகளை அழுந்தச் செய்யும் முறையிலே இருபத்திரண்டு ச்ருதிகள் முறையே உயர்ந்தொலிக்கின்றன. இருபத்திரண்டு ச்ருதிகளுக்கு மிடையே யுள்ள பாகங்களில் நாதங் காண விரும்புவது கூடாத தாகும். நான்காம் கம்பி வாளாவிருப்பின் ஷட்ஜம் ஜனிக்கும். மூன்றும் இழையிலே ரிஷபமும், ஐந்தாம் கோணவரையிலே காந்தாரமும், ஒன்பதாவது கோணவரையிலே மத்யமமும், பதின் மூன்றாவது கோணவரையிலே பஞ்சமமும், பதினாறாவது கோணவரையிலே தைவதமும், பதினெட்டாவது கோணவரையிலே நிஷாதமும் உண்டாகின்றன. இருபத்திரண்டாவது கோணவரையிலே

காணும் ஷட்ஜம் ஆதார ஷட்ஜத்தை விட இருமடங்கு உயர்ந்ததாகக் காணப்படும். (கஅ—உக)

மீண்டும் ஒலிக்கும் ஷட்ஜத்தின் விகிதம் ச்ருதி, ஸ்வரம் இவற்றை எளிதில் உணரவும்; மீண்டும் ஒலிக்கும் சதுச்ருதிஷட்ஜம், ஷட்ஜத்தின் சுத்தத் தன்மையைக் காட்டுவதுடன், நிஷாதத்தின் வகைகளை நிதானித்தறியவும் உதவுகிறது. (உஉ)

### விக்ருத ஸ்வரங்கள்

ஸப்த ஸ்வரங்களின் விவரிப்பு இங்ஙனமிருப்ப, இனி விக்ருத ஸ்வரங்கள் ஏழையும் பெயர்களுடன் விவரிக்கத் தொடங்குகிறேன். மத்யமத்தின் முதல் ச்ருதியைக் காந்தாரம் பெற்றால் அஃது ஸதாரண காந்தாரமாகும். ஆனல் அதே காந்தாரம் மத்யமத்தின் இரண்டாம் ச்ருதியைத் தழுவினல் அந்தர காந்தாரமாகும். ஷட்ஜத்தின் முதல் ச்ருதியை நிஷாதம் தழுவினல் அஃது கைசிக நிஷாதமாகும். ஆனல் அதே நிஷாதம் ஷட்ஜத்தின் இரண்டாம் ச்ருதியைத் தழுவினல் அது காகலிநிஷாதமாகும். நிஷாதம் காந்தாரம் மத்யமம் இம் மூன்று ஸ்வரங்களும் முறையே ஷட்ஜம், மத்யமம், பஞ்சமம் இவற்றின் மூன்ருவது ச்ருதியைக் கொண்டொலித்தால் அவைகளே ம்ருதுஷட்ஜம், ம்ருது மத்யமம், ம்ருது பஞ்சமம் எனப்படும். (உங, உச)

### பன்னிரண்டு விக்ருதஸ்வரங்கள் ஸப்த ஸ்வரங்களுள் அடங்கிய விதம்

ப்ராசீன ஸங்கீத வித்வான்கள் பன்னிரண்டு விக்ருத ஸ்வரங்களைக் குறித்துப் போந்தனர். ஆனல் அவற்றுள் ஏழு ஸ்வரங்களே தனித்த வியாபகத்துடன் நன்கு ப்ரயோகிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய

ஐந்தும் மற்ற ஸ்வரங்களால் அவற்றினிடையே அறியத் தக்கனவாய் இருந்தனவாதலின் ப்ரயோகங்களில் காணக்கூடவில்லைபோலும்! அச்யுத ஷட்ஜம், அச்யுத மத்யமம் இவ்விரண்டும், முறையே சுத்தஷட்ஜம், சுத்தமத்யமம் இவ்விரண்டிலிருந்தும் பேதமற்றவை. இன்னும் சதுச்ருதி ரிஷபம், சதுச்ருதிதைவதம் இவையிரண்டும், சுத்த ரிஷபம், சுத்ததைவதம் இவற்றிலிருந்து வித்தியாஸமில்லாதவைகள். மேலும் சதுச்ருதிபஞ்சமம் கூட விக்ருதமாகிற த்ரயச்ரபஞ்சமத்திலிருந்து வேற்றுமை யற்றதே. (ஸி: சங்க) சார்ங்கதேவரது கொள்கைப்படி சதுச்ருதிதைவதமும் த்ரயச்ருதிதைவதத்திலிருந்து பேதமற்றது. ஆகவே இவைகள் 'கூடதானம்' எனக் கூறப்பட்டுள்ளன. ஆகையால் தத்துவத்தால் இவ்வைந்து ஸ்வரங்களும் பிரிக்கப் பட்டபோதிலும், அனுபவத்தில் இவை ஒன்றாகவே முற்கூறிய ஸ்வரங்களுடன் இழைந்தே காணப் படுகின்றன.

### ஓர்விளக்கம்

வீணைகளினின்றும் வெளியான நிருபண ப்ரகாரம் இந்த விக்ருதஸ்வரங்கள் ஒவ்வொன்றும் தத்தமக்குரிய தனிப்பட்ட ச்ருதிகளை விட அதிக ச்ருதிகளைப் பெற்றாலும் கூட அவைகள் தத்தமது முடிவான ச்ருதியிடத்தே தான் செவிக்கினிய நாதத்தைத் தோற்றுவிக்கும். முதல் ச்ருதிகளிலேயே நாதத்தைக் காணமுடியாது. (உ௫—உஅ)

### விக்ருதஸ்வரங்களின் சாஸ்த்ரீய முறைகளிற் சில

ரிஷபமும் தைவதமும் மற்ற ச்ருதிகளைத்தழுவினால் (அதாவது ரிஷபம், காந்தாரம் மத்யமம்

இவற்றின் ச்ருதிகளையும்; தைவதம், நிஷாதம் ஷட்ஜம் இவற்றின் ச்ருதிகளையும் தழுவினால்) அவைகள் தேசி ராகங்களில் முறையே சதுச்ருதி, பஞ்சச்ருதி, ஷட்ச்ருதி எனப் பெயரிடப் பெறுகின்றன. இங்ஙனம் மேலே சொன்ன பன்னிரண்டு (12) விக்ருத ஸ்வரங்களைத் தவிர அதிகப்படியான இம்மூன்று ஸ்வரங்களுமுண்டு.

ஆனால் இவைகளிலிருந்து பஞ்சச்ருதிரிஷபம் சுத்த காந்தாரத்திலிருந்து வேற்றுமையடைவது இல்லை யென்றும், ஷட்ச்ருதிரிஷபம் ஸாதாரண காந்தாரத்திலிருந்து வேற்றுமையடைவது இல்லை யென்றும், பஞ்சச்ருதி, ஷட்ச்ருதிதைவதம் முறையே சுத்த நிஷாதத்திலிருந்தும் கைசிக நிஷாதத்திலிருந்தும் வேற்றுமையடைவது இல்லையென்றும், ஷட்ச்ருதிகாந்தாரம், சுத்தமத்யமத்திலிருந்து வேற்றுமையற்றதெனவுங் கொள்ள வேண்டும். ரி, த, க, ம இவை தத்துவஸம்பந்தமான குறிகளேயாகும். (உகூ—ந௩க)

**உத்தர தேசத்தில் வழங்கும் சில மாறுதல்கள்**

சதுச்ருதியைத் 'தீவ்ரம்' எனவும், பஞ்சச்ருதியை 'தீவ்ரதரம்' எனவும், ஷட்ச்ருதியை 'தீவ்ரதமம்' எனவும் பெயரிட்டழைப்பர். ஆனால் இப்பெயர்கள், ஸ்வரங்களின் முற்கூறிய ஆதிக்கங்களின் வண்ணமே பொருந்தற்பாலன. (ந௩உ)

**சாஸ்திரீய அடையாளம்**

ஷட்ஜம், மத்யமம், பஞ்சமம் இவற்றின் மூன்றும் ச்ருதிகளுடன் நிஷாதம்,' காந்தாரம், மத்யமம் இவைகளும் முற்கூறியவற்றின் நான்காம் .. சுருதிகளுடனும், மற்றச்ருதிகளுடனும்

ரிஷபம், தைவதம், காந்தாரம், மத்யமம் ஆகிய இவைகள் ஒரே மாதிரியாகக் காணப்பட்டாலும் இச்செய்தி சாரங்கதேவரது கொள்கைப்படி இசை நூலுக்கு அவ்வளவாக முரணானவை அன்று எனக் கொள்ளப்படுகிறது. "இன்னிசைக் கருவிகள்" என்ற தலைப்பில் சாரங்கதேவர் குறித்துள்ளவாறு தத்துவத்துக்கும், அனுபவத்துக்குமிடையே விரோதபாவ மேற்படின் அனுபவ முறையுடன் தத்துவ முறையினைச் சாதகமாக்கிக் கொள்ளும் வழியை விவரிப்பதே சிறந்த லக்ஷ்யமாகும். சாரங்கதேவரின் "ராகவிவேகங்கள்" என்ற அத்தியாயத்தை உரையிட்ட கல்லிநாதர் கூட தத்துவ லக்ஷியங்களைக் கொண்டு மத்யமம், ஷட்ச்ருதிகளிலும், ரிஷபம், தைவதம் இவை முறையே பஞ்ச, சதுச்ருதிகளிலும் உள்ளன வென்று குறிப்பிட்டுள்ளனர்.

### மார்க்கம் தேசிக்குக் கொடுக்கும் ஸந்தர்பம்

ச்ருதி, ஸ்வரங்களுடன் ஆரம்பிக்கும் இசைகளில் பூர்விக இசையாசிரியராகிய ஹனுமானே தேசி ராகங்களில் அமைக்க முடியாத க்ராமம், ச்ருதி, ஸ்வரம் இவற்றின் நிர்ணயங்களை நிர்ணயித்துள்ளார்.

### ஸம்வாதிகளின் லக்ஷணம்

சுத்த விக்ருத ஸ்வரங்களான அவைகள்யாவும், அவை உண்டாகும் ஸ்தானங்களுக்கேற்ப மந்த்ரம், மத்யம், தாரம் என்ற முப்பிரிவுகளிலுமுள்ளன. வெவ்வேறு ராகங்களில் அவற்றின் ப்ரயோகங்கள் 'வாதி, ஸம்வாதி, விவாதி, அநுவாதி' என நான்கு வகைப்படும். பெரும்பாலும் தாராளப்

போக்கையும், அரசனைப் போன்ற முக்யத்தன்மை யையும் பெற்றுப் பிரயோகத்திலுள்ள ஸ்வரமே வாதியாம். எந்த இரண்டு ஸ்வரங்களுக்கிடையில் பன்னிரண்டு (12) அல்லது எட்டு (8) ச்ருதிகள் உளவோ அவை அமைச்சரைப்போன்ற ஸம்வாதி களாகும். எந்த இரண்டு ஸ்வரங்களுக்கிடையிலே ஒரே யொரு ச்ருதி மட்டுமுளதோ அவை விவாதி களாகும். இவ்விவாதிகள் மேலே கூறிய ஏனைய மூன்று பிரிவுகளுக்கும் விரோதமானவைகளா கும். இம் மூன்று பிரிவுகளைத் தவிரவுள்ள ஸ்வரங்கள் யாவும் அநுவாதிகளாம். இவை ஊழியரைப்போன்று ஏனைய பிரிவுகளுக்குத் துணை செய்வனவாகும். (௩௬—௩௮)

**க்ராம ஸ்வரங்கள்**

ஸ்வரங்களின் ஒரு தொகுதியை—சேர்க்கை யை—க்ராமம் என்பர். இந்த க்ராமம் மூர்ச்சனைகள் முதலியவற்றிற்கு அடிப்படையாயுள்ளது. மேலும் இந்த க்ராமம் முக்கியமாக இருவகைகளாயுள்ளது. அவற்றிற்கு முறையே ஷட்ஜக்ராமம், மத்யமக்ரா மம் எனப் பெயர்களாகும். (௩௯)

(க) காந்தாரமானது (ரி) ரிஷபத்தின் கடைசி ச்ருதியையும், (ம) மத்யமத்தின் முதல் ச்ருதியை யும், (நி) நிஷாத்மானது (த) தைவதத்தின் கடைசி ச்ருதியையும், (ஸ) ஷட்ஜத்தின் முதல் ச்ருதியை யும், (த) தைவதமானது (ப) பஞ்சமத்தின் கடைசி ச்ருதியையும், பெற்று அநுஸரிக்கும் பொழுது உண்டாகும் க்ரமத்தை காந்தாரக்ராமம் என்பர். இதைச் சேர்த்தால் க்ராமங்கள் மூவகைகளா கின்றன. ஆனால் மூன்றாவதான இந்த காந்தார க்ராமம் ஸ்வர்கலோகத்தில் மட்டும் வழங்கப் பெறு கின்றது. (௪௦)

(ப) பஞ்சமம் தனது கடைசி (நான்காவது) ச்ருதியுடன் இணைந்து காணப்படின் அஃது ஷட்ஜ க்ராமமாகும். ஆனால் அதே (ப) பஞ்சமம் தனது கடைசிக்கு முன்னதாகவுள்ள (மூன்றாவது) ச்ருதி யுடன் பொருந்தித் தோன்றுமாயின் அஃது மத்யம க்ராமமாகும். எப்படி இருந்தபோதிலும் தேசி ராகங்களில் ஷட்ஜக்ராமத்திலுள்ள (ப) பஞ்சமம் யாதொரு மாறுதலுமின்றி அப்படியே அநுஸரிக் கப் பெறும். (சக)

### மூர்ச்சனை

ஸப்த (ஏழு) ஸ்வரங்களின் க்ராமத்துடன் கூடிய ஏற்றமும், இறக்கமும் மூர்ச்சனையாம். இம் மூர்ச்சனைகள் உத்தர மந்த்ரம் முதலாக ஏழுவகை களாகவுள்ளன. (சஉ)

மத்ய ஸ்தாயியின் (ஸ) ஷட்ஜத்துடன் ஆரம் பிப்பது முதல் மூர்ச்சனையாகும். மற்ற ஆறு வகை களும் (நி) நிஷாதத்தை முன்னிட்டும், மற்ற மந்த்ரஸ் தாயியின் ஸ்வரங்களுடனும் கணிக்கப்படுபவை களாகும். இவ்வகைகளுள் யாவும் ஆரோஹண ஸ்வரங்களையே மிகவும் முதன்மையாகக் கணக் கிடப் பெற்றுள்ளன. (சங)

### தானம்

ஷட் (ஆறு) ஸ்வரங்களுடன் ஸஞ்சரிக்கின்ற ஒரு மூர்ச்சனை ஷாடவமூர்ச்சனையாகும். அதே போன்று ஒரு மூர்ச்சனை ஐந்து ஸ்வரங்களுடன் அனுஸரிக்கப் பெற்றால் ஔடுவ மூர்ச்சனை எனப்படும். எனவே ஷாடவ, ஔடுவ மூர்ச்சனைகள் சுத்த ஸ்வரங் களுடன் பொருந்துமாயின் அவைகளைச் சுத்த தானங்கள் என்பர். இத்தகைய சுத்த தானங் களின் ஸங்கியை (49) நாற்பத்தொன்பதாகும்.(சச)

ஸம்பூர்ணமோ அஸம்பூர்ணமோ எல்லா மூர்ச்சனைகளிலும் ஸ்வரங்கள் தோன்றும் பொழுது விதிமுறைப்படி பலவகைகளாக ஒலிக்கப்படுகின்றன.

(ஸம்பூர்ணம், ஸப்தஸ்வரங்கள்; அஸம்பூர்ணம் ஆறிலிருந்து (6) ஒன்று (1) வரை முறையாக உள்ளவைகள்) இவை கூடதானங்களை உண்டாக்குகின்றன. இத்தகைய ஸம்பூர்ண கூடதானங்களின் மொத்த ஸங்கியை ஐயாயிரத்து நாற்பது (5,040). நிற்க, அஸம்பூர்ண கூடதானங்கள் ஒன்று அல்லது அதிக ஸ்வரங்களின் வரையறுத்தலால் கீழ்க்கண்டவாறு அமைந்துள்ளன. ஆறு ஸ்வரங்களின் சேர்க்கையினுலுண்டான கூடதானங்கள் எழுநூற்று இருபது (720) ஆகும். ஐந்து ஸ்வரங்களின் சேர்க்கையினுலுண்டான கூடதானங்கள் நூற்று இருபது (120) ஆகும். நான்கு ஸ்வரங்களின் சேர்க்கையினுலுண்டான கூடதானங்கள் இருபத்து நான்கு (24) ஆகும். மூன்று ஸ்வரங்களின் சேர்க்கையினுலுண்டாகும் கூடதானங்கள் ஆறு (6) ஆகும். இரண்டு ஸ்வரங்களின் சேர்க்கையினுல் வரையறுக்கப்பட்ட கூடதானங்கள் இரண்டு. ஒரே ஸ்வரத்தின் கூடதானம் ஒன்றேயாம். ஸப்தஸ்வரங்களின் ஸங்கியையினுல் (1, 2, 3, 4, 5, 6, 7) அவ்வவற்றின் முன்னதான ஸங்கியைகளால் பெருக்கிக்கொண்டு கூடதானங்களின் மொத்த எண்களை வரையறுத்துக் கூற வேண்டும். (1, 2, 3, 4, 5, $6 \times 7 = 42 \times 5 = 210 \times 4 = 840 \times 3 = 2,520 \times 2 = 5,040 \times 1 = 5,040$. (சஈ, சகூ)

### தானத்தின் விரிவு அல்லது வளர்ச்சி

நாம் இனி கூடதானங்களின் விரிவை விவரிப்போம். ஸப்த ஸ்வரங்களின் தொகுதியில் ஏதேனும் ஒன்றிலிருந்து விரும்பிய கிரமமொன்றைப் பொறுக்கிக் கொள்ளவும். அதை ஒழுங்கு முறையில் வரிசைப் படுத்தவும். பிறகு அதன் கீழே ஒவ்வொரு வரிசையிலும் மேல் வரிசையிலுள்ள ஸ்வரத்தை எடுத்து அதனை தன் அடுத்து வரும் ஸ்வரத்தின் கீழே எழுதவும். இவ்விதம் எடுத்து எழுதுவதில் மேல் வரிசையிலுள்ள ஸ்வரங்களே மீண்டும் வருமாயின் அவற்றிற்கு முன்னதாக அடுத்துள்ள ஸ்வரத்தை எழுதவும். மீண்டும் முன் போல் மேலுள்ள ஸ்வரமே காணப்படின் அவற்றிற்கு முன்னதற்கு முன்னதான ஸ்வரத்தைக் குறிக்கவும். இனித்தேர்ந்தெடுத்த ஸ்வரத்திற்கு வலப்புறத்தில் மேல் வரிசையிலுள்ள அடுத்து வந்த ஸ்வரங்களை எழுதவும். விரும்பிய ஸ்வரத்துக்கு இடப்புறத்தில் விரும்பிய ஸ்வரம் நீங்கலாக மற்ற ஸ்வரங்களைக் கிரம வியல்பிலே எழுதவும்.
(சள—சசு)

### நஷ்டம்

இப்பொழுது தான நஷ்டத்தை விளக்குவாம். கிரமமான கூடதானங்களின் மொத்த எண்களை இவ்விதம் எழுதிக்கொள்ள வேண்டும். 1—2—6—24—120—720—5,040. கேள்வியிலுள்ள இலக்கத்தைக் கடைசியாகப் பெருக்கி மொத்தத்தினின்றும் கழித்து விடவேண்டும். கழித்து வந்த மிச்சத்தை கடைசி இலக்கத்திற்கு முன்னதாகவுள்ள மொத்தத்தால் வகுக்கவேண்டும். வகுத்தும் மிச்சம் வந்தால் அந்த மிச்சத்தை உடனுக்குடன் முறையே

முன்னதாகவுள்ள மொத்தத்தால் வகுக்கவும். கிடைக்கப் பெற்ற ஈவுகளே விரும்பிய தானங்களின் ஸ்வரஸங்கியைகளாகும். இந்த ஸ்வரங்களைத் தலைகீழான க்ரமத்திலும், இரண்டாவது ஸ்வரத்திலிருந்து இயல்பான க்ரமத்திலும் கணிக்கலாம். எந்த பாக்கியாவது வகுக்கக் கூடாததாயிருப்பின், இயல்பான க்ரமத்திலுள்ள இரண்டாவது ஸ்வரத்துக்கு முந்தின ஸ்வரத்தைத் தேர்ந்தெடுத்து வகுக்க வேண்டும். இத்தொடர் முறையை முடிவுவரையிலும் செய்யவேண்டும். ஆனால் இவ்விதம் செய்வதில் ஒரு முறையில் கண்ட ஸ்வரமே மீண்டும் வருமாயின் அவற்றைக் கணிக்காமல் விட்டுவிடவும். (ருo, ருக)

### உத்திஷ்டம் அல்லது எழுச்சி

நாம் இனிக்குறிப்பிட்ட ஒரு தானத்தின் எழுச்சியைக் கண்டுபிடிக்கும் விதத்தைக் கூறுவாம். ஸ்வரங்களின் ஸ்வபாவத்தினிடையே குறிப்பிட்ட தானத்தின் கடைசி ஸ்வரத்தையும், இரண்டாம் ஸ்வரத்திற்குப் பின்னருள்ள மதிப்பையும் முதலில் கண்டு பிடிக்கவும். இவ்விதம் கண்டு பிடித்த ஸங்கையினுல் கடைசிவரையில் பெருக்கவும். ஒன்றின் மொத்தத்தை நீக்கிச் செய்யவும். கடைசி மொத்தத்திலிருந்து வந்த தொகையைக் கழிக்கவும். ஸ்வபாவத்திலே தொடர்ந்துள்ள ஸ்வரத்தையும் குறிப்பிட்ட தானத்தின் கடைசி ஸ்வரத்தையும் விட்டுவிடவும். குறிப்பிட்ட தானத்தின் கடைசி ஸ்வரமானது ஸ்வபாவத்திலே ஸ்வரங்களிடையே இரண்டாவது ஸ்வரத்துக்கு முன்னதாக வந்தால் கடைசி ஸ்வரத்தை விட்டுவிட வேண்டும். இம்மாதிரியே முடிவுவரையிலும் பெருக்கிக்

கழித்து வரவேண்டும். கடைசியாகக் காணப்படும் மீதியே குறிப்பிட்ட தானத்தின் எழுச்சியையும் அதன் ஸங்கியையும் காட்டுவதாகும். (௫௨—௫௪)

**வர்ணமும் அதன் நான்கு வகைகளும்**

ஸ்வரங்களை இசைபடப்பாடுவதே வர்ண மாகும். அது ஸ்தாயி வர்ணம், ஆரோஹி வர்ணம், அவரோஹி வர்ணம், ஸஞ்சாரி வர்ணம் என நான்கு வகைப்படும். ஒரு தனித்த ஸ்வரத்தை ஒரே கிரமத்திலே அடிக்கடி பாடுவது ஸ்தாயிவர்ண மாகும். (உ-ம்) ஸ-ஸ-ஸ-ஸ.

எல்லா ஸ்வரங்களையும் கீழிருந்து மேலே ஒன் றையடுத்து ஒன்றாக ஏற்றிப் பாடுவதே ஆரோஹி வர்ணமாகும். (உ-ம்) ஸ-ரி-க-ம-ப-த-நி.

எல்லா ஸ்வரங்களையும் மேலேயிருந்து கீழாக வரிசைக் கிரமத்திலே இறக்கிப்பாடுவதே அவ ரோஹி வர்ணமாகும். (உ-ம்) நி-த-ப-ம-க-ரி-ஸ.

முன்னே கூறிய மூவகைகளும் கலந்து விரவி வருவதே ஸஞ்சாரி வர்ணமாகும். (உ-ம்) ஸ ஸ ரி க; ஸ நி த; ஸ ரி க. (௫௫, ௫௬)

**(அலங்காரம்) ஸ்வரங்களாலான அணி**

ஒரு ரஞ்சனையின் அல்லது இனிய வர்ணங் களின் தொகுப்பே அலங்காரமாகும். இவ்வலங் காரங்களுடைய முப்பத்திரண்டு (32) வகைகளையும், மேலும் இரண்டு வகைகளையும் விளக்குவாம். (௫௭)

இவ்வதிகாரத்திலே கீழ்க்கண்ட தத்துவமுறை யின் விகிதங்களைக்கூறுவாம். கீழ்ஸ்தாயியிலுள்ள ஒரு ஸ்வரத்தை மந்த்ரம், ம்ருது, ப்ரஸந்நம் என்று கூறுவர். அதன் குறிப்பு ஸ்வரத்தின் மீது ஒரு புள்ளியை இடுவது மரபு. (உ-ம்) ஸ்.

மந்த்ரத்தைவிட இருமடங்கு உயர்ந்து ஒலிப்பது தாரமாகும். இத்தாரத்தைத் திப்தம் என்றும் சொல்லுவார்கள். இதை ஸ்வரங்களில் காட்ட ஒரு சிறிய செங்குத்துக் கோட்டை ஸ்வரங்களின் மீது வரைதல் வழக்கம். (உ-ம்) ஸ். மும்முறை மீண்டு ஒலிக்கப்படும் ஸ்வரத்தைத்தான் ப்லுதம் என்பர்.

### ஸ்தாயியின் ஐவகைகள்

ஒரு தாரஸ்வரமானது இரண்டு மந்த்ரஸ்வரங்களுக்குப் பின்னர் வருமானல் அதைப் ப்ரஸந்நாதி என்பர். (உ-ம்) ஸ் ஸ் ஸ். ப்ரஸந்நாதி. அதன் அபரகரமம் (முன்னர்) ப்ரஸந்நாந்தம் எனப்படும். (உ-ம்) ஸ் ஸ் ஸ்—ப்ரஸந்நாந்தம். ப்ரஸந்நாத்யந்தம், ப்ரஸந்நமத்யம் இவையிரண்டும் அனுபவ வாயிலாக ஊஹிக்கக்கூடியவை. (உ-ம்) ஸ் ஸ் ஸ்—ப்ரஸந்நாத்யந்தம். (உ-ம்) ஸ் ஸ் ஸ்—ப்ரஸந்நமத்யம். கடைசியாக முற்கூறிய இரு மந்த்ர ஸ்வரங்களுக்கிடையே இரண்டு அல்லது மூன்ரவது ஸ்வரமும் நான்கு அல்லது ஐந்தாவது ஸ்வரமும் ஆறு அல்லது ஏழாவது ஸவரமும் வந்து மூன்று வகைகளில் ஸதாயி எழுச்சிகளை யுண்டாக்கினுலும் பொதுவில் அவையாவும் க்ரமரேசிதம் எனப்படும். (உ-ம்) ஸ் ரி ஸ்—முதல் வகை; ஸ் க ம ஸ்—இரண்டாம் வகை; ஸ ப த நி ஸ்—மூன்ரும் வகை. இது க்ரம ரேசிதம்.

மேலே கூறிய ஐவகைகளும் ஸ்தாயிகளினின்றும் அமைக்கப்படுவனவாகும். (நிஅ—சுக)

### ஆரோஹியின் ஏழுவகைகள்

ஆரோஹியிலிருந்து ஏழுவகையான ஸ்வரத் தொகுதிகள் அமைக்கப்படுகின்றன. ஸப்தஸ்வரங்களையும் கிரமத்திலே ஒரேயளவையுடன் நீட்டி

ஒலிக்கச் செய்வது விஸ்தீர்ணமாகும். (உ-ம்) ஸா ரீ கா மா பா தா நீ. ஆனால் அந்த ஸ்வரங்கள் ஒவ்வொன்றையும் இரண்டு தடவைகளாக விரைந்து உச்சரித்து ஏற்றிப்பாடுவதே நிஷ்கர்ஷமாகும். (உ-ம்) ஸஸ ரிரி கக மம பப தத நிநி.

மேலும் அதே ஸப்தஸ்வரங்களையும்; ஒன்றாவது இரண்டாவது ஸ்வரங்கள், இரண்டாவது மூன்றாவது ஸ்வரங்கள், மூன்றாவது நான்காவது ஸ்வரங்கள், நான்காவது ஐந்தாவது ஸ்வரங்கள், ஐந்தாவது ஆறாவது ஸ்வரங்கள், ஆறாவது ஏழாவது ஸ்வரங்கள் என்ற முறையிலே இணையிணையாகப் பொருத்தியும், ஒவ்வொரு தொகுதியிலுமுள்ள இரண்டாவது ஸ்வரம் கமகத்திலே போன்று அசைந்தொலித்தும் பாடப்படுவது ப்ரேங்கித மாகும். (உ-ம்) ஸரீ-ரிகா-கமா-மபா-பதா-தநீ.

இன்னம் ஸப்தஸ்வரங்களில் முதல் ஸ்வரம் ரிஷபத்தை முன்னிட்டு மும்முறை யொலிக்கின்ற முதல் தொகுதியும், (க) காந்தாரம், (ம) மத்யமத்துக்கு முன்னர் மும்முறை யொலிக்கின்ற இரண்டாம் தொகுதியும், (ப) பஞ்சமம் தைவதத்துக்கு முன்னர் மும்முறை யொலிக்கின்ற மூன்றும் தொகுதியும், (நி) நிஷாதம் தனித்து நின்று மும்முறை யொலிக்கின்ற நான்காம் தொகுதியும் பிந்து எனப்படும். (உ-ம்) ஸஸஸரி—கககம—பபபத—நிநிநி.

ஆரோஹியில் ஸப்த ஸ்வரங்களுள் ஒவ்வொன்றும் தத்தம் ஸ்தானங்களின் ஸங்கியைப்படி அமைந்து இறுதியில் நீண்டொலித்தால் அவைகளை ஹஸிதமென்பர். (உ-ம்) ஸா—ரி ரீ—க க கா—ம ம ம மா—ப ப ப ப பா—த த த த த தா—நி நி நி நி நி நி நீ.

திரும்பவும், ஸப்தஸ்வரங்களும் மூன்று தொகுதிகளாகவும், ஒவ்வொன்றும் மூன்று ஸ்வரங்களை யடுத்தடுத்துப்பெற்றும், அங்ஙனம் பெற்றுள்ள ஸ்வரங்களுள் ஒவ்வொரு தொகுதியிலும் வந்துள்ள கடைசி ஸ்வரம் அடுத்த தொகுதியின் முதல் ஸ்வரமாக அமைந்தால் அதை ஸந்திப்ரச்சாதனம் என்று கூறுவர். (உ-ம்) ஸரிகா—கமபா—பதநீ.

முடிவாக மேலே கூறிய மூன்று தொகுதிகளினின்றும் மத்ய ஸ்வரங்களை எடுத்துவிட்டு அமைப்பதால், உண்டாகும் இரண்டு ஸ்வரங்களடங்கிய தொகுதிகளின் கடைசி ஸ்வரமானது அடுத்து வருகிற தொகுதிக்கு முதல் ஸ்வரமாகி வருவது ஆக்ஷிப்தமாகும். (உ-ம்) ஸகா-கபா-பநீ.

இங்ஙனம் கூறிய ஏழுவகைகளையும் அவரோஹியிலும் அநுஸரித்துக் கண்டுகொள்ளலாகும். (சூஉ-சூசூ)

### ஸஞ்சாரியின் பதின்மூன்று வகைகள்

ஸஞ்சாரி பதின்மூன்று (13) வகைப்படும். ஸப்த ஸ்வரங்களுள் ஒவ்வொன்றும் முந்தியஸ்வரத்துடன் தொடரப்பட்டால் அவற்றை ப்ரஸாதம் என்பர். (உ-ம்) ஸரிஸ—ரிகரி—கமக—மபம—பதப—தநித.

முதலிருஸ்வரங்களும் ஸ்வபாவத்தில் ஏறியிறங்கவும், இதைப்போன்றே மற்ற ஸ்வரங்களும் தனித்துத் தொகுதிகளாக ஏறியிறங்கவும், இவற்றுள் முதற்றொகுதியின் பெயர் ப்ரேங்கமாகும். (உ-ம்) ஸரிரிஸ—ரிககரி—கமமக—மபபம—பததப—தநிநித.

ஒன்று (1), மூன்று (3), இரண்டு (2) என்ற கிரமத்திலே முதல் தொகுதியில் ஸ்வரங்கள் அமைந்

திருக்க ஒவ்வொரு தொகுதியையும், இருமுறை யனுஸரிப்பதில் பின்னதின் முதலீற்றில் தொகுதியின் முதல் ஸ்வரம் அமைய விட்டு விட்டு அமைந்திருப்பது ரஞ்சித மாகும்.

(உ-ம்) ஸகரி—ஸகரிஸ / முதல் தொகுதி

— ரிகம—ரிமகரி / இரண்டாம தொகுதி — கபம—கபமக / மூன்றும் தொகுதி —

மதப—மதபம / நான்காம் தொகுதி — பநித—பநிதப / ஐந்தாம தொகுதி.

ஓர் இசையில் ஸ்வரங்கள் மும்மூன்றாகப் பொருந்தவும், இவ்விதத் தொகுதிகளுள் ஒவ்வொன்றும் தத்தம் முதல்தொகுதியின் முதல் ஸ்வரத்தை விடுத்தும் அமைவது ஆக்ஷேபமாகும். (உ-ம்) ஸரிகா-ரிகமா—கமபா—மபதா—பதநீ.

ஒன்று (1), மூன்று (3), நான்கு (4) என்ற முறையில் இரண்டாம் ஸ்வரத்தை விட்டு அமைப்பதில் ஒவ்வொரு தொகுதியையும் அடுத்து வருகிற தொகுதிகளிலே முதல் தொகுதியின் முதல் ஸ்வரத்தை விட்டு விட்டு அமைப்பதே பரிவர்த்த மாகும். (உ-ம்) ஸகமா—ரிமபா—கபதா—மதநீ.

ஒவ்வொரு ப்ரஸாதத் தொகுதியிலுள்ள மூன்று ஸ்வரங்களும் முறையே ஒன்று (1), இரண்டு (2) ஒன்றுடன் கூட அதிகப்படியாக மூன்று (3) ஒன்றின் (1) ஸங்கியையுள்ள ஸ்வரங்களைச் சேர்த்தால் அஃது கூஜிதமாகும். (உ-ம்) ஸரி ஸகஸ—ரிக ரிகரி—கம கபக—மப மதம—பத பநிப.

ஒன்று (1), இரண்டு (2), மூன்று (3) என்ற ஸங்கியை முறையில் இரண்டாம் ஸ்வரத்தைத் தொகுதிகளின் கடையில் சேர்ப்பதுடன் ஒவ்வொரு

தொகுதியிலுமுள்ள முதல் ஸ்வரம் காணப்படாது பொருந்துவது உத்வாஹிதமாகும்.(உ-ம்) ஸரிகரி—ரிகமக—கமபம—மபதப—பதநித.

முதலிரு ஸ்வரங்களாக ஆரோஹியில் அமைத்தும் பஞ்சமஸ்வரத்திலிருந்து அவரோஹியில் நான்கு அதிகப்படியான ஸ்வரங்களைச் சேர்த்தும் தொகுதிகளாக அமைப்பதில் ஒன்றின் முதல் ஸ்வரம் மற்றொன்றில் வராமல் கணிப்பது உத்கட்டிதமாகும். (உ-ம்) ஸரி பமகரி—ரிக தபமக—கமநிதபம.

முதல் தொகுதி இரு ஸ்வரங்களைப்பெற்றும், அடுத்த ஒவ்வொரு தொகுதியும் ஒவ்வொரு ஸ்வரத்தை அதிகமாகப் பெற்றும் ஆரோஹண அவரோஹண முறையிலே தத்தம் முதல் ஸ்வரத்தை முடிவில் பெற்றும் காணப்படுவது ஹ—ங்காரமாகும்.(உ-ம்)ஸரிஸ—ஸரிகரிஸ—ஸரிகம கரிஸ—ஸரிகம பமகரிஸ—ஸரிகம பதபம கரிஸ—ஸரிகம பதநித பமகரிஸ.

ஒன்று இரண்டு மூன்று நான்கு என்ற எண்களின் கிரமத்திலே ஸ்வரங்களைத் தொகுப்பதில் இரண்டு மூன்று என்ற எண்களுள்ள ஸ்வரங்களை வரிசைமாற்றி யமைப்பதும், ஆரோஹி, அவரோஹி இவ்விரண்டிலும் முற்றொகுதியின் முதல் ஸ்வரம் விட்டு அமைப்பது ஸ்கலிதமாகும். (உ-ம்) ஸகரிம, மரிகஸ—ரிமகப, பகமரி—கபமத, தமபக—மதபநி, நிபதம.

ஒவ்வொரு தொகுதியிலும் மூன்று பகுதிகளிலிருக்க முதல் பகுதியில் இரண்டு ஸ்வரங்களும், மூன்றாம் பகுதியில் நான்கு ஸ்வரங்களும் ஒரே க்ர

மத்திலே வர முற்றொகுதியின் முதல் ஸ்வரத்தை விடுத்து அமைவது க்ரமமாகும். (உ-ம்) ஸரி ஸரிக ஸரிகம—ரிக ரிகம ரிகமப—கம கமப கமபத—மப மபத மபதநி.

ஸம்வாதிகளைக் கொண்ட இரண்டு இரண்டு ஸ்வரங்களாலான நானுவகையான தொகுதிகளுக்கு ச்யேகம் என்ப. (உ-ம்) ஸபா—ரிதா—கநீ—மஸா.

முடிவாக முதற்றொகுதியில் ஒன்று மூன்று இரண்டு ஒன்று என்ற முறையிலே ஸ்வரங்கள் அமைய ஏனைய தொகுதிகளிலும் முற்றொகுதியின் முதல் ஸ்வரம் ஒழிய இயற்றுவது ஹ்ராதமான மாகும். (உ-ம்) ஸகரிஸ—ரிமகரி—கபமக—மதபம—பநிதப. இந்த ஸஞ்சாரி வகைகளை அவரோஹியி னின்றும் அமைத்துக் கொள்ளலாம். (சுஎ-எஎ)

### அலங்காரத்தினுடைய மற்றுமிருவகைகள்

எல்லா ஸ்வரங்களையும் கிரமத்தில் ஒன்றி லிருந்து எட்டு வரையில் ஆரோஹியில் பாடி முடிவில் முதல் ஸ்வரத்தை மீண்டும் பாடுவதைத் தாரமந்த் ரப்ரஸந்நம் என்பர். (உ-ம்) ஸ்ரிகமபதநிஸஸ். (எஅ)

ஷட்ஜத்தையும் அதன் ஸ்தாயியையும் பாடிய பின்னர் மற்ற ஸ்வரங்களை அவரோஹியாகப் பாடுவது மந்த்ரதாரப்ரஸந்நமாகும். (உ-ம்) ஸ்ஸநி தபமகரிஸ். (எகூ)

தனித்துக் குறிப்பிட்ட இவ்விருவகைகளினும் மேலே கூறியபடி முன் தொகுதியின் கடைசி ஸ்வரத்தை விடப்பட்டவைகளாக அமைக்கப்படு கின்றன. இங்ஙனம் கூறப்பட்டவைகளில்

மொத்த ஸங்கியை முப்பத்து நான்கு (34) எனினும் இவைகள் முடிவில்லாததாகும். (௨0)

### அலங்காரத்தின் இன்றியமையாமை

இந்த முப்பத்து நான்கு அலங்காரங்களு மின்றேல், இனிமையும், ரஞ்சனையுமுடைய ஸ்வரங் களையும், அவற்றின் உண்மை இயல்புகளையும், அவற்ருல் தொடுக்கப்பட்டத் தொகுப்புக்களையும் அறிந்து அனுபவிக்க முடியாதது ஆகும். ஆகையால் ஸங்கீதத்தை அப்பியாஸம் செய்கின்ற ஒவ்வொருவரும் அவற்றை அறிந்து கற்பது அவசியமாகும். (௨௧)

### க்ரஹம் (எடுப்பு) அம்சம் (ஜீவன்) ந்யாஸம் (முடிவு)

ஒரு ராகத்தின் முதல் ஸ்வரம் க்ரஹமாகும் (எடுப்பு). ஒரு ராகத்தின் இனிமையை எடுத்துக காட்டத் துணைபுரியும் ஸ்வரம் அம்சமாகும் (ஜீவன்). ஒரு ராகத்தின் கடைசியில் நின்று அந்த ராகத்தை முடிக்கும் ஸ்வரம் ந்யாஸமாகும் (முடிவு). இவை எல்லா ராகங்களிலும் இன்றியமையாது இருப்பவை களாகும்.

இவ்விதம் ஸ்ரீஸோமநாதரியற்றிய "ராகவி போதம்" என்ற நூலின் 'ச்ருதி, ஸ்வரங்கள்' என்ற முதல் விவேகம் இவண் முற்றும்.

## இரண்டாம் விவேகம்

### வீணை

ராகங்களை நன்கு உணர்ந்து கொள்ளும் பொருட்டு அவ்வற்றின் இயல்புகளை நான் 'மேளங்கள்' என்ற மூன்றாவது விவேகத்தில் விளக்கப் போகிறேன். ஆனால் இப்பொழுது ராகங்களைத் தெள்ளிய முறையிலே தெரிவிக்கத் துணை புரிவதும், ஸ்ரீருத்ரமூர்த்திக்குப் பிரியமுள்ளதுமான ருத்ரவீணையின் இயல்பையும், அதனுடைய அமைப்பையும் விளக்குவாம். (௧)

### வீணையின் அமைப்பு

தண்டம் (நெடுஞ்சட்டம்) சிவபெருமான் ஆவர்; தந்து (கம்பிகள்) கௌரீதேவியாவள்; ககுபம் (வீணையின் முடிவிலுள்ள மரத்துண்டு) ரமாபதியாகிய விஷ்ணு ஆவர்; பத்ரிகா (தண்டத்தின் மீது செல்லும் கம்பிகளைச் சுமக்கும் இரும்புத் துண்டு) ஸ்ரீதேவியாவள்; தும்பம் (தண்டத்தைச் சேர்ந்தகுடம்) ப்ரம்ஹதேவராவர்; நாபி (வட்ட வடிவான மரத்தண்டோ அன்றி இரும்புத் துண்டோ குடத்தை நெடுந்தண்டத்துடன் இணைப்பது) ஸரஸ்வதிதேவியாவள்; தோரகம் (கம்பிகளை இறுக்கும் பிருடைகள்) அஹிபன் (ஸர்ப்பராஜன் ஆதிசேஷன்) ஆவன்; ஜீவன் (பஞ்சு, பட்டு, கம்பளம் இவற்றின் துணுக்குகள். இவைகள் நாதத்தை எழுப்பவல்லவை) சந்திர பகவான் ஆவர். ஸாரிகா (நெடுந்தண்டத்தின் மீது இரும்பாலான ஸ்வரக்கட்டைகள்) ஸூரிய

பகவானைக் குறிப்பனவாம். இங்ஙனம் வீணையானது தேவர்களுடைய அங்கங்களாக (அவயவங்களாக) இருப்பதால் பெருகிய பாபத்தையும் அகற்றக் கூடிய சக்தியையுடையதாம். (உ,ரு)

**வீணையின் இன்றியமையாமை**

வேதவிதிப்படி, 'அச்வமேதமென்னும் யாகத்திலே இரண்டு பிராம்ஹணர்கள் வீணையினை வாசிக்கவொரு பிராம்ஹணர் பாடுவது அறமாகும்' என்பர். வீணைவாதனத்தின் கவர்ச்சியுற்ற கொற்றவன், வைணிகன் விரும்பும் பொருளை நல்குவதில் பின்னடையான். (இவ்வுலக இன்பத்தையருளும்) காமத்தை வீணை மகளிர்பால் செய்விக்கின்றது. என்னையோவெனின்? வேதமுறைப்படி மகளிர் வைணிகனால் வசீகரிக்கப்பட்டு வீணையின் இன்பத்தை எய்துகின்றனர். மஹர்ஷி யாஞ்ஞவல்கியரும் தமது ஸ்மிருதியிலே; 'வீணையைச்சாதனம் செய்யும் ஒவ்வொரு வைணிகனும் வீடுபேற்றினைப் பெறத்தகுதியுள்ளவன் ஆவன்' எனக் கூறுகிறார். ஆகையால் வீணை மானிடப்பிறவிக்குரிய நாற்பெரும் பயனை (தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம்) யும் நல்குவதால் மற்றுள்ள எந்த வாத்தியங்களைக் காட்டிலும் உயர்ந்ததேயாகும். மேலும் வீணை தனது ஸ்வரக் கட்டைகளிடத்து உண்டாகும் இனிய த்வனிகளை (நாதங்களை)ப்பொழிவதுடன் ஸ்வரங்களின் ஞானத்தை எளிதிலும் விரைவிலும் புலப்படுத்துகின்றது. இம்மையிலும் மறுமையிலும் எய்தப்பெறாத இன்பத்தைப் பெறவும் ஸ்ரீருத்ரன் விரும்புவதும், நாரதர் முதலான இசைவல்லுநர்களால்

முயற்சியுடன் பயிலப்பட்டதும், ச்ருதிஸ்மிருதிகளால் புகழப்பட்டதுமான வீணையைச் சாதுக்கள் பயிற்சி செய்யக் கடவர். (சா-எ)

**ஸ்ரீருத்ரவீணையும் அதை அமைக்கும் விதமும்**

தண்டம் (மேரு) பதினொன்றரை (11½) பிடி (முஷ்டி) யளவு நீளம் இருத்தல் வேண்டும். அதன் கோடியிலிருந்து ஐந்து அங்குல தூரத்தில் அசையக்கூடிய பிருடைக் காகத்தகுந்த திருகுத்வாரம் இருத்தல் வேண்டும். அதன் மேலே கம்பிகள் செல்லுமாறு ஒரு சிறிய பரிப்பு (குதிரையென வழங்குவது) அமைந்திருத்தல் வேண்டும். தண்டத்தின் கோடியிலிருந்து ஆறுவது அங்குலத்தில் அசைவற்ற ஒரு பிருடையிருக்கவேண்டும். இதன் த்வாரம் மிகவும் ஜாக்கிரதையாகவும், தகுந்த அளவுடனும் செய்யப்படுதல் நல்லது. இதற்கப்பால் ஒரு அங்குல தூரத்தில் ககுபத்தைப் (முடிவிலுள்ள மரத்துண்டு) பொருத்தவேண்டும். ககுபத்திற்கு ஒரு அங்குலத்திற்கப்பால் கீழாக ஒரு குடம் பொருத்த வேண்டும். முதல் குடத்திலிருந்து இரண்டாவது குடம் இருபத்தெட்டு அங்குல தூரத்தில் மற்றொரு கோடியில் அமைக்கவேண்டும். தண்டத்திற்கும் இரு குடங்களுக்குமிடையே இரு நாபிகள் (வட்டமான இரும்புத்துண்டோ, மரத்துண்டோ) பொருத்தப்பட வேண்டும். இவை மூன்றங்குலம் உயரம், மூன்றங்குலம் அகலம் உள்ளவையாயிருத்தல் வேண்டும். அத்துடன் நடுவில் செங்குத்தான த்வாரத்தைப் பெற்றிருத்தல்வேண்டும். தண்டத்தின் மற்றொரு முடிவில் வழவழப்பாகவும் நான்கு அங்குல உயரமும்,

நான்கு அல்லது ஐந்து அங்குல அகலமும் கொண்டதும் தண்டத்தின் சமமட்டத்திற்கு இரண்டங்குல உயரத்தில் ஒரு ககுபத்தைப் பொருத்துதல் வேண்டும். அதன் முகப்பை வீணைக்குள் செலுத்தி அதன் இறகுகள் போன்ற பாகங்களை வீணையின் பக்கங்களிலே பொருத்திப் பரந்திருக்கும்படி செய்யவேண்டும். தந்திகளைப் பற்றக்கூடிய சிறு உலோகக்கொக்கிகளையும் அது பெற்றிருக்க வேண்டும். வாசிப்பவரின் வலப்புறத்தே நான்காம் தந்திக்குக் கீழே மேருவைக்காட்டிலும் கொஞ்சம் உயரமாக 'பத்ரிகா' என்ற இலைபோன்றுள்ள உலோகத்துண்டை அமைக்க வேண்டும். அதன் பக்கங்களில் ஒன்றைவிட மற்றொன்று சிறிது உயர்ந்திருக்கும்படி வேறு மூன்று பத்ரிகளை அமைக்கவேண்டும். பத்ரிகைக்கும், தந்திகளுக்குமிடையில் இனிய நாதத்தை இயற்றவல்ல மூங்கிற் சிம்புத்துண்டுகளைப் பொருத்துதல் வேண்டும். மேருவில் அகலத்தில் அவைகளை ஸாரிகைகள் பெற்றிருத்தல் வேண்டும். 'பட்டி' என்ற மரத்துண்டு தண்டத்தின் பரப்பு மீது குறைந்தபக்ஷ அளவான பத்து ஸாரிகைகளைப் பெற்றிருக்கும் வண்ணம் பதினெரு அங்குல நீளத்தில் இருத்தல் வேண்டும். இந்தப்பட்டி இரண்டாவது குடத்தின் உச்சிவரைதான் பரவியிருத்தல் வேண்டும். பஞ்சு அல்லது பட்டு நூல்களின் முப்பிரியை ஒன்றாக முறுக்கித் தந்திகளை இறுக்க உபயோகிக்க வேண்டும். குடங்களையும் மற்றவைகளையும் பொருத்துவது எங்ஙனம்? உற்று நோக்கியுணர்ந்த அறிவும், அனுபவமும் மிகுதியும் வேண்டும். இந்தத் தொரணையிலே நிர்ணயிக்

கப்பட்ட ஒரு வீணையே பிரஸித்தி பெற்ற ருத்ர வீணையாகும். (அ-கச)

### ருத்ரவீணையின் நான்கு வகைகள்

ருத்ரவீணையானது இருவகைப்படும். என்னையோ வெனில்? சுத்தமேளவீணை; மத்தியமேளவீணை என்றாராகலின். முற்கூறிய இருவீணைகளும் இரண்டிரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை முறையே அகிலராகமேளம்; ஏகராக மேளம் என்ப.




இவற்றுள் முதல் வகையாகிற அகிலராக மேளத்தில் வீணையின் தடைவரம்புகள்* யாவும் மந்த்ர, மத்ய, தாரஸ்தாயிகளிலுள்ள ஸகலராகங் களின் ஸ்வரங்களையெல்லாம் உண்டாக்கவல்லவை இரண்டாவது வகையாகிற ஏகராகமேளமோ, குறித்த ராகத்தின் குறித்த ஸ்வரங்களையே தனித்துக் காட்டவல்லதும், அசையும் ஸ்வரக் கட்டைகளையுடையதும், ராகங்களின் மாறுதலைச் காட்டவல்லதும் ஆகும். இக்காலத்தில் அனுப வத்திலுள்ள சுத்தமேளவீணையைப்பற்றி இனி விளக்குவாம். (கரு-கஎ)

* ஸ்வரக்கட்டைகள்.

### சுத்த மேளவீணை

நன்கு அமைந்த மேருவின் மீது நான்கு கம்பிகளையும் முறையே அடர்த்தியாகப் பொருத்தப்பட்டிருக்கவேண்டும். வீணையின் வலப்புறத்திலே கிரமமான அடர்த்தியில் இன்னும் மூன்றுகம்பிகளை அமைக்கவேண்டும். மேருவின்மீது செல்லும் நான்கு கம்பிகளுள் முதற்கம்பி வாசிப்பவரின் இடககரத்தின் விரல்களின் பிடிப்புக்கு எட்டும் தூரத்திலே அமைக்கப்படவேண்டும். (கஅ)

முதல் தந்தி மந்த்ரஸ்தாயியின் கீழாகவுள்ள அநுமந்த்ரஷட்ஜத்தையும், இரண்டாவது தந்தி அநுமந்த்ரபஞ்சமத்தையும், மூன்றாவது தந்தி மந்த்ரமத்யமத்தையும், ஒலிக்கும்படியாக இழுத்துக் கட்டவேண்டும். (கசு)

பக்கக்கம்பிகள் மூன்றினுள் முதற்கம்பி(கோடியிலுள்ளது) மந்த்ரஷட்ஜத்தையும், இரண்டாவது தந்தி (நடுவிலுள்ளது) மந்த்ரபஞ்சமத்தையும், மூன்றாவது தந்தி (கடைசியிலுள்ளது) மத்யஷட்ஜத்தையும் உண்டாக்க வல்லவைகள். இவை மூன்றும் சுருதிகள் எனப்படும். இம்மூன்று தந்திகளும் முறையே மந்த்ரஷட்ஜத்தையும், இவ்விரண்டினுள் மத்யஷட்ஜத்தையும் அல்லது மந்த்ர, மத்ய, தாரஷட்ஜத்தையும் உண்டாக்கின போதிலும் அவைகளையும் சுருதிகள் என்றே கூறுப.
(உ0-உக)

முதல் தந்தி அல்லது அநுமந்த்ரஷட்ஜத் தந்தியின் கீழே, கீழ்க்கண்ட சுருதிகளை எழுப்பக் கூடியனவாய் ஆறு ஸ்வரககட்டைகளை அமைக்க வேண்டும். அவையாவன: சுத்தரிஷபம்; சுத்த

காந்தாரம்; ஸாதாரணகாந்தாரம்; மிருதுமத்யமம்; சுத்தமத்யமம்; மிருது பஞ்சமம் என்ப. (உஉ)

இரண்டாவதாகிய அநுமந்த்ரபஞ்சமத்தந்தியின் கீழாக முற்கூறியவாறே ஆறு ஸ்வரக்கட்டைகளைக் கீழ்க்கண்ட ஸ்வரங்களை எழுப்புமாறு அமைக்கப்படவேண்டும். சுத்த தைவதம்; சுத்த நிஷாதம்; கைசிக நிஷாதம்; மிருது ஷட்ஜம்; சுத்த ஷட்ஜம்; சுத்தரிஷபம் என்ப அந்த ஸ்வரங்கள். (உங)

இவற்றுள் சுத்தஷட்ஜம், சுத்தரிஷபம் என்ற இரண்டு ஸ்வரங்களும் அங்கீகரிக்கத்தக்கதல்ல. ஏனெனின் இவ்விரண்டு ஸ்வரங்களும் மூன்றாம் தந்தியிலும் ஒலிப்பன. இனி மூன்றும் தந்தியாகிற மந்த்ரஷட்ஜ தந்தி அநுமந்த்ர ஷட்ஜதந்தியில் உண்டாகும் அதே ஸ்வரங்களை உண்டாக்க வல்லது. (உச)

முன்கூறிய ஆறுஸ்வரங்களுள் சுத்தமத்யமம், ம்ருது பஞ்சமம் இவையிரண்டும் விடப்படவேண்டும்; ஏனென்றால் அவற்றையே மீண்டும் நான்காவது தந்தி உண்டாக்குகின்றது. உண்மையிலே நான்காவதாகிற மந்த்ரமத்யமதந்தியின் கீழ் முற்கூறிய ஆறு ஸ்வரக் கட்டைகளிலே கீழே விவரிக்கும் ஸ்வரங்களைத் தோற்றுவிக்கலாம். (உரு)

முதல் இரு ஸ்வரககட்டைகள் மிருதுபஞ்சமத்தையும், சுத்தபஞ்சமத்தையும், மூன்றும் ஸ்வரக்கட்டையை விடுத்து நான்காவது ஸ்வரக கட்டையில் சுத்ததைவதத்தையும், ஐந்தாவது ஸ்வரக்கட்டையிலே சுத்தநிஷாதத்தையும், ஆறாவது ஸ்வரக்கட்டையிலே மிருதுஷட்ஜத்தையும்

ஒலிக்கச் செய்யவேண்டும். இப்பொழுது கைசிக நிஷாதத்தை த்வநிக்கச் செய்ய ஏழாவதாக ஒரு ஸ்வரக்கட்டை வேண்டும். மேருவின் மீதும் ஸ்வரக்கட்டைகளின் மீதும் செல்லும் இந்நான்கு தந்திகளால் முற்கூறியவாறு முறையே உண்டாகும் ஸ்வரங்களின் இயல்புகள் என்னல் விவரிக்கப் பட்டன. (உசு, உஎ)

### மீண்டும் ஸம்வாதித்வத்தின் கொள்கைகள்

ஸம்வாதிஸ்வரங்களின் சேர்க்கையானது நியாயப்பிரகாரம் கேட்கச் செவிக்கினிமை பயப்பனவேயாம். ஆகையினலே சார்ங்கதேவர் முதலான பலராலும் ஸம்வாதித்வம் சிந்தனை செய்யப்பெற்றும் குறிக்கப்பட்டும் உள்ளன. (உஅ)

மேரு ஸ்வரக்கட்டைகள் இவற்றினிடையே உண்டாக்கப்படுகின்ற ஷட்ஜம், பஞ்சமம், மத்யமம் என்ற இவைகளும், மற்றுமுள்ள இசைகுறிகளும் அனேகமாக ஸம்வாதிகளாகும். ஏனெனில் மேலே கூறிய இரு ஸ்வரங்களினிடையே பன்னிரண்டு அல்லது எட்டுச்ருதிகள் உள்ளன. (உகூ)

### ஸ்வயம்பு அல்லது தான்தோன்றிகள்

சாஸ்திரத்திலே ஷட்ஜத்திற்கும், பஞ்சமத்திற்கும், மத்யமத்திற்கும் மற்றும் இவற்றிற்குத் தனித் தனியே இன்ன ச்ருதிகள் அமைவன எனக்குறிப் பிடப் பட்டிருந்த போதிலும், அவை சருதிகளோ டமைந்த ஸ்வரங்களோடல்லாமல் ஸ்வயம்புக்களும் (தான்தோன்றிகள்) ஆகும். (௩௦)

பிரயத்தினத்திலே பெறப்படும் ஸ்வரங்களைப் போல் அல்லாமல் அவை யாதொரு செய்வினையு மின்றி ஸ்வதந்திரத்தில்ஒலிக்கக்கூடியவையாதலின்

அங்ஙனம் கூறலாம். இவைகளையே ஸ்வயம்புக்கள் என்பார்கள். இக்காரணத்தை இனி விளக்குவாம். நான்காவது தந்தியிலே இரண்டாவது ஸ்வரக் கட்டைக்கு மேலே, ஸ்வரகட்டைக்கும் தந்திக்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லாமலே ஸ்வதந்திரமாகவே இனிய நாதமொன்று மந்த்ரபஞ்சமமே போன்று கேட்கப்படுகின்றது. அந்த மந்த்ர பஞ்சமம் ஸ்வயம்புவே யாகும். அதே போல மத்யஸ்தாயியிலுள்ள ஷட்ஜம், மத்யமம் இவ்விரு ஸ்வரங்களும் ஸ்வயம்புக்களேயாகும். மேலும் அதே நான்காவது தந்தியில் எட்டு, அதிலேயே உள்ள பதினொன்று இவ்விரு ஸ்ரக்கட்டைகளின் மீதும் ம்ருதுவாகத் தொட்டாலே மற்றும் இனிய நாதங்களிரண்டு முன்னதைப் போன்று உண்டாகின்றன. இவைகளிலிருந்து தந்திகளால் விடப்பட்டவைகளும், ஷட்ஜபஞ்சம ஷட்ஜமத்யம ஸ்வரங்களே போல இனிய த்வனியைக் கொடுக்கவல்ல ஷட்ஜ பஞ்சம ஷட்ஜமத்யம ஸ்வரங்கள் ஸ்வயம்புக்களாகும் எனப்பெறப்படும். (௩௧, ௩௨)

சாஸ்திரத்திலே இடம் பெற்றுள்ள ரிஷபம், தைவதம், ரிஷபம்ருதுபஞ்சமம் முதலான மற்றவைகளும் (காந்தாரநிஷாத காந்தாரபஞ்சமம் போன்றவை) மூலக்கொள்கையிலுள்ள ஷட்ஜம், பஞ்சமம், ஷட்ஜமத்யமம் போன்று ஒலிகக வல்லவாதலின் அவைகளும் ஸ்வயம்புக்களேயாம். முதல் மூன்று தந்திகளுக்குக் கீழே எட்டாவது ஸ்வரக் கட்டைக்கு மேலே தோன்றுகிற மூன்று இனிய ஸ்வரங்களை ஸாதாரணமாக மூன்று தந்திகளையும் எட்டாவது ஸ்வரக் கட்டையின் மீது அழுத்திவிட ஒலிக்கும். இவை பஞ்சமகாந்தார பஞ்சமம் போன்றே ஒலிப்

பனவாம். இவற்றுட்சில ஒரு ச்ருதிக்குக் குறை வாகவோ அதிகமாகவோ இருத்தலின் முற்குறித்த ஸ்வயம்பு ஸ்வரக் கட்டைகளினிடையே பிழை யுடையன எனக்கணிக்கப்பெறவில்லை. (௩௩, ௩௪)

மத்யஸ்தாயியில் ஸ்வரஸ்வரூபத்தைப் பெற்று, இடம் பெற்ற ஸ்வரங்களுக்குக் கிரமத்திலே தொடர்புள்ள அநுமந்த்ர, மந்த்ர, தாரஸ்தாயிகளி லுள்ள அந்தஸ்வரங்கள், ஸ்வரங்களில் தேர்ந்த பிரக்ஞை யுடையவர்களால் உண்மையாக உறுதி செய்யப் பட்டுள்ளன. மேலே கூறிய ஆதார விளக்கம் எனது அனுபவம், சிந்தனை இவற்றின் முடிபாகும். (௩௫)

## மீண்டும் சுத்தமேளவீணை.

அனுமந்த்ர மந்த்ர ஸ்தாயிகளில் மேருவிலும் ஸ்வரக் கட்டைகளிலுமாகப் பன்னிரண்டு ஸ்வரங் கள் உண்டாக்கப் படுகின்றன. சில தொடர்புள்ள ஸாரிகைகளின் எண்ணிக்கைகளே இத்தகைய ஸ்வரங்களை மத்யதாரஸ்தாயிகளில் தத்தம் அளவுக ளுக்கேற்பவுள்ள ச்ருதிகளுடன் முறையே தோற்று விக்கின்றனவாம். (௩௬)

தேவையுள்ள ஸ்வரக் கட்டைகள் பதினான் கெனச் சிலர் கூறுகின்றனர். பெரும்பான்மை யோர் அதிதாரஷட்ஜத்தைத் தோற்றுவிக்க மற்று மொரு ஸ்வரக்கட்டை அவசியம் சேர்க்கப்பட வேண்டுமென வற்புறுத்துகின்றனர். மத்யதாரஸ் தாயிகளிலுள்ள ஸ்வரங்கள் நான்காவது தந்தியில் ஜனிக்கும் பொழுதுதான் ஒப்புக்கொள்ளக் கூடிய வையாம். (௩௭)

அந்தரகாந்தாரம், காகலிநிஷாதம், தீவ்ர ரிஷபம், தீவ்ர தைவதம், தீவ்ரதம மத்யமம் இவ்வைந்து ஸ்வரங்களும் பன்னிரு ஸ்வரங்களே போல ஸ்வரக் கட்டைகளைப் பெறுமல் இருக்கின்றன. என்னை காரண மெனிற் கூறுவாம். (௩அ)

ஸாதாரணகாந்தாரம் முதலான மற்ற ஸ்வரங் களை ஸ்வரக்கட்டைகளிடத்தில் தோற்றுவிக்கும் பொழுது தந்தியைச் சிறிது அப்பால் இழுத்தால் (அதன் த்வநி அதிகரிக்கும் வண்ணம்) ச்ருதிகள் ஸ்தாயிகளில் வலுக்க பிரச்னையிலுள்ள பஞ்ச ஸ்வரங்களும் நிலைபெற்று விடுகின்றன. இதி லிருந்து தான் மேலே கூறியவைகளைப்பற்றி பிரஸ்தாபம் செய்யப்பட வில்லை. (௩௯)

மத்யஸ்தாயியிலுள்ள நான்காவது தந்தியில் நிஷாதத்தை யுண்டாக்கும் ஐந்தாவது ஸ்வரக்கட் டையினிடத்தில் தந்தியைச் சிறிது அப்பால் சுண்டு வதால் கைசிகி காகலி நிஷாதங்கள் ஜனிக்கின்றன எனச் சிலர் சொல்லுகின்றனர். முன்னர் ஆக்ஷே பித்தவரின் கொள்கைக்கிணங்க அதிகப்படியாக ஒரு ஸ்வரக்கட்டையை அமைப்பதென்பது இதனுல் அநாவச்யமென்பது விளங்கும். (௪௦)

அவ்விதமே (கைசிகி நிஷாதத்தைத் தோற்று விக்க ஒரு ஸ்வரக்கட்டையை எங்ஙனம் மறந்து விடப் பட்டுள்ளதோ) அநுமந்த்ரமத்யமம், அநுமந்த் ரஷட்ஜத்தின் ஸ்தானத்தை வஹிக்கும் (அநுமந்த் ரமத்யமதந்தியில் ஜனிக்கின்ற) ஸ்வரங்களுள் மத்ய மத்தையும், ம்ருதுபஞ்சமத்தையும் மட்டில் கிரஹிக் கத்தக்கதாகும். மற்றவைகளோ மீண்டும் அநு மந்த்ரபஞ்சமத்தந்தியிலே தோற்றுவதால் அவை

அநுமந்த்ரமத்யமதந்தியில் விட்டுவிடத் தக்கவையாகும். (சுக)

இயல்பிலும் நாதங்களை யெழுப்புவதிலும் வீணையும் மானிடசரீரமும் ஸமமானவை யென்று சாஸ்திரங்களிலே புகழ்ந்துரைக்கப்பட்ட போதிலும், மானிடசரீரத்தைப் போன்றே மந்தர மத்ய தாரஸ்தாயிகளைப் பெற்றிருக்க வேண்டும். அங்ஙனமிருக்க வீணை அநுமந்த்ரஸ்தாயியை பெற்றிருப்பது என்னையோ? (சுஉ)

அதிஸூக்ஷ்மம் என்ற நாதத்தை நாபிகமலம் (கொப்பூழ்மலர்) பெற்றிருப்பது போல வீணையும் அநுமந்த்ரஸ்தாயிஸ்வரத்தைப் பெற்றிருப்பது முற்றிலும் பொறுத்தமானதுதான் என சாரங்க தேவர் கூறுவர். இதனால் வீணை அநுமந்த்ரஸ்தாயிஸ்வரத்தைப் பெறுவது முற்றும் நியாயமெனவே கொள்ளப்படுகின்றது. (சுங)

**மத்ய மேள வீணை**

முன்பு சொன்ன மற்றொருவகையான மத்யமேளவீணையைப் பற்றி விளக்குவாம். மேருவின் மீது செல்லும் நான்கு தந்திகளுள் முதலாவது தந்தி அநுமந்த்ரபஞ்சமத்தை எழுப்புகின்றது. இரண்டாவது தந்தி மந்த்ரஷட்ஜத்தையுண்டு பண்ணுகிறது. மூன்றாவது தந்தி மந்த்ரபஞ்சமத்தைத் தோற்றுவிக்கின்றது. நான்காவது தந்தி மத்யஷட்ஜத்தை அமைக்கின்றது. பக்கத்திலுள்ள மூன்று தந்திகளும் முறையே முடிவிலுள்ளதில் மந்த்ரஷட்ஜமும்; மத்யமம் முதல் இவ்விரு தந்திகளில் முறையே முடிவிலுள்ளதில் மந்த்ரபஞ்சமமும்; மத்யஷட்ஜமும் தோன்றுகின்றன. ஆறு

ஸ்வரக் கட்டைகளிடத்தில் தோன்றியொலிக்கும் ஸ்வரங்களின் இயல்புகள் யாவும் மற்றப்படிச் சுத்த மேள வீணையினதைப் போலவே தான். ஆனால் அநுமந்த்ரபஞ்சமத் தந்திகள் இரண்டினுள் உள்ள ஷட்ஜமும், ரிஷபமும் மந்த்ரமத்யஷட்ஜத் தந்திகள் இரண்டிலும் மீண்டும் த்வனிப்பதால் அங்கீகரிக்கத் தக்கவையன்று. சுத்த மேளவீணை யிற் காணப்படும் ஸ்வரக்கட்டைகளின் அதிக எண்ணிக்கை மத்ய மேளவீணையில் இல்லை. ஒரு சிலரது அபிப்பிராயப்படி அதிதார ஸ்வரங்களை உண்டாக்க மீதியுள்ள ஸ்வரக்கட்டைகளையும் அமைத்துக் கொள்ளுகின்றனர். (சச-சஎ)

துணிந்துரைக்கக் கூடிய நோக்கங்களின்படி மத்ய மேளவீணையின் முதலாவது தந்திகளிரண்டும் பஞ்சமத்திற்குப் பதிலாக மத்யமத்தைக் கொடுக் கின்றன. இரண்டாவதாகிற மந்த்ரஷட்ஜத் தந்தி யிலேயுள்ள ஐந்தாவது ஆறுவது ஸ்வரக் கட்டை களிடத்தில் தோன்றும் மத்யமும் ; ம்ருதுபஞ்சமமும் நீக்கத் தக்கவைகள். ஏனெனில் அவை மீண்டும் மூன்றுவது தந்தியாகிய மந்த்ரமத்யமத் தந்தியி லுள்ள முதலாவது மூன்றுவது ஸ்வரக்கட்டை களிடத்தில் உண்டாகின்றன. (சஅ)

ஒரு சிலர் மத்ய மேளவீணையின் முதல் மூன்று தந்திகளை விடுத்து மூன்று ஸ்தாயிகளையும் (மத்யதார-அதிதாரம்) அமைக்க நான்காவது தந்தி யின் (மத்யஷட்ஜம்) கீழ் ஸ்வரக் கட்டைகளை அமைப்பர். (சகூ)

ஆனால் அதிதார பஞ்சமத்தை எழுப்பும் ஸ்வரக் கட்டையை முன்னே கூறியவர்கள் விட்டுவிடுகின்

றனர். வீணையின் இடப்புறத்தில் மந்த்ரஷட்ஜத்திற்குத் தோற்றுவாயை அளிக்கவல்ல ஒரு ச்ருதித் தந்தியுள்ளது. மத்யஷட்ஜத்தையும் தாரஷட்ஜத்தையும் முறையே தோன்றச் செய்ய வேறிரண்டு சுருதித் தந்திகள் வீணையின் வலப்பக்கத்திலே அமைந்துள்ளன. (ரு0)

சிலர் வீணையின் தந்தியிலே சுண்டுவதால் அதிதார ஸ்வரத்தைத் தோற்றுவிக்க வேண்டுமென அபிப்பிராயம் கொள்ளுகின்றனர். ஏனெனில் ப்ராசீன இசைவல்லுநர்களால் தெரிவிக்கப்பட்டுள்ள மானிடக்ருத்ரிம நாதத்தை விளக்கிக் காட்டவே என்பர். ஆனல் இஃது வேண்டற்பாற்றன்று. என்னையோ? அதிதாரத்தின் இவ்வகை நாதம் வெறுப்பை யளிப்பதுடன் மகிழ்வற்றதும் கேட்க வினிமை பயக்காததுமாகும். (ருக)

பரந்த உலகிலே புகழ்பெற்றுள்ள மற்றும் சில வீணைகள் உள்ளன. ஆயினும் அவற்றை நான் இங்கு விவரிக்கப்போவதில்லை. ஆனல் ஆதார பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டவைகளும் இங்கு என்னல் கூறப்படாதவைகளுமாயிருப்பினும் அவைகளும் அங்கீகரிக்கத் தக்கனவே யாம். (ருஉ)

இவ்விதம் ஸ்ரீஸோமநாதரியற்றிய 'ராகவி
போதம்' என்ற நூலின் 'வீணையின்
சிறப்பு' என்ற இரண்டாம்
விவேகம் முற்றும்.

# மூன்றும் விவேகம்

## மேளங்கள்

ஸ்வரங்களின் ஆரோஹணக்கிரமத்திலே ஒழுங்குபெற அமைக்கப்பட்ட மேளங்களை இனி விளக்குவாம். மேளங்களின் மொத்த எண்கள் தொளாயிரத்து அறுபது (கூகூ0) ஆகும். தத்தம் சுருதிகளுக்கேற்ப ரிஷபம், காந்தாரம், மத்தியமம், தைவதம், நிஷாதம் என்ற இவை தத்தம் எண்ணிக்கைகளுக்கேற்பத் தாமே பிரித்துக்கொண்டுள்ள பதினைந்து வகைகளில் முற்கூறிய மேளங்கள் அமைவனவாகும். (க)

### (ரி-க-ம-த-நி இவற்றின் பதினைந்து வகைகள்)

ரிஷபம், காந்தாரம், மத்தியமம், தைவதம், நிஷாதம் என்பனவற்றின் வகைகளாவன முறையே வருமாறு :—முதல் மூன்றும் ·ரிஷபத்தின் வகைகள் ; அடுத்த நான்கும்

க உ

| எண்கள் | ரிஷபத்தொகுதி | எண்கள் | காந்தாரத்தொகுதி | எண்கள் | மத்தியமத்தொகுதி | எண்கள் | தைவதத்தொகுதி | எண்கள் | நிஷாதந்தொகுதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க | தீவ்ரரிஷபம் | ச | ஸாதாரணகாந்தாரம் | அ | தீவ்ரதமமத்தியம் | க0 | தீவ்ரதைவதம் | கங | கைசிகிநிஷாதம் |
| உ | தீவ்ரதரரிஷபம் | ரு | அந்தரகாந்தாரம் | கூ | மிருதுபஞ்சமம் | கக | தீவ்ரதரதைவதம் | கச | காகலிநிஷாதம் |
| ங | தீவ்ரதமரிஷபம் | சு | மிருதுமகாந்தாரம் | | | கஉ | தீவ்ரதமதைவதமம் | கரு | மிருதுஷட்ஜம் |
| | | எ | தீவ்ரதரகாந்தாரம் | | | | | | |

காந்தாரத்தின் வகைகள்; பின்புள்ள இரண்டும் மத்தியமத்தின் பிரிவுகள்; பின்னருள்ள மூன்றும் தைவதத்தின் மாறுபாடுகள்; முடிவாகவுள்ள மூன்றும் நிஷாதத்தின் வேறுபாடுகளாம். (உ-௪)

### ஒரு வேண்டுகோள்

* மிருது மத்தியமம் ஸாதாரணமாகக் காந்தாரத்தின் ஒரு வகையேயாகும் என்ப; ‡ மிருதுபஞ்சமமோ மத்தியமத்தின் ஒரு பிரிவேயாகும் என்ப; † மிருது ஷட்ஜமோ நிஷாதத்தின் ஒரு வகையேயாகும்.

(க) ரி
- (க) தீவ்ரரிஷபம்.
- (உ) தீவ்ரதரரிஷபம்.
- (௩) தீவ்ரதமரிஷபம்.

(உ) க
- (௪) ஸாதாரணகாந்தாரம்
- (௫) அந்தரகாந்தாரம்.
- (௬) மிருதுமத்தியமம்.
- (௭) தீவ்ரதமகாந்தாரம்.

(௩) ம
- (௮) தீவ்ரதமமத்தியமம்.
- (௯) மிருதுபஞ்சமம்.

(௪) த
- (௧௦) தீவ்ரதைவதம்.
- (௧௧) தீவ்ரதரதைவதம்.
- (௧௨) தீவ்ரதமதைவதம்.

(௫) நி
- (௧௩) கைசிகிநிஷாதம்.
- (௧௪) காகலிநிஷாதம்.
- (௧௫) மிருதுஷட்ஜம்.†

ஸ்வரங்களுடைய மாறுபாடுகளால் பேதமடைந்துள்ள பதினைந்து வகையான ஸ்வரங்களுடைய வித்தியாஸங்களை இனி விளக்குவாம். சுத்த ரிஷபத்துக்கு முன்னதாகவுள்ளதும், தொடரப்படுவதுமான ஸ்வரம் ஷட்ஜம் ஆகலான் ரிஷபத்தின் மூன்று வகைகளான எந்த ஸ்வரமும் ஷட்ஜத்தை முன்னதாகக் கொண்டு தொடருமென்ப. இனி சுத்தகாந்தாரத்துக்கு முன்புள்ளதும் தொடரப்படுவதுமான ஸ்வரம் ரிஷபம் ஆதலால் காந்தாரத்தின் நான்கு வகைகளுள் எந்த வகை ஸ்வரமும் ரிஷபத்தை முன்னதாகக் கொண்டே தொடரும் என்க. மேலும் சுத்த மத்தியமத்துக்கு முன்னதாக உள்ளதும், தொடரப்படுவதுமான ஸ்வரம் காந்தாரமாதலின் மத்தியமத்தின் இருவகைகளுள் எதுவும் காந்தாரத்தை முற்கூட்டியே தொடரும் என்க. இனித் தைவதத்துக்கு முன்புள்ளதும், தொடரப்படுவதுமான பஞ்சமத்தையே மூவகைத் தைவதங்களுள் எதுவும் முற்கொண்டு தொடரும் என்க. முடிவாக இதே வண்ணம் நிஷாதமும் தனக்கு முன்னதாகவுள்ள தைவதத்தைத் தனது மூவகைகளுள் எந்தவகை நிஷாதமும் முற்கொண்டு தொடர நிற்குமென்க. இவ்விதம் ஸ்வரங்களின் இயல்புகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. இந்த ஸ்வரங்கள் தமக்குரிய சுருதிகளிலோ, அன்றி வேறு ஸ்வர சுருதிகளிலோ, அன்றி வேற்றுச் சுருதி ஸ்வரங்களிலோ லயித்தும் நிற்கும். (கு-எ)

## மேளங்களின் எண்கள்

ரி - க - ம - த - நி என்ற கூட்டங்களின் கீழ் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என்ற வகைகளில் தொடர்ந்து முறையே உள்ள கரு, அசு, உசுக, ஙஎஅ, உககூ இவற்றுடன் மாறுதல் இல்லாத ஷட்ஜம் ஒன்றைச் சேர்க்க மேளங்களின் தொகை தொளாயிரத்து அறுபது (கூகூ0) ஆகும் என்ப. (அ)

| க | உ | ங | ச | ரு | சா | எ | அ |
|---|---|---|---|---|---|---|---|
| எண் | | ஒரு தனிக்க ஸ்வரம் | இரண்டு வேற்று ஸ்வரங்கள் | மூன்று வேற்று ஸ்வரங்கள் | நான்கு வேற்று ஸ்வரங்கள் | ஐந்து வேற்று ஸ்வரங்கள் | பஞ்ச ஸ்வரங்கள் |
| க | தீவ்ரரிஷபம் | க | கஉ | ருங | க0உ | எஉ | ரி |
| உ | தீவ்ரதரரிஷபம் | க | கஉ | ருங | க0உ | எஉ | |
| ங | தீவ்ரதமரிஷபம் | க | கஉ | ருங | க0உ | எஉ | |
| ச | ஸாதாரணகாந்தாரம் | க | அ | உக | கஅ | 0 | க |
| ரு | அந்தரகாந்தாரம் | க | அ | உக | கஅ | 0 | |
| சா | மிருதுமத்தியமம் | க | அ | உக | கஅ | 0 | |
| எ | தீவ்ரதமகாந்தாரம் | க | அ | உக | கஅ | 0 | |
| அ | தீவ்ரதமமத்தியமம் | க | சா | கூ | 0 | 0 | ம |
| கூ | மிருதுபஞ்சமம் | க | சா | கூ | 0 | 0 | |
| க0 | தீவ்ரதைவதம் | க | ங | 0 | 0 | 0 | த |
| கக | தீவ்ரதரதைவதம் | க | ங | 0 | 0 | 0 | |
| கஉ | தீவ்ரதமதைவதம் | க | ங | 0 | 0 | 0 | |
| கங | கைசிகிநிஷாதம் | க | 0 | 0 | 0 | 0 | நி |
| கச | காகலிநிஷாதம் | க | 0 | 0 | 0 | 0 | |
| கரு | மிருதுஷட்ஜம் | க | 0 | 0 | 0 | 0 | |
| | மொத்தம் | கரு | அகூ | உசாக | ஙஎஅ | உகசா | கூருகூ |

## மேளத் தொகுதிகள்

முற்கூறிய பதினைந்து ஸ்வரங்களும் முறையே முதல் இரண்டாவது என்ற கிரமத்திலே குணிதப் (பெருக்க) படுத்தப்பட்டுள்ளன. ஒன்று, இரண்டு மூன்று, நான்கு, ஐந்து ஸ்வரவகைகளுடன் தோன்றிய மேளங்களையும், அவற்றின் தொகுதிகளையும், மொத்த எண்ணிக்கையான எண்பத்தொன்பது (அகூ) முதலான மொத்த எண்களையும் இனி நாம் கூறுவாம்.

மேலே சொல்லப்பட்ட பதினைந்து வகைகளுள் யாதானும் ஒருவகையுடன் தோன்றும் மேளங்கள் தனி ஸ்வரமாகக் கணிக்குமிடத்துத் தொகையில் பதினைந்தேயாகும். பஞ்சஸ்வரங்களின் கீழும் அவற்றை ஒழுங்குபெற அமைக்கவேண்டும். அவ்விதம் வரிசைப்படுத்தும் இடத்தில் ரிஷபம் மூன்று; காந்தாரம் நான்கு; மத்தியமம் இரண்டு; தைவதம் மூன்று; நிஷாதம் மூன்று ஆகமொத்தம் பதினைந்து ஆகும். ஸ்வரங்கள் இரண்டு இரண்டாக அமையுமிடத்து ஒவ்வொரு ரிஷபவகையிலும் பன்னிரண்டு மேளங்களும்; காந்தாரம் ஒவ்வொன்றிலும் எட்டு மேளங்களும்; ஒவ்வொரு மத்தியமத்திலும் ஆறு மேளங்களும்; ஒவ்வொரு தைவதத்திலும் மூன்று மேளங்களும் நாம் பெறுகிறோம். மும்மூன்றுஸ்வரங்களாகக் கணிக்குமிடத்து மேளங்கள் முறையே ரிஷபம் ஒவ்வொன்றுக்கும் ஐம்பத்து மூன்றும்; காந்தாரம் ஒவ்வொன்றுக்கும் இருபத்தொன்றும்; மத்தியமம் ஒவ்வொன்றுக்கும் ஒன்பதும் உள்ளன. நான்கு வகை ஸ்வரங்களாகத் தொடருமிடத்து ரிஷபத்தின் கீழ் வகையொன்றுக்கு பதினெட்டு மேளங்களையும்; காந்தாரத்தின் கீழ

வகையொன்றுக்கு பதினெட்டு மேளங்களையும நாம் காண்கிறோம். ஐந்துவகை ஸ்வரபேதங் களுடன் ஆரம்பிக்கின்ற மேளங்கள் ரிஷபத்தின் கீழே ஒவ்வொருவகைக்கும் எழுபத்திரண்டாகும் என்ப.முற்றெருகுதியின் மொத்தத்திலிருந்து ஐவகை ஸ்வரங்களில் ஏதேனும் ஒருவகைக்கும் (அதன் தன் முற்றெருகுதிவரையில் உள்ள எண்ணத்திலிருந்து) உள்ள மேளங்களின் எண்ணிக்கையைக் கழிக்கப் பின்னத்தின் ஸம்பந்தமுள்ள எண்களைப் பெறு கிறோம்.* (கூ-கஉ)

### மேளங்களின் விரி

மேளங்களின் விரிவின் பொருட்டு (துவங்குகிற முதல் வரிசையாக 'ஒன்று, நான்கு, எட்டு, பத்து, பதிமூன்று' என்ற எண்களை அமைப்போம். முற் கூறிய வரிசையின் எண்ணாகிய பதிமூன்றை பதினைந்துவரையிலும் வரும்படி ஒன்றின் கீழ் ஒன்ருக எண்ணைச் சேர்த்து அதிகரிக்கச் செய் வோம். பதினைந்து என்ற எண் கிடைத்தவுடன் முதல் வரிசையின் முடிவிலிருந்து அடுத்த எண்ணா கிய பத்தை ஒன்றின் கீழ் ஒன்ருக ஒழுங்கு முறை யில் அதிகரிக்கச் செய்யப்படவேண்டும். விருத்தி யடைந்த எண் பன்னிரண்டு ஆனதும், முன் போலவே முதல் வரிசையின் முடிவிலிருந்து மூன்ருவது எண்ணாகிய எட்டை மற்ற எண்களுக்குச் செய்தது போலவே அதிகரிக்கச் செய்யவேண்டும். இந்த எட்டு ஒன்பதையடைந்ததும் முடிவிலிருந்து நான்காவதாகிற நான்கு என்ற எண்ணையும் ஒவ் வொன்ருக அதிகப்படுத்தி ஏழை அடைந்ததும் முடிவிலிருந்து ஐந்தாவதான ஒன்றை ஒவ் வொன்ருக அதிகப்படுத்தி ஒன்றின்கீழொன்ருக

*(பதினைந்து மேளங்கள்) மேளப்ரஸ்தாரம் (விரி)

| மேளங்களின் எண் | ஸ: சுத்த | ரி: சுத்த | ரி: தீவ்ர | ரி: தீவ்ரதர | ரி: தீவ்ரதம | ரி: சுத்த | க: ஸாதாரண | க: அந்தர | ம: ம்ருதும | ம: தீவ்ரதம | ம: சுத்த | ம: தீவ்ரதம | ம்ருதுப | ப: சுத்த | த: சுத்த | த: தீவ்ர | த: தீவ்ரதர | த: தீவ்ரதம | த: சுத்த | நி: கைசிகி | நி: காகலி | ம்ருதுஸ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ௧ | ஸ | | ரி | | | க | | | | | ம | | | ப | த | | | | நி | | | |
| ௨ | ஸ | | | ரி | | க | | | | | ம | | | ப | த | | | | நி | | | |
| ௩ | ஸ | | | | ரி | க | | | | | ம | | | ப | த | | | | நி | | | |
| ௪ | ஸ | ரி | | | | | க | | | | ம | | | ப | த | | | | நி | | | |
| ௫ | ஸ | ரி | | | | | | க | | | ம | | | ப | த | | | | நி | | | |
| ௬ | ஸ | ரி | | | | | | | க | | ம | | | ப | த | | | | நி | | | |
| ௭ | ஸ | ரி | | | | | | | | க | ம | | | ப | த | | | | நி | | | |
| ௮ | ஸ | ரி | | | | க | | | | | | ம | | ப | த | | | | நி | | | |
| ௯ | ஸ | ரி | | | | க | | | | | | | ம | ப | த | | | | நி | | | |
| ௧௦ | ஸ | ரி | | | | க | | | | | ம | | | ப | | த | | | நி | | | |
| ௧௧ | ஸ | ரி | | | | க | | | | | ம | | | ப | | | த | | நி | | | |
| ௧௨ | ஸ | ரி | | | | க | | | | | ம | | | ப | | | | த | நி | | | |
| ௧௩ | ஸ | ரி | | | | க | | | | | ம | | | ப | | | த | | | நி | | |
| ௧௪ | ஸ | ரி | | | | க | | | | | ம | | | ப | | | த | | | | நி | |
| ௧௫ | ஸ | ரி | | | | க | | | | | ம | | | ப | | | த | | | | | நி |

ஒழுங்குபட விருத்தி செய்யவும். இவ்விதம் செய்வது இரண்டு அல்லது அதிகப்படியான ஸ்வரங்களின் விருத்தியடைந்த எண்களை முடிவிட்டதாகும். (கரு-கஎ)

**நஷ்டம்**

கொடுக்கப்பட்ட மேளத்தின் எண்ணிக்கையிலிருந்து அதே வகையின் தொகுதி எண்களை ஒவ்வொன்ருகக் கழிக்கவும். கழித்தல் நின்று கிடைத்தத் தொகுதி எண்ணுடன் தொடங்குகிற துவக்கவரிசையை எழுதிக்கொள்ளவும். ஆரம்பத்திலேயே கழித்தல் கூடாத்தாயின் துவக்க வரிசையை ஒன்றிலிருந்து ஆரம்பிக்கவும். மீண்டும் கிடைத்த மிச்சத்திலிருந்து ஒவ்வொன்ருக முற்கூறிய தொகுதி எண்களின் முன்னதான வகைக்குக் கழிக்கவும். இவ்விதம் செய்வதில் மூன்று விஷயங்கள் கவனிக்கப்படவேண்டும். (க) முதல் தொகுதி எண்ணுக்குச் ஸம்பந்தமற்றதாகவும்; (உ) துவக்க வரிசையில் எழுதப்பட்ட எண்ணுக்குத் தொடருகிற எண் கீழாகாமலும்; (ங) துவக்க வரிசையில் காணப்பட்ட எண்ணிக்கையுடன் அவற்றின் மொத்த எண்கள் ஸமமாக இராமலும் இருத்தல் வேண்டும். தொகுதி எண்களிலிருந்து ஒவ்வொன்ருகக் கழித்த பிறகு கிடைத்தக் கடைசி மிச்ச எண் துவக்கவரிசையிலுள்ள கடைசி எண்ணுடன் ஸமமாகுமாறு இருத்தல் வேண்டும். சுத்தமாக ஒன்ருக ஆகும்பொழுது ஒரு எண்ணிக்கையை அமைத்துக் கொள்ளலாம். முன்னதைக்காட்டிலும் இவ்விதம் அமைக்கும் எண் ஸமமாயில்லாமலும் குறைவில்லாமலும், முன்னதைப்போன்று ஒரே ஸ்வரத்தின் வகையைக் காட்டாமலும் இருத்தல் வேண்டும். (கஅ-உக)

### உத்திஷ்டம்

கொடுக்கப்பட்ட மேளவரிசையை முதல் வரியில் எழுதவும். அதே வகையின் தொடக்கத்தை இரண்டாவது வரியில் எழுதவும். தொடர்புள்ள எண்களின் கீழ் தொடக்கவரியின் மீது குறித்த மேளத்தின் அதிகரிப்புக்கு வேண்டிய எண்ணிக்கையைக் கண்டுபிடிக்கவும். நஷ்டத்தைக் கணக்கிட்டது போலவே அடுத்தடுத்து வருகிற பகுதிகளின் கூட்டு எண்ணிக்கைகளின் எண்ணை அதிகம் குறிக்கும் இவ்வெண்கள் யாவற்றையும் கூட்டுக. முடிவாக ஒன்று முதல் குறித்த மொத்தம் வரையிலும் கூட்டுக. குறித்த மேளத்தின் எண்ணை நாம் பெற்று விடுவோம். இதுவே உத்திஷ்டமாகும். (உஉ-உ௩)

### விடப்பட்ட மேளங்கள்

மேளங்களின் மொத்தத் (௬௬0) தொகையிலிருந்து நூற்றைந்து (௧0௫) மேளங்கள்வரை நீக்கத் தக்கனவாம்; ஏனெனின் ஒரே சுருதியில் தோன்றி இருவகையாயுள்ள ஸ்வரங்களை அவை ஒவ்வொன்றும் பெறுகின்றன. கூடதானங்களுடன், கூடதானங்கள் அல்லாதனவற்றையும் கணக்கிடுகையில் முறைமை செய்தது போல விரிவின் (ப்ரஸ்தாரம்) நிமித்தம் கேவலம் அவைகளும் கணிக்கப்பட்டுள்ளன. (உச)

### ஆசிரியரின் வேண்டுகோள்

முன்னோர்களான இசைவல்லுநர்களால் தெரிவிக்கப்படாத போதிலும் உதிஷ்டம் நஷ்டம் இவற்றுடன் மேளவிஸ்தாரத்தின் முறையை

எனது சொந்த முயற்சியினால் ஏற்ற ஸந்தர்ப்பத்தில் விளக்கியுள்ளேன். ஆகையால் நான் விளக்கியவற்றை மதிப்பற்றதாக ஸங்கீத விற்பன்னர்கள் கருதாமல் அங்கிகரிக்க வேண்டுகிறேன். (உரு)

## இருபத்து மூன்று மேளங்களின் பெயர்கள்

நடைமுறையில் பிரயோகத்தில் உள்ளதும் பிரஸித்தமானதுமான ராகங்களுக்குப் பிறப்பிடமாயுள்ள இருபத்து மூன்று மேளங்களையே நான் விவரிக்கப் போகிறேன். சுத்த ஸ்வரங்களையே கொண்ட ஒன்றும்; ஒவ்வொன்றும் ஒரு விகிருதஸ்வரத்தைக் கொண்டதாகவுள்ள இரண்டும்; இரு விகிருதஸ்வரங்களைக் கொண்டுள்ள ஏழும்; மூன்று விகிருதஸ்வரங்களைக் கொண்டதாக நான்கும்; நான்கு விக்ருதஸ்வரங்களைப் பெற்றுள்ள எட்டும்; ஐந்து விகிருதஸ்வரங்கள் அமைந்துள்ள ஒன்றும்; ஆக இருபத்து மூன்று மேளங்களையும் விவரிக்கப் போகிறேன். இவ்வறுவகைத் தொகுதிகளில் ஒவ்வொன்றின் கீழாகப் பிரிக்கப்பட்டுள்ள சிறு மேளங்களின் எண்ணிக்கை முற்றும் மேலே கூறியவாறில்லை; ஒன்று மற்றொன்றைக் காட்டிலும், சுருதியில் குறைந்தோ அதிகரித்தோ உள்ளன.

இனி முற்கூறிய மேளராகங்களின் பெயர்களைக் கூறுவாம். (க) முகாரீ; (உ) ரேவகுப்தீ; (௩) ஸாமவராளீ; (௪) தோடீ; (ரு) நாதராமக்ரீ; (௬) பைரவம்; (எ) வஸந்தம்; (அ) வஸந்தபைரவீ (௯) மாளவகௌளை; (௧௦) ரீதிகௌளை; (௧௧) ஆபீரநாட்டை; (௧௨) ஹம்மீர்; (௧௩) சுத்தவராடீ; (௧௪) சுத்தராமக்ரீ; (௧௫) ஸ்ரீராகம்; (௧௬) கல்யாணம்; (௧௭) காம்போதீ; (௧௮) மல்லாரி; (௧௯) ஸாமந்தம்; (௨௦) கர்ணாடகௌளை; (௨௧) தேசாக்ஷீ;

(உஉ) சுத்த நாட்டை; (உங) ஸாரங்கம். இவைகளே இருபத்து மூன்று (உங) மேளராகங்களாகும். முகாரீ முதலான இந்த இருபத்து மூன்று ராகங் களையும் அவற்றின் பூரணப்பண்புடன் இனிக் குறிப்பாம். (உகூ-ஙக)

## முகாரீ (க)

முகாரீ மேளத்தில் ஏழு ஸ்வரங்களும் உண்டு; எல்லாம் சுத்தஸ்வரங்களே; முகாரியும், துருஷ்க தோடீ முதலான மற்றவகைகளும் இதனின்று ஜனிக்கின்றன. (ஙஉ)

## ரேவகுப்தீ (உ)

ரேவகுப்தீ மேளத்தில் கீழ்க்காணும் ஆறு ஸ்வரங்களும் சுத்த ஸ்வரங்களாகும். ஷட்ஜம், ரிஷபம், மத்தியமம், பஞ்சமம், நிஷாதம், அந்தர காந்தாரம் ஒன்றே விகிருதமாகும். இதிலிருந்து ரேவகுப்தியும் மற்றவைகளும் உண்டாகின்றன. (ஙங)

## ஸாமவராளீ (ங)

ஸாமவராளீ மேளத்தில் ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்தியமம், பஞ்சமம், தைவதம் இவ்வாறும் சுத்தஸ்வரங்களே. காகலிநிஷாதம் மட்டும் விகிருதஸ்வரமாகும். இதிலிருந்து ஸாம வராளீ, வஸந்தவராடீ முதலியவை உண்டா கின்றன. (ஙச)

## தோடீ (ச)

தோடீ மேளத்தில் ஸாதாரண காந்தாரமும், கைசிகி நிஷாதமுமே விகிருதங்களாம். ஏனைய ஷட்ஜம், ரிஷபம், மத்தியமம், பஞ்சமம், தைவதம்

என்பவை சுத்தஸ்வரங்களாம். இதனின்று தோடி முதலான மற்ற ராகங்கள் தோன்றுகின்றன. (௩௫)

### நாதராமக்ரீ (௫)

நாதராமக்ரீ மேளத்தில் ஸாதாரண காந்தாரமும், மிருதுஷட்ஜமும், விகிருதங்களாகும். மற்ற ஷட்ஜ-ரிஷப-மத்தியம-பஞ்சம-தைவதங்கள் சுத்த ஸ்வரங்களே. நாதராமக்ரீயும் மற்றவைகளும் இதனின்று எழுகின்றன. (௩௬)

### பைரவம் (௬)

பைரவமேளத்தில் ஷட்ஜம், ரிஷபம், மத்தியமம், பஞ்சமம், தைவதம் இவை சுத்தஸ்வரங்கள். அந்தரகாந்தாரமும், கைசிகநிஷாதமும் விகிருதங்களாகும். இதிலிருந்து பைரவமும் பௌரவிகையும் பிறக்கின்றன. (௩௭)

### வஸந்தம் (௭)

வஸந்தமேளத்தில் ஷட்ஜம், ரிஷபம், மத்தியமம், பஞ்சமம், தைவதம் என்பவை சுத்த ஸ்வரங்களாகும். அந்தரகாந்தாரமும், காகலிநிஷாதமும் விக்ருதங்களாகும். இதிலிருந்து வஸந்தா, டக்கை, ஹிஜேஜா, ஹிந்தோளம் முதலியவை தோன்றுகின்றன. (௩௮)

### வஸந்தபைரவீ (௮)

வஸந்தபைரவீமேளத்தில் ஷட்ஜம், ரிஷபம், மத்தியமம், பஞ்சமம், தைவதம் என்ப இவை சுத்தஸ்வரங்களாம். மிருதுமத்தியமமும், கைசிகிநிஷாதமும் விக்ருதஸ்வரங்களாகும். இதிலிருந்து வஸந்தபைரவீ, மாரவீ முதலியவை உதிக்கின்றன. (௩௯)

**மாளவகௌளை (கூ)**

மாளவகௌளைமேளத்தில் ஷட்ஜம், ரிஷபம், மத்தியமம், பஞ்சமம், தைவதம் என்பவை சுத்தஸ்வரங்களே. ஏனைய விகிருதங்கள் மிருதுமத்தியமமும், மிருதுஷட்ஜமுமாம். இதிலிருந்து மாளவகௌளை; சைதிகௌளை; பூர்வீ; பாடீ; தேவகாந்தாரம்; கோண்டக்ரியை; (கௌடக்ரியை) குரஞ்ஜீ; பஹுலீ; ராமக்ரியை; பாவகம்; அஸாவரிகை; பஞ்சமம்; பங்காளம்; சுத்தலலிதை; குர்ஜரிகை பரஜு; சுத்தகௌளை முதலியவை உண்டாகின்றன. (சo-சஉ)

**ரீதிகௌளை (கo)**

இந்த மேளத்தில் ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்தியமம், பஞ்சமம் இவை சுத்த ஸ்வரங்கள். தீவ்ரதரதைவதம், கைசிகநிஷாதம் இரண்டும் விகிருதஸ்வரங்களாகும். அதிலிருந்து ரீதிகௌளை முதலியவை தோன்றுகின்றன. (சங)

**ஆபேரநாட்டை (கக)**

இதில் ஷட்ஜம், மத்தியமம், பஞ்சமம், தைவதம் இந்நான்கும் சுத்தஸ்வரங்களாம். மூன்று விகிருதங்களாக தீவ்ரதரரிஷபம், ஸாதாரணகாந்தாரம், மிருதுஷட்ஜம் என்பவை உள்ளன. இதிலிருந்து ஆபேரநாட்டை முதலானவை உதிக்கின்றன. (சச)

**ஹம்மீர் (கஉ)**

ஹம்மீர்மேளத்தில் ஷட்ஜம், மத்தியமம், பஞ்சமம், தைவதம் என்பவை சுத்த ஸ்வரங்களாகவும், தீவ்ரதரரிஷபமும், மிருதுமத்தியமும், மிருது

ஷட்ஜமும் விகிருதங்களாகவும் உள. அதனின்று ஹம்மீர், விஹங்கடை, கேதாரம் முதலியவை ஜனிக்கின்றன. (சரு)

### சுத்தவராடீ (கரு)

சுத்தவராடீமேளத்தில் ஷட்ஜம், ரிஷபம், பஞ்சமம், தைவதம் நான்கும் சுத்த ஸ்வரங்களே. மற்ற விகிருதஸ்வரங்கள் ஸாதாரணகாந்தாரம், தீவ்ரதமமத்தியமம் மிருதுஷட்ஜம் என்பவைகளாம். இதனின்று சுத்தவராடீ முதலியவை உண்டாகின்றன. (சசு)

### சுத்தராமக்ரீ (கச)

சுத்தராமக்ரீமேளத்தில் ஷட்ஜம், ரிஷபம், பஞ்சமம் தைவதம் என்பவை சுத்த ஸ்வரங்களே. மிருதுமத்தியமும், தீவ்ரதமமத்தியமும், மிருது ஷட்ஜமும் விகிருதங்களாகும். இதிலிருந்து சுத்தராமக்ரீ, லலிதம், ஜைதாஸ்ரீ, த்ராவணீ, தேசீ முதலானவை உண்டாகின்றன. (சஎ)

### ஸ்ரீராகம் (கரு)

ஸ்ரீராகமேளத்தில் ஷட்ஜம், ரிஷபம், பஞ்சமம் இவை மூன்றும் சுத்தஸ்வரங்கள். தீவ்ரரிஷபம், ஸாதாரணகாந்தாரம், தீவ்ரதைவதம், கைசிக நிஷாதம் இவை நான்கும் விகிருதங்களாகும். இதனின்று ஸ்ரீராகம், மாளவஸ்ரீ, தனுஸ்ரீ பைரவீ, தவளா, ஸைந்தவீ முதலானவை பிரதேசங்களுக்கேற்ப நாமபேதத்துடன் ஜனிக்கின்றன. (சஅ)

கல்யாணம் (கரு)

கல்யாணமேளத்திலோ ஷட்ஜம், பஞ்சமம், தைவதம் இவை மூன்றும் சுத்தஸ்வரங்கள். தீவ்ரதரரிஷபம், ஸாதாரணகாந்தாரம், மிருது பஞ்சமம், மிருதுஷட்ஜம் இவை விகிருதங்களா கும். இதிலிருந்து கல்யாணம் முதலானவை உண்டா கின்றன. (ருo)

காம்போதீ (கஎ)

காம்போதீமேளத்தில் ஷட்ஜம், மத்தியமம், பஞ்சமம் இவை சுத்தஸ்வரங்கள். தீவதரரிஷபம், அந்தரகாந்தாரம், தீவ்ததரதைவதம், காகலிநிஷா தம் இவை நான்கும் விகிருதஸ்வரங்களாகும். காம்போதீ, தேவக்ரீ முதலியவை இதனின்று உண்டாகின்றன. (ருக)

மல்லாரி (கஅ)

மல்லாரிமேளத்தில் ஷட்ஜம், மத்தியமம், பஞ்சமம் இவை மூன்றும் சுத்தஸ்வரங்கள். திவ்ரதரரிஷபம், மிருதுமத்தியமம், தீவ்தரதைவதம், மிருதுஷட்ஜம் இவை நான்கும் விக்ருதஸ்வரங் களாகும். இதிலிருந்து மல்லாரி, நடமல்லாரி, பூர்வகௌடை, பூபாளீ, கௌடை, சங்கராபரணம், நடநாராயணம், நாராயணகௌடை, மற்றுமொரு கேதாரம், ஸாலங்கநாட்டை, வேலாவலீ, மத்திய மாதி, ஸாவேரீ, ஸௌராஷ்ட்ரீ முதலியவை கிடைக் கின்றன. (ருஉ-ருச)

ஸாமந்தம் (கக)

ஸாமந்தமேளத்தில் ஷட்ஜம், மத்தியமம், பஞ்சமம் இம்மூன்றும் சுத்தஸ்வரங்கள். தீவ்ரதம

ரிஷபம், அந்தரகாந்தாரம், தீவ்ரதமதைவதம், காகலிநிஷாதம் இவை நான்கும் விகிருதங்கள். ஸாமந்தம் முதலியவை இதனின்று பிறக்கின்றன. (நரு)

## கர்ணுடகௌடை (உ௦)

கர்ணுடகௌடமேளத்தில் ஷட்ஜம், மத்தியமம், பஞ்சமம் இம்மூன்றும் சுத்தஸ்வரங்கள். தீவ்ரதமரிஷபம், மிருதுமத்தியமம், தீவ்ரதைவதம், கைசிகிநிஷாதம் என்பவை விகிருதங்கள். இதிலிருந்து கர்ணுடகௌடை, அடாணு, நாகத்வனி, சுத்தபங்காளம், வர்ணநாடை, துருஷ்கதோடி (இது இராக்தேசத்தில் வழங்குவது) முதலானவை கிடைக்கின்றன. (நசு-நஎ)

## தேசாக்ஷீ (உக)

தேசாக்ஷீமேளத்தில் ஷட்ஜம், மத்தியமம், பஞ்சமம் இம்மூன்றும் சுத்தஸ்வரங்கள். தீவ்ரதமரிஷபம், மிருதுமத்தியமம், தீவ்ரதரதைவதம், மிருதுஷட்ஜம் என்ப இவை விகிருதங்களாகும். தேசாக்ஷீ முதலான ராகங்கள் இதிலிருந்து உண்டாகின்றன. (நஅ)

## சுத்த நாட்டை (உஉ)

சுத்தநாட்டை மேளத்தில் ஷட்ஜம், மத்தியமம், பஞ்சமம் இம்மூன்றும் சுத்தஸ்வரங்களாகும். தீவ்ரதரரிஷபம், மிருதுமத்தியமம், தீவ்ரதமதைவதம், மிருதுஷட்ஜம் இவை விகிருதஸ்வரங்களாகும், இதிலிருந்து சுத்தநாட்டை முதலானவை உண்டாகின்றன. (நகூ)

ஸாரங்கம் (உ௩)

ஸாரங்கமேளத்தில் ஷட்ஜமும், பஞ்சமும், சுத்தஸ்வரங்கள். தீவ்ரதரரிஷபம், தீவ்ரதம காந்தாரம், மிருதுபஞ்சமம், தீவ்ரதமதைவதம், மிருதுஷட்ஜம் இவை ஐந்தும் விகிருதஸ்வரங்களாகும். இதிலிருந்து ஸாரங்கம் முதலானவை தோன்றுகின்றன. (௬௦)

இவ்விதம் ஸ்ரீ ஸோமநாதரியற்றிய 'ராகவிபோதம்'
என்ற நூலின் 'மேளவிரிவுகள்' என்ற
மூன்றும் விவேகம் இவண் முற்றும்.

## நான்காம் விவேகம்

### ராகங்கள்

### (ராகவிளக்கம்)

க்ரஹம் (எடுப்பு) அம்சம் (ஜீவன்) ந்யாஸம் (முடிபு) முதலியவற்றால் நன்கு பொருந்தியதும் செவிகளுக்கினிமை பயக்குவதும், க்ரமரீதியிலே ஒழுங்குபடுத்தப்பட்ட நாதங்களே ராகங்களாகும். (க)

### ராகங்களின் முதல் மூன்று வகைகள்

விசேஷித்த இடங்களில் தத்தம் ஜனனத்தைப்பெற்றுப் பிரஸித்திக் குறைவான ராகங்கள் எண்ணிக்கையில் ஸமுத்திர அலைகளைப்போன்று கணக்கற்றதாகும். இவற்றை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். (க) சுத்த ராகங்கள்; (உ) சாயாலகங்கள்; (ரு) ஸங்கீர்ணங்கள் எனலாம். தமது இயல்பில் அமைந்தத் தன்மையின் பெருமையால் சுத்த ராகங்கள் மகிழ்வையளிக்கின்றன. சாயாலக ராகங்களோ; மற்றவைகளின் குணவிசேஷங்களைச் சார்ந்து ரஞ்ஜனை (இன்பம்) யுடையவைகளாகின்றன. ஸங்கீர்ணராகமும் மற்ற இரண்டையும் தழுவி இனிமையைப் பயப்பனவாகும் என்று ஸ்ரீ உமாபதியே தமது மனப்பாங்காக வெளியிட்டுள்ளார். (உ, ரு)

### ராகங்களின் இரண்டாவது மூன்று வகைகள்

மீண்டும் ராகங்களை உத்தமம், மத்தியமம், அதமம் என மூன்று வகையாகவும் பிரிக்கலாம். ஆலாபம்; (ராகத்தை ஸ்வரரீதியிலே காட்டுவது

ஆலப்தி; (ஸ்வரத்தை அவற்றின் இயல்பு முற்றும் விளங்கப் பரவச் செய்வது) பிரபந்தங்களுக்கு (ராகத்தின் நுணுக்கங்களைக் காணுவது) யோக்கியமானவை உத்தம ராகங்களாகும். இஃதே போன்று ஆலாபம் முதலியவற்றைப் பெற்றும் வழக்கில் அபூர்வமாயுள்ளவை மத்தியம ராகங்களாகும். எனவே அதமராகங்கள் பிரசாரத்தில் வெகுவாகக் கையாளப்படினும் ஆலாபம் முதலியவைகளுக்கு யோக்கியதை யற்றவைகளாகும். (௪)

**ராகங்களின் மூன்றுவது மூன்றுவகை**

ஒவ்வொரு தேசங்களிலும் பேதமடைந்துள்ள தேசீராகங்கள் பூர்ணம், ஔடவம், ஷாடவம் என மூன்று வகைகளாகக் குறிப்பிடப்படுகின்றன. நான் இங்கு மேளத்தின் தன்மையினின்று வழக்கத்திலிருக்கும் கொள்கைக்கேற்ப அவற்றைச் சுருக்கமாக விவரிப்பதுடன் அவற்றின் பகுப்புக்களையும் க்ரஹம் முதலானவற்றையும் பாடுங்காலத்தையும் குறிப்பிடுகிறேன். (ரு-எ)

**முகாரியும், துருஷ்கதோடியும் (உ)**

முகாரீ ஒரு ஸம்பூர்ணராகம். க்ரஹம், அம்சம், நியாஸம் இவற்றில் ஷட்ஜத்தையே ஸ்வரமாகக் கொண்டது. எப்பொழுதும் பாடலாம். துருஷ்க தோடியும் ஒரு ஸம்பூர்ணராகமே. காந்தாரஸ்வரத்தைக் க்ரஹம், அம்சம், நியாஸம் மூன்றிலும் பெற்று ஸப்தஸ்வரத்திலும் கமகத்தைக் கொண்டது. அருணோதயத்தில் பாடப் பெறுவது. (அ)

**ரேவகுப்தியும், ஸாமவராளியும் (௪)**

ரேவகுப்தீராகத்தில் ஷட்ஜமும், பஞ்சமமும் சுத்தமில்லை. க்ரஹம், அம்சம், நியாஸம் மூன்றி

லும் ரிஷபத்தையே ஸ்வரமாகக் கொண்டது. இது பாடுங் காலம் மாலைக்காலமாகும். ஸாமவராளியோ ஒரு ஸம்பூர்ணராகம். க்ரஹம், அம்சம், நியாஸம் மூன்றிலும் ஷட்ஜஸ்வரமே பெற்றுள்ளது. இதை எக்காலத்திலும் பாடலாம். (௯)

**வஸந்தவராளியும், தோடியும் (௬)**

வஸந்தவராளியில் ரிஷபமும், பஞ்சமும் சுத்த மில்லை. க்ரஹஸ்வரம் காந்தாரமாகும். அம்ச நியாஸஸ்வரங்கள் ஷட்ஜமேயாகும். எக்காலத் திலும் பாடத்தக்கது. தோடி ஒரு ஸம்பூர்ண ராகம். க்ரஹம், அம்சம், நியாஸம் இவற்றில் காந்தாரஸ்வரத்தைப் பெற்று விளங்குகின்றது. ஸூரியோதயத்தின் பொழுதும், அதை யொட்டி பின்னரும் பாடப்பெறுவதாம். (௧0)

**நாதராமக்ரியும், பைரவமும் (அ)**

நாதராமக்ரீ ஒரு ஸம்பூர்ணராகம். எடுப்பு, ஜீவன் முடிபு மூன்றிலும் ஷட்ஜஸ்வரத்தையே பெற்றுள்ளது. இந்து பாடுங்காலம் இரவு நேரமே. பைரவமும் ஒரு ஸம்பூர்ணராகமே. எடுப்பிலும் ஜீவனிலும் தைவதஸ்வரமும் முடிபில் ஷட்ஜஸ் வரமும் பெற்றதாம். காலை நேரமே இதைப்பாடும் நேரமாகும். (௧௧)

**பௌரவியும், வஸந்தமும் (௧0)**

பௌரவீ ராகத்திற்கு ரிஷப, பஞ்சமஸ்வரங்கள் சிறிதளவே பயன்படுகின்றன. க்ரஹம், அம்சம், நியாஸம் மூன்றிலும் ஷட்ஜஸ்வரத்தையே பெற் றுள்ளது. காலை நேரத்தில் இதைப் பாடலாம். வஸந்தமோ ஒரு ஸம்பூர்ண ராகம், க்ரஹம், அம்சம்,

நியாஸம் மூன்றுக்கும் ஷட்ஜமே இதனுடைய ஸ்வரமாகும். உதயகாலத்திலே தான் இது பாடப் படும். (கஉ)

**டக்க ராகமும், ஹிஜேஜையும் (கஉ)**

டக்கராகம் ஒரு ஸம்பூர்ணராகம். க்ரஹம், அம்சம், நியாஸம் மூன்றிலும் ஷட்ஜஸ்வரத்தையே பெற்றுள்ளது. பொழுது சாயும் வேளையிலே இது பாடப்படுவது. ஹிஜேஜையோ ஒரு ஸர்வ ஸம்பூர்ண ராகமாகும். க்ரஹம், அம்சம் இரண்டிலும் மத்தியமஸ்வரத்தையும், நியாஸத்தில் ஷட்ஜஸ்வரத்தையும் பெற்று மாலைப் பொழுதிலே பாடப் படுவதாகும். (கங)

**ஹிந்தோளமும், வஸந்த பைரவியும் (கச)**

ஹிந்தோளராகத்திற்கு ரிஷபம் பஞ்சமம் இவை சுத்த ஸ்வரங்களாக இல்லை. மத்தியம ஸ்வரத்தை அம்சத்திலும், ஷட்ஜஸ்வரத்தை க்ரஹம், நியாஸம் இரண்டிலும் பெற்றுள்ளது. எப்பொழுதுமே பாடத்தக்கது. விசேஷமாக ஸூரியோதயத்தின் பொழுதே பாடுவது மரபாம். வஸந்த பைரவியிலோ பஞ்சமஸ்வரம் சுத்த மில்லை. க்ரஹம், அம்சம், நியாஸம் மூன்றிலும் ஷட்ஜஸ்வரமுள்ளது. ஸூரியோதயகாலத்திலேதான் இது பாடப்படும். (கச)

**மாரவிகை, மாளவகௌடை, சைதீகௌடை (கஎ)**

மாரவிகை ராகத்தில் (உலக வழக்கிலே மாரு எனவழங்குவது) ரிஷப தைவதஸ்வரங்கள் இல்லை. காந்தாரஸ்வரத்தை க்ரஹம், அம்சம், இவை இரண்டிற்கும், ஷட்ஜஸ்வரத்தை நியாஸத் திற்கும் பெற்றுள்ளது. எங்காலமும் பாடப்படுவது.

மாளவகௌளை ஒரு ஸம்பூர்ணராகமாயினும், சில ஸமயங்களில் காந்தார தைவத ஸ்வரங்களைப் பெறுமல் பிரயோகிக்கப்படுகின்றன. நிஷாதஸ்வரமே க்ரஹம், அம்சம், நியாஸம் மூன்றிலும் உள்ளது. எனினும் நியாஸத்தில் ஷட்ஜஸ்வரம் காணப்படுவதுமுண்டு. பாடும் பொழுது அந்தி மயங்கும் ஸமயமாகும். சைநீகௌளைக்குக் காந்தார தைவத ஸ்வரங்கள் சுத்தமின்று. நிஷாதஸ்வரத்தை அம்சத்திலும், ஷட்ஜஸ்வரத்தை க்ரஹம், நியாஸம் இவை இரண்டிலும் பெற்று மாலை வேளையிலே பாடப்படுவதாகும். (கடு—கசு)

### பூர்வியும், பாடியும் (கசு)

பூர்வீ ஒரு ஸம்பூர்ணராகம், க்ரஹம், நியாஸம் இரண்டிலும் ஷட்ஜஸ்வரத்தைப் பெற்றும்; அம்சத்தில் காந்தாரஸ்வரத்தைப் பெற்றும் மாலை நேரமே பாடுங் காலமாகவும் அமைந்துள்ளது. பாடீராகத்தில் காந்தாரஸ்வரம் சுத்தமில்லை. க்ரஹம், அம்சம், நியாஸம் மூன்றிலும் ஷட்ஜஸ்வரமே உள்ளது. இதுவும் மாலை நேரமே பாடும் காலமாகும். (கஎ)

### தேவகாந்தாரமும், கௌடக்ரியையும் (உக)

தேவகாந்தாரராகத்தில் காந்தார நிஷாத ஸ்வரங்கள் சுத்தமின்று. ரிஷபத்தை க்ரஹத்திலும், பஞ்சமத்தை அம்சத்திலும், ஷட்ஜத்தை நியாஸத்திலும் ஸ்வரங்களாகப் பெற்றுள்ளது. எப்பொழுதும் பாடத்தக்க ராகம். கௌடக்ரீ ராகத்திலோ தைவத ஸ்வரம் சுத்தமில்லை. எடுப்பு, ஜீவன், முடிபு மூன்றிலும் ஷட்ஜத்தையே ஸ்வர

மாகக் கொண்டது. இதைப்பாடும் காலம் காலை வேளையாகும். (கஅ)

**குரஞ்ஜியும், பஹுலியும் (உக)**

குரஞ்ஜீ ராகத்தில் தைவதஸ்வரத்தின் உபயோகம் மிகவும் கொஞ்சம் தான். க்ரஹம், அம்சம், நியாஸம் இம்மூன்றிலும் ஷட்ஜஸ்வரமே விரவி வருவதாம். எப்பொழுதும் பாடலாம். பஹுலீ ராகத்தில் மத்தியம நிஷாத ஸ்வரங்கள் சுத்தமல்ல. க்ரஹம், அம்சம், நியாஸம் மூன்றிலும் ஷட்ஜஸ்வரமே உள்ளது. இது பிற்பகலில் பாடத்தக்க ராகமாகும். (கக)

**ராமக்ரியும், பாவகமும் (உ௯)**

ராமக்ரீ ஒரு ஸம்பூர்ண ராகம். க்ரஹம், அம்சம், நியாஸம் மூன்றிலும் ஷட்ஜஸ்வரமே காணப்பட்டாலும் சில ஸமயங்களில் க்ரஹம்,அம்சம் இரண்டிலும் காந்தாரஸ்வரமும் விரவி வருவதுமுண்டு. எக்காலத்திலும் பாடத்தக்க ராகமாகும். பாவக ராகத்திலோ நிஷாதஸ்வரம் சுத்தமில்லை. காந்தார ஸ்வரத்தை எடுப்பிலும், தைவதத்தை ஜீவனிலும், நிஷாதஸ்வரத்தை முடிபிலும் பெற்று எந்நேரமும் பாடத் தக்கதாய் விளங்குவதாகும். (உ0)

**அஸாவேரியும், பஞ்சமும் (உஎ)**

அஸாவேரியும் ஒரு ஸம்பூர்ண ராகமே. க்ரஹம், அம்சம் இரண்டிலும் மத்தியமஸ்வரத்தையும், ஷட்ஜஸ்வரத்தை நியாஸத்திலும் பெற்றது. எக்காலத்திலும் இதைப்பாடலாம். பஞ்சம ராகமோ ரிஷபஸ்வரமற்றது. க்ரஹம், அம்சம், நியாஸம் மூன்றிலும் பஞ்சமஸ்வரத்தையே பெற்றுள்ளது. உதயகாலத்தில் பாடத்தகுந்தது. (உ௩)

### பங்காளமும், சுத்தலலிதையும் (உகூ)

பங்காளம் ஒரு ஸம்பூர்ண ராகமாகும். எடுப்பு, ஜீவன், முடிப்பு மூன்றிலும் ஷட்ஜஸ்வரத்தையே பெற்றது. எப்பொழுதும் பாடக்கூடியது. சுத்த லலிதையோ ஸம்பூர்ணமாயினும், சில ஸமயங்களில் பஞ்சமஸ்வரமிழந்து காணப்படுகின்றது. ஷட்ஜ ஸ்வரமே இதனுடைய க்ரஹம், அம்சம், நியாஸம் மூன்றிலும் உள்ளது. இதைப்பாடும் காலம் உதய காலமே யாகும். (உஉ)

### குர்ஜரிகாவும், பரஜூவும் (ங.க)

குர்ஜரிகாவுக்குப் பஞ்சமஸ்வரம் கிடையாது. க்ரஹம், அம்சம், நியாஸம் மூன்றிலும் ரிஷபஸ்வர முள்ளது. பாடுவதற்குத் தகுந்த காலம் காலை நேர மே. பரஜூராகத்திற்கு நிஷாதஸ்வரம் ஸ்வல்பப் பிரயோகமாகவே உள்ளது. க்ரஹம்,அம்சம் இரண் டிலும் காந்தாரஸ்வரத்தையும், நியாஸத்தில் ஷட்ஜத்தையும் பெற்றுள்ளது. காந்தாரமும், தைவதமும் கமகத்தில் பெரிதும் பயனுடைவ களாகக் காணப்படுகின்றன. எக்காலமும் பாடத் தக்க ராகமாகும். (உங)

### சுத்தகௌடையும், ரீதிகௌடையும் (ஙங)

சுத்தகௌடையோ நிஷாதஸ்வரத்தின் ஸ்வல்பப் பிரயோஜனத்தையே யுடையது. எடுப்பிலும், முடிப்பிலும் ஷட்ஜஸ்வரமும், ஜீவனில் பஞ்சம ஸ்வரத்தையும் பெற்றுள்ளது. அந்தி மயங்கும் நேரத்தில் பாடத்தக்கது. ரீதிகௌடையோ ஒரு ஸம்பூர்ண ராகமாகும். நிஷாதத்தை க்ரஹம், அம்சம், நியாஸம் மூன்றிலும் பெற்று மாலை வேளையிலே பாடக் கூடியதாகவுமுள்ளது. (உச)

### ஆபீரியும், ஹம்மீரும் (௩௫)

ஆபீரீ ஒரு ஸம்பூர்ண ராகம். க்ரஹம், அம்சம் இரண்டிலும் காந்தார ஸ்வரத்தையும்; நியாஸத்தில் நிஷாதஸ்வரத்தையும் பெற்று அந்திமயங்கும் நேரத்தில் பாடப்படுவதாம். நிஷாதஸ்வரத்தின் பயன் ஹம்மீரராகத்திற்குச் சிறிதளவே யாகும். எடுப்பில் காந்தாரமும், ஜீவனில் பஞ்சமும், முடிபில் ஷட்ஜமும் ஸ்வரங்களாக இதில் வந்துள்ளன. இது இரவு நேரத்திலே பாடத்தக்க ராகம். (உ௫)

### விஹங்கடையும், கேதாரமும் (க) (௩௭)

விஹங்கடை யென்னும் ராகத்திற்குத் தைவத ஸ்வரம் சிறிதளவே பயன்படுகின்றது. க்ரஹம், அம்சம் இரண்டிலும் நிஷாதத்தையும், நியாஸத்தில் ஷட்ஜஸ்வரத்தையும் பெற்று விளங்குவது. ஸ்வரங்களில் கமகத்தையுடையது. இராக்காலமே இதைப்பாடும் காலமாம். கேதார(க) ராகத்திலோ ரிஷப தைவத ஸ்வரங்கள் சிறிதளவே பயன்படுகின்றன. எடுப்பு, ஜீவன் இரண்டிலும் காந்தார ஸ்வரமும், முடிப்பில் ஷட்ஜஸ்வரமும் உள்ளது. இதையும் இராக்காலத்திலே தான் பாடப்பட வேண்டும். (உ௬)

### சுத்தவராடியும், தேசகாரமும் (௩௮)

சுத்தவராடீ ஒரு ஸம்பூர்ண ராகம். க்ரஹத்தில் ரிஷப ஸ்வரம்; அம்சம், நியாஸம் இரண்டிலும் ஷட்ஜஸ்வரம். பகல் வேளையே இது பாடப்படும் காலம். தேசக்ருத் (தேசகாரம் அல்லது சுத்த ராமக்ரீ) ராகமோ ஸம்பூர்ண மாயுள்ளது. மத்தியம நிஷாத ஸ்வரங்களைக் கமகத்தில் பெற்று வருவது. க்ரஹம், அம்சம், நியாஸம் மூன்றிலும் ஷட்ஜ

ஸ்வரமே உள்ளது. நண்பகலில் (உச்சி வேளையில்) இது பாடப்படும் ராகம். (உஎ)

**லலிதையும், ஜைதாஸ்ரீயும் (சக)**

லலிதராகம் ஒரு ஸம்பூர்ண ராகம். எனினும் சில ஸமயங்களில் பஞ்சமம் இல்லாமலே காணப் படுகின்றது. க்ரஹம், நியாஸம் இரண்டிலும் ஷட்ஜ ஸ்வரத்தையும் அம்சத்தில் தைவத ஸ்வரத்தையும் பெற்றது. உதய காலமே இதைப்பாடும் காலமாகும். ஜைதாஸ்ரீ ராகமோ ஸம்பூர்ணமானது. ஷட்ஜ ஸ்வரத்தையே க்ரஹம், அம்சம், நியாஸம் மூன்றி லும் பெற்று விளங்குகின்றது. காலை நேரத்திலே இதைப் பாடலாம். (உஅ)

**த்ராவணியும், தேசியும் (சரு)**

த்ராவணீராகம் ஒரு ஸம்பூர்ண ராகமே. க்ரஹம், அம்சம் இரண்டிலும் ரிஷபஸ்வரமும், நியாஸத்திற்கு ஷட்ஜஸ்வரமும் காணப்படுகின்றது. மாலையிலே பாடப்படுவது. தேசீராகமோ காந்தார ஸ்வரத்தை அற்பமாகவே பிரயோகத்தில் பெற்று விளங்குவது. எடுப்பு, ஜீவன், முடிபு மூன்றிலும் ரிஷபத்தையே பெற்றுள்ளது. எக்காலமும் பாடப்படுவது. (உகூ)

**ஸ்ரீராகமும், மாலாஸ்ரீயும், தன்யாஸியும் (சசூ)**

ஸ்ரீ ராகத்தில் சில ஸமயங்களில் காந்தாரம், தைவதம் இந்த ஸ்வரங்கள் காணப்படுவதில்லை. இதனுடைய க்ரஹஸ்வரம் ரிஷபம். அம்சஸ்வரமும் ரிஷபம். நியாஸஸ்வரமோ ஷட்ஜமாகும். அந்தி மயங்கும் நேரம் இது பாடப்படும் காலம். மாலாஸ்ரீ ஒரு ஸம்பூர்ண ராகமாயிருந்தாலும் சிலஸமயங்களில்

ரிஷபம், தைவதம் இந்த ஸ்வரங்கள் ஸாமான்ய மாகவே காணப்படுகின்றன. சிற்சில ஸந்தர்ப்பங் களில் க்ரஹம், அம்சம், நியாஸம் மூன்றிலும் ஷட்ஜத்தையும், சில ஸமயங்களில் க்ரஹம், அம்சம் இவ்விரண்டிலும் நிஷாதஸ்வரத் தையும் பெற்று விளங்குவது. போரின் வெற்றியைக் கொண்டாடும் விழாவின் ஆரம் பத்திலே இது பாடப்படும். ஆகவே இதனை எப்பொழுதும் பாடலாம். தன்யாஸியோ ரிஷப தைவத ஸ்வரங்களால் சிறிதளவே பிரயோஜன த்தையடைகிறது. ஷட்ஜஸ்வரத்தையே க்ரஹம், அம்சம், நியாஸம் மூன்றிலும் பெற்ற இந்த ராகம் காலை நேரத்திலே பாடப்படுவதாகும். (௩௦, ௩௧)

### பைரவியும், தவளாராகமும் (௪அ)

பைரவீ ஒரு ஸம்பூர்ண ராகம். க்ரஹம், அம்சம், நியாஸம் மூன்றிலும் ஷட்ஜ ஸ்வரமே. இந்த ராகத் திற்கு ரிஷபமும், பஞ்சமமும் பூரணப்பொலிவையும், ரஞ்ஜகத்தையும் அளிப்பதாகும். எப்பொழுதும் பாடப்படுவது. தவளாராகமோ ரிஷப தைவதத்தை இழந்து காணப்படுவது. எடுப்பு ஜீவன், முடிபு மூன்றிலும் ஷட்ஜஸ்வரமே பெற்றுள்ளது. பஞ்சம ஸ்வரம் இதற்கு ரஞ்ஜகத்தைக் கொடுக்கின்றது. எக்காலமும் பாடக்கூடியது. (௩௨)

### ஸைந்தவியும், கல்யாணமும் (௫௦)

ஸைந்தவீராகத்தில் காந்தாரமும் நிஷாதமும் காணப்படுவதில்லை. க்ரஹம், அம்சம், நியாஸம் மூன்றிலும் ஷட்ஜமேயுள்ளது. கமகத்திற்கு மிகவும் தகுதியுள்ள ராகமாகும். எக்காலத்திலும்

இதைப் பாடலாம். கல்யாணம் ஒரு ஸம்பூர்ண ராகம். எடுப்பிலும் முடிவிலும் ஷட்ஜஸ்வரத்தையும் ஜீவனில் காந்தாரஸ்வரத்தையும் பெற்று அந்தி மயங்கும் நேரத்திலே பாடப்படுவதாகும். (௫௩)

**காம்போதியும், தேவக்ரியும் (௫௪)**

காம்போதி ஒரு ஸம்பூர்ண ராகமாயிருந்தாலும் சில இடங்களில் நிஷாதவர்ஜமாகக் காணப்படுகின்றது. க்ரஹம், அம்சம், நியாஸம் இவற்றில் ஷட்ஜஸ்வரமே யுள்ளது. மாலை வேளையில் இது பாடக்கூடியது. தேவக்ரீ ஒரு ஸம்பூர்ண ராகமாயிருந்தாலும் சில ஸமயங்களில் பஞ்சமம் இல்லாமலும் காணப்படுகிறது. எடுப்பு, ஜீவன், முடிபு மூன்றிலும் ஷட்ஜஸ்வரமே யுள்ளது. இதைப் பாடும் காலம் பிற்பகலே யாகும். (௫௪)

**மல்லாரியும், நடமல்லாரியும், பூர்வகௌடையும் (௫௫)**

மல்லாரியும், நடமல்லாரியும் ஸம்பூர்ணராகமானவை: ஆயினும் அவை காந்தார நிஷாதஸ்வரங்களைப் பெற்றவைகளல்ல. இவை இரண்டிற்கும் க்ரஹம், அம்சம், நியாஸம் மூன்றிலும் தைவதஸ்வரமே யுள்ளது. இவ்விரு ராகங்களையும் உதயகாலத்திற்குப் பிறகு பாடுவது மரபாம். பூர்வகௌடையோ ஒரு ஸம்பூர்ணராகம். க்ரஹம், நியாஸம் இரண்டிலும் ஷட்ஜஸ்வரத்தையும், அம்சத்தில் தைவதஸ்வரத்தையும் கொண்டுள்ளது. இது நண்பகலில் (உச்சி வேளையில்) பாடப்படுவது ஆகும். (௫௫)

**பூபாளியும், கௌடையும் (௫௭)**

பூபாளீ ராகமானது ஸம்பூர்ணமானாலும் மத்தியமநிஷாதஸ்வரங்கள் இல்லாமலே பாடுப்

படுவதாகும். க்ரஹம், நியாஸம் இரண்டிலும் ஷட்ஜத்தையும், அம்சத்தில், காந்தாரத்தையும் பெற்று விளங்குவது. இதை உதயகாலத்திலே பாடலாகும். கௌடைக்கு நிஷாதஸ்வரம் சிறிதளவே பிரயோகத்திலுள்ளது. தைவதஸ்வரமே க்ரஹம், அம்சம், நியாஸம் மூன்றிலுமுள்ளது. பிற்பகலில் பாடப்படும் ராகமாகும். (ருசு)

**சங்கராபரணமும், நடநாராயணமும்** (ருகூ)

சங்கராபரணம் ஒரு ஸம்பூர்ண ராகம். க்ரஹம், அம்சம், நியாஸம் மூன்றிலும் ஷட்ஜஸ்வரத்தையே பெற்று விளங்குவது. உதயகாலத்திலே இது பாடப்படுவதாகும். நடநாராயணமும் ஓர் ஸம்பூர்ண ராகமே. ஷட்ஜஸ்வரமே க்ரஹத்திலும், நியாஸத்திலும் வந்துள்ளது. இதன் அம்சஸ்வரம் காந்தாரமாகும். பிற்பகலிலே இதைப் பாடுவார்கள். (ருஎ)

**நாராயணகௌடையும், கேதாரமும்(உ)** (சுக)

நாராயண கௌடையில் ரிஷபம் வர்ஜிக்கப்படுகிறது. க்ரஹம், அம்சம், நியாஸம் மூன்றிலும் காந்தாரஸ்வரமேயுள்ளது. உதயகாலமே இது பாடும் காலம். கேதாரம் (உ) ஒரு ஸம்பூர்ணராகம். க்ரஹம், அம்சம், நியாஸம் மூன்றிலும் நிஷாதஸ்வரமுள்ளது. இரவில் இது பாடப்படும். (ருஅ)

**ஸாலங்க நாட்டையும், வேலாவலியும்** (சுரு)

ஸாலங்கநாட்டை ஒரு ஸம்பூர்ண ராகம். எடுப்பு, ஜீவன், முடிபு மூன்றிலும் ஷட்ஜ ஸ்வரத்தைப் பெற்றது. மாலை நேரத்திலே பாடப்படுவதுமாம். வேலாவலியும் ஒரு ஸம்பூரண ராகமாயினும்

சிற்சில ஸமயங்களில் ரிஷபபஞ்சம வர்ஜமா யுள்ளது. க்ரஹம், அம்சம், ந்யாஸம் மூன்றிலும் தைவதஸ்வரமேயுள்ளது. இதைப்பாடும் காலம் உதயகாலமேயாகும். (௩௯)

**மத்யமாதியும், ஸாவேரியும் (௪௫)**

மத்யமாதிராகத்தில் ரிஷப தைவத ஸ்வரங் கள் சுத்தமில்லை. க்ரஹம், அம்சம், ந்யாஸம் மூன்றிலும் மத்யம ஸ்வரத்தைப்பெற்று உதய காலத்திலே பாடக்கூடிய ராகமாயுள்ளது. ஸாவேரியிலோ ஷட்ஜபஞ்சமஸ்வரங்கள் சுத்த மில்லை. தைவதஸ்வரத்தையே தனது எடுப்பு, ஜீவன், முடிபு மூன்றிலும் பெற்றுள்ளது. இந்த ராகம் உதய காலத்திலே பாடக்கூடியதாகும். (௪0)

**ஸௌராஷ்ட்ரமும், ஸாமந்தமும் (௪௭)**

ஸௌராஷ்ட்ரம் ஒரு ஸம்பூர்ணராகம். ஷட்ஜ ஸ்வரத்தையே க்ரஹம், அம்சம், ந்யாஸம் மூன்றி லும் பெற்றுள்ளது. மாலைக் காலமே இது பாடப் படும் காலமாகும். ஸாமந்தமும் ஒரு ஸம்பூர்ண ராகமே. க்ரஹம், அம்சம், ந்யாஸம், மூன்றிலும் ஷட்ஜஸ்வரமேயுள்ளது. இதையும் மாலைநேரத் திலே பாடலாம். (௪௧)

**கர்ணாடமும், அடாணாவும் (௪௯)**

கர்ணாடராகத்தில் சிற்சில இடங்களில் ரிஷப தைவதஸ்வரங்கள் சுத்தமில்லை. இருப்பினும் கர்ணாடம் ஒரு ஸம்பூர்ண ராகமே. நிஷாத ஸ்வரத்தையே க்ரஹம், அம்சம், ந்யாஸம் மூன்றி லும் பெற்றுள்ளது. நடுநிசியில் பாடத்தக்கதாகும். அடாணாவோ ஒரு ஸம்பூர்ணராகம். க்ரஹத்திற்கு

பஞ்சம ஸ்வரத்தையும், அம்சத்திற்குத் தைவத ஸ்வரத்தையும், நியாஸத்திற்கு ஷட்ஜ ஸ்வரத்தை யும் பெற்றுள்ளது. இரவிலே இது பாடப் படுவதாகும். (சஉ)

**நாகத்வநியும், சுத்தபங்காளமும் (எக)**

நாகத்வநி ஒரு ஸம்பூர்ணராகமே. க்ரஹம், அம்சம், நியாஸம் மூன்றிலும் ஷட்ஜ ஸ்வரமே யுள்ளது. இதை எப்பொழுதும் பாடலாம். சுத்த பங்காளமும் ஒரு ஸம்பூர்ணராகமே. க்ரஹம், அம்சம், நியாஸம் இம் மூன்றிலும் மத்யம ஸ்வரத் தையே பெற்றுள்ளது. உதய காலத்திலே இது பாடப்படும் ராகமாகும். (சஙு)

**வர்ணநாட்டையும், துருஷ்கதோடியும் (எஙு)**

வர்ண நாட்டையானது ஒரு ஸம்பூர்ணராகம். க்ரஹம், அம்சம், நியாஸம் மூன்றிலும் ஷட்ஜ ஸ்வரமே யமைந்து, நடுநிசியில் பாடப்படுவதாகும். துருஷ்கதோடி (இராக்) யும் ஒரு ஸம்பூர்ண ராகமே. கரஹம், அம்சம், நியாஸம் இந்த மூன்றிலும் மத்யம ஸ்வரத்தையே பெற்றுள்ளது. நடுநிசியே இது பாடப்படும் காலமாகும். (சச)

**தேசாக்ஷியும், சுத்த நாட்டையும் (எடு)**

தேசாக்ஷியின் ஆரோஹணத்தில் மத்யம நிஷாத ஸ்வரங்கள் சுத்தமில்லை. காந்தார ஸ்வரமே க்ரஹம், அம்சம், நியாஸம் இம்மூன்றி லும் உள்ளது. உதய காலத்திலே இது பாடப் படுவது. சுத்த நாட்டையோ ஒரு ஸம்பூர்ண ராகமேயாம். கரஹம், அம்சம், நியாஸம் மூன்றி லும் ஷட்ஜஸ்வரத்தையே பெற்றுள்ளது. அந்தி மயங்கும் நேரத்திலே இதைப் பாடலாம். (சடு)

### ஸாரங்க ராகம் (எசு)

ஸாரங்க ராகம் ஒரு ஸம்பூர்ணராகமேயாகும். எடுப்பு, ஜீவன், முடிபு மூன்றிலும் ஷட்ஜஸ்வரமே யுள்ளது. பிற்பகலில் பாடப்பெறும் ராகங்களில் இதுவும் ஒன்ருகும். பல லக்ஷியங்களிலிருந்தும் கவனித்துச் சுருக்கமாக என்னல் கூறப்பட்ட ராக லக்ஷணங்கள் இவைகளேயாகும். (சசு)

இவ்விதம் ஸ்ரீ ஸோமநாதரியற்றிய 'ராகவிபோதம்'
என்னும் நூலின் 'ராகங்களின் விளக்கம்'
என்னும் நான்காவது விவேகம்
இவண் முற்றும்.

# ஐந்தாம் விவேகம்

## ராக அமைப்புகள்

ராகங்களையும் அவற்றிற்கு உரியதாய மேளங்களின்படி அவற்றின் தன்மைகளையும் சுருங்கக் கூறுவாம். மேலும் அவற்றைப் பாடும் பொழுதின் (காலம்) வண்ணம் முடிவாகத் தொகுத்தும் கூறுவாம். (க)

## காலதத்துவத்துக் கேற்ற ராகங்கள்

உதய முதல் எட்டு சிறு பொழுதுகளாக வகுக்கப்பட்ட ஒவ்வொரு தினத்திலும் தனியே தம் மது என்று குறிக்கப்பெற்ற காலப்பகுதியில் மட்டும் பாடத்தக்கச் சில ராகங்கள் வருமாறு: சங்கராபரணம், வேலாவலீ, பூபாலீ, சுத்தலலிதா, வஸந்தா, ஹிந்தோளம், விபாஸலலிதா, ஜைதாஸ்ரீ, தனுஸ்ரீ, பைரவீ, பௌரவீ, தோடீ, துருஷ்கதோடீ, மல்லாரி, நடமல்லாரி, கோண்டா, பூர்வகௌடை, தேசிகாரம், சுத்தவராடீ, பஹுலீ, ஸாரங்கம், நடநாராயணம், தேவக்ரியா, ஸௌராஷ்ட்ரம் சைதீகௌடீ, பூர்வீ, த்ராவணீ, காம்போதீ, சுத்தநாட்டை, ஆபீரீ, கல்யாணம், ஸ்ரீராகம், மாலவகௌடை, கௌடை, கர்ணாடம், அடாணா, வர்ணநாடை, ஹம்மீர், கேதாரம், விஹங்கடை இவைகள் ஆவன. (உ-சு)

## ராகங்களின் பொழுதுகள்

சங்கராபரணம் முதல் விபாஸலலிதை வரையுள்ள ஏழு ராகங்களும், உதய காலத்தில் பயிலத் தக்கவை. ஜைதாஸ்ரீ முதல் பௌரவீவரை யுள்ள

நான்கு ராகங்களும், காலையில் பாடத்தக்கன. தோடி முதல் நடமல்லாரி வரையுள்ள நான்கு ராகங்களும், ஸூரிய உதயத்திலே பாடப்படுவன, கோண்டைமுதல் சுத்தவராடீ வரை யுள்ள நான்கு ராகங்களும், உச்சிவேளை (நண்பகல்)யில் பாட வேண்டுவன. பஹுலீ முதல் தேவக்ரியை வரை யுள்ள நான்கு ராகங்களும், பிற்பகலின் துவக்கத்திலே பாடத்தக்கவைகள். ஸௌராஷ்ட்ரம் முதல் காம்போதீ வரையுள்ள ஐந்து ராகங்களும், மாலைப்பொழுதிலே பாடவேண்டுவனவாம். சுத்த நாட்டை முதல் கௌடைவரை யுள்ள ஆறு ராகங்களையும், அந்தி மயங்கு நேரத்திலே பாடவேண்டும். கர்ணாடை முதல் விஹங்கடை வரை யுள்ள ஆறு இராகங்களும், இரவிலே பாடப்படுவனவாம். மற்றும் எப்பொழுதும் பாடத்தக்கச் சில ராகங்கள் வருமாறு: மாலவஸ்ரீ, தவலா, முகாரீ, ராமக்ரியா, பாவகம், ஸைந்தவீ, அஸாவேரீ, காந்தாரம், மாரவீ, பரஜு என்பன. மேற்குறித்த ராகங்கள் தத்தமக்குரிய காலத்திலேதான் நயமும் வெற்றியுமுற, முறையே பயிலத் தக்கனவாம். ஆர்யா சந்தஸில் இனி நான் வெவ்வேறான ராகங்களின் அமைப்புக்களை விவரிப்பேனாக.(எ-கo)

**ரூபம் என்பது யாது ?**

ஒருவருடைய மனோவுலகில் இனிய ஸ்வர போஷணையால் பூர்த்திபெற்ற விரிவான ராகங்களின் தோற்றங்களே 'ரூபம்' (வடிவம்) எனப்படும். அந்த ரூபம் இருவகைப்படும். என்னையோ ? நாதாத்மம்; தேவமயம். முன்னது பலகிரமமான கலைகளையும், பின்னது ஒரே கலையுடன் விளங்குவதாகும். ஈண்டு கலை என்பது 'Phase' என்ற சொல்

வின் பொருளைக் குறிக்கும். பூரண வடிவுக்காம் காரணம் கலை என்க. (கஈ)

## (க) நாதாத்மரூபம்

ஸங்கீதாபிமானிகளால் வியவஹாரத்தில் நன்கு பயிலத்தக்கதாயுள்ள முற்கூறிய இரு ரூபங்களின் முன்னதாகக் கூறப்பெற்ற நாதாத்ம ரூபத்தை விவரிப்போமாக. இந்த நாதாத்ம ரூபம், தனது தோற்றத்துக்குரிய எந்தவிதச் சேர்க்கைகள் பெற்ற ஸ்வரங்களாயிருந்தாலும் அவைகள் சேர்ந்த அந்தத் தோற்றமே ஒரு 'ரூபமா'கும். ஆலாபனை, மூர்ச்சனை, சுத்ததானம், அலங்காரம், கூடதானம் முதலியவைகளும் அவற்றின் சேர்க்கைகளுள் யாதானும் சிலவோ விரவி காணப் பெற்று ரூபங்களால் அறியப்படுவது ஆகும்.(கஉ-கரு)

## வீணை பயிலுவதின் பலவித முறைகளின் பெயர்கள்

வீணை பயலுவதில் முடிவற்ற முறைகளுள், தேசியிலும் இரு பதிவுகளிலும் முக்கியமாக நடை முறையிலுள்ள இருபது முறைகளை மாத்திரம் நான் இங்கே நினைவுறுத்தப் போகின்றேன். மொத்தத்தில் நான் இருபத்திரண்டு வகைகளையே கண்டு தெரிவிக்கின்றேன். அவையாவன: ப்ரதிஹதி, ஆஹதி, அநுஹதி, அஹதி, பீடா, தோலனம், விகர்ஷம், கமகம், கம்பம், கர்ஷணம், முத்ரை, ஸ்பர்சம், நைம்நியம், ப்லுதி, த்ருதி, பரதா, உச்சதா, இரு நிஜதங்கள், சமம், ம்ருது, கடினம் என்ப. வீணையின் தன்மைக்கேற்ப முறையே முற்கூறியவற்றின் பண்புகளை வர்ணித்துக் கூறப்படும். (கசு-உகூ)

### ப்ரதிஹதியும், ஆஹதியும்

இரண்டு சுண்டுதல்களால் வீணையின் மீது எழும் காம்பீர்ய த்வநியே ப்ரதிஹதி எனப் படும். ஒரு ஸ்வரத்தைத் தோற்றுவிப்பதற்காகக் கம்பிகளின் மீது ஒழுங்காக உள்ள ஒரு சுண்டு தலும், மற்றொரு சுண்டுதலோ கம்பியினூடே முற் றேன்றிய ஸ்வரத்தின் உச்ச நீச நிலையை வரச்செய்து விரைந்த விரல்களால் 'ஹு'ங்கார த்வநியைச் செய்ய வல்லது. ஒரு சுண்டுதலில் ஒரு ஸ்வரத்தைத்தோற்றிய பிறகு முதல் ஸ்வரத்தி னுடைய உச்சஸ்வரங்களும், தோற்றுவித்த ஸ்வர மும் உட்பட யாதொரு மீட்டுதல் இல்லாமலே அமைக்கப்படுகின்ற பொழுது அவற்றால் உண்டா கும் நாதமே ஆஹதி எனப்படும். (கஎ)

### அநுஹதி, அஹதி, பீடா, தோலனம்

ப்ரதிஹதியைப்போன்றதே; ஆனல் ஒரே மீட்டுதலைக் கொண்டு அமைந்துள்ள நாதம் அநுஹதியாகும். ஸாதாரண ஒரு உந்துதலால் யாதொரு மீட்டலுமின்றி உண்டாகும் அதே இன்னிசைக்கு அஹதி என்று பெயர். இன்னும், பீடா என்பதோ, முதற் குறிப்பு இரண்டாங் குறிப்பை விட உரத்துக்காணப்படுவதாய் விரல் களால் செய்யும் இரட்டைத் த்வநியுள்ள விஷமச் செய்கையால் உண்டாவதாகும். எனவே தோல னமோ, தடவரைகளின் மீது விரல்கள் அங்கு மிங்கும் தடவிச்செல்வதால் உண்டாகும் நடுக்கும் நாதமாகும். (கஅ)

### விகர்ஷம், நமகம், கம்பம், கர்ஷணம்

தோலனத்தைப் போல மேலேயும் கீழேயும் தடவிச் செல்லாமல் மேலே மட்டும் விரலால் தடவிச்

செல்வது விகர்ஷமாகும். எனவே மீளுவதில்லாத மேல் ஸஞ்சாரம் மட்டுமேயாம் ஒரு சுண்டுதலுக்குப் பின்னர் மெல்ல தோலனத்தைப் போல மூன்று அல்லது நான்கு முறைகள் மேலேயும் கீழேயும் தடைகளைத் தழுவியவாறு விரல்கள் செல்லுவதால் உண்டாகும் நாதமே கமகமாகும். கமகம் தனது உச்சவிரைவில் தோன்றுவதே கம்பம் எனப்படும். என்னையோ? இரண்டு அல்லது மூன்று தடவைகள் உந்தலுக்குப் பின்னர் விரைந்தெழுந்து அடங்குவது கம்பமாகும். கர்ஷணமோ, முன்னதும், பின்னதுமான ஸ்வரங்களுடன் சேர்ந்துள்ள ஒரு ஸ்வரத்தால் தோற்றப்படும் ஒலிக்குறிப்பேயாகும். (கசு)

## முத்ரா, ஸ்பர்சம், நைம்நியம்

குறித்த ஸ்வரம் ஒலித்ததும், பொருக்கென அந்த ஸ்வரத்தினின்றும் வேற்றொலி தோற்றா வண்ணம் அதன் முந்தின ஸ்வரஸ்தானத்தை ஒடியடைந்து மறைப்பிப்பது (முற்றுகையிடுவது) முத்ரையாகும். ஸ்பர்சமோ, ஆஹதியைப் போன்றதாயினும் ஸ்வரம் தோற்றியவுடன் அதன் முன்னதான ஸ்வரத்தை இசைத்து ஒலிக்கச் செய்வது. நைம்நியமோ தடைகளினிடையே தந்திகளை அழுத்துவதால் உண்டாகும் பலத்த த்வனிச் செய்கையே யாகும். (உ0)

## ப்லுதி, த்ருதி, பரதா, உச்சதா

தொடர்ந்து விரைவில் ஒலிக்கும் எட்டு ஸ்வரங்களுக்கு ப்லுதி எனப்படும். வீணையை விரைந்து வாசித்தலின் வல்லமையே த்ருதி யாகும். ஷட்ஜத்தின் தடைவரையை அழுத்தி உண்டாக்குவ

தால் ஜநிக்கும் ரிஷபத்துக்கு பரதா என்பது. அம்மாநிரியே காந்தாரத்தைத் தோற்றுவிப்பது உச்சதா எனப்படும். (உக)

### இருநிஜதங்கள், ம்ருது, கடினம்

பரதையை மெல்லத் தோற்றுவிப்பது ஒரு வகை நிஜதமாகும். உச்சதையை அதே வண்ணம் மெதுவாகத் தோற்றுவிப்பது மற்றொரு வகை நிஜதமாகும். வீணையை மெல்ல வாசித்தலின் சிறப்பு சமமாகும். நீசப்பதிவில் உள்ளதை ம்ருது என்றும், உச்சப்பதிவில் உள்ளதைக் கடினம் என்றும் கூறுவர். (உஉ)

### வீணை மீட்டலின் முறைகளின் ஸங்கேதங்கள்

ப்ரதிஹதி, ஆஹதி, அநுஹதி, அஹதி இந் நான்கு வகைகளும் முறையே ஸ்வரத்தின் கீழ் இணைந்த இருசுன்னங்களும், ஸ்வரத்தின் கீழ் ஒரு சுன்னமும், ஸ்வரத்தின் கீழ் இடமிருந்து வலமாக ஒரு கோடு சுன்னத்தைச் சேர்ந்தும், ஸ்வரத்தின் கீழ் சுன்னத்தின் மத்தியில் ஒரு புள்ளியுமாக பெற்று வருவனவாம். பீடா என்றதின் குறியோஸ்வ ரத்தின் வலப் புறத்தே ஒரு வட்டத்தைப் பெற்றி ருக்கும். (உங-உசு)

ஜோலனம், விகர்ஷணம், கமகம் என்பவை களோ, 'S' இம்மாதிரிக்குறி யொன்றையே முறையே ஸ்வரத்தின் மீது செங்குத்தாகவும், ஸ்வ ரத்தின் மீது படுக்கையாகவும், ஸ்வரத்தின் வலது புறம் செங்குத்தாகவும் சார்ந்து பெறுவனவாகும்.

கம்பம், கர்ஷணம், முத்ரை இவை மூன்றும் ஒரு நேர் கோட்டையே முறையே, ஸ்வரத்தின் மீது

செங்குத்தாகவும், ஸ்வரத்தின் கீழே படுக்கைக் கோடாகவும் பெற்று வருவனவாகும்.

ஸ்பர்சம், நைம்கியம், ப்லுதி முதலியவை தமக்கென கீற்றுப் பிறை யொன்றையே, கிரமமாக ஸ்பர்சம் மேலே பெற்றும், நைம்கியம் கீழே பெற்றும், ப்லுதி வலப்புறத்தே பெற்றும் விளங்குவனவாகும்.

த்ருதியோ, தன் ஸ்வரத்தின் கீழ் வளைவுச் சங்கிலிக் கோட்டைப் பெறும். பரதையும், உச்சதையும் முற்கூறிய 'S' இக் குறியையே ஸ்வரத்தின் கீழ் படுக்கை முறையிலும், உச்சதை இக் குறியையே ஸ்வரத்தின் மேலும் கீழும் படுக்கை முறையிலும் பெறுவனவாம்.

நிஜதங்களின் இருவகைகளோ, 'S' இம்மாதிரியான அடையாளங்களை முறையே ஸ்வரத்தின் கீழும் மேலும் படுக்கையாகவும் பெறும். ஆனல் இரண்டாம் நிஜதத்தின் கீழுள்ள 'S' இக் குறி கீழ் ஒரு பூஜ்யத்துடன் சேர்க்கப்பட்டிருக்கும்.

சமம், ம்ருது, கடினம் என்ற மூன்றும், நீண்ட வட்டங்களை (பூஜ்யங்கள்) முறையே வலப்புறத்தில் செங்குத்தாகவும், மேலே செங்குத்தாகவும், ஸ்வரத்தின் மீது படுக்கையாகவும் பெற்று வரும். ஒன்றோ அல்லது இரண்டோ அன்றி இந்த எல்லா அடையாளங்களும் சேர்ந்தோ தான் ஒரு ஸ்வரம் அல்லது அந்த ஸ்வரச் சேர்க்கையை ஒலிக்க உபயோகப்படுகின்றன.

வீணை வாசிக்குங்காலை இரு நாதங்கள் தோன்றும் பொழுது தொடர்ந்த இரு அடையாளங்களே அவற்றைப் பிரதிபலிக்கச் செய்யும் மத்யஸ்தாயி

யில் உள்ள ஸ்வரங்கள் தம்மீது முட்டை வடிவமான அடையாளங்களைப் பெற்று வருவதில்லை. ஆனால் மந்த்ர தாரஸ்தாயிகள் அவைகளைப் பெற்றுவரும். பத்ம வடிவமான (*) இக்குறி ராக அமைப்பைத் தோற்றுவாயிலும் இறுதியின் கண்ணும் பெற்றுவரும்.

**சுத்த விக்ருத ஸ்வரங்களைப் பற்றிய விசேஷக்குறிப்பு**

ஸாதாரண ஷட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்யமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்ற ஸ்வரங்கள் மூன்று மேளங்களில் மேற்காட்டியுள்ள ப்ரஸ்தாரங்களில் வாசிக்கும் பொழுது இன்னவை சுத்த ஸ்வரங்கள் என்றும், இன்னவை விக்ருத ஸ்வரங்கள் என்றும் ஸுலபமாயறிந்து கொள்ளவே குறிகளைக் கொண்டு காட்டப்பட்டுள்ளன. அவை எண்ணிக்கையில் முப்பது ஆகும். (௩௦)

**மீண்டும் ஆசிரியரின் வேண்டுகோள்**

வீணாவாதனத்தின் நிமித்தம் கீழ்க்கண்ட ராக ரூபங்களை அக்காலத்தும் எனக்கு முன்னுள்ள கலைஞர் எவரும் முயற்சிக்காதிருக்க நான்மட்டும் அவற்றை ஸூத்ரம்போன்ற நடையிலே இயற்றியுள்ளேன். என்னையோ? ஸ்வரங்களின் மாற்றலுக்கும் சேர்க்கைக்குமே இசை யெழிலும், இனிமையும் தேவையாயுள்ளன. எனவே அறிஞர் இம்முயற்சியை மன்னித்தருள்க. (௩௧)

**வலக்கை விரல்களின் கிரியைகள்**

ஒழுங்கான க்ரமத்திலே நடுவிரலின் உந்தலால் மேலாகவுள்ள நான்காம் தந்தியை ஒலிக்கச் செய்வதுடன் எதிராகவும், பின்னதாகவும் சுண்டு விரலாலும் உந்துவதால் சுருதியுடன் ஒருவர் வீணை

வாசித்தல் வேண்டும். இவற்றிற்கு விளக்கம், சுண்டு விரலால் மூன்று சுருதித் தந்திகளை முன்னும் பின்னும் சுண்டுவதாலும் நடுவிரல்நுனி அவ் விதமே செய்வதாலும் சுருதியைத் தோற்று விக்கும். (௩௨-௩௪)

(டாயம்) ஆலாபனை போன்ற ப்ரபந்தங் களின் வேற்று வகைகளில் வாசிப்போர் தம் விருப் பப்படி மத்யமம், முன் விரல்களின் நகநுனி களால் மற்ற மேலுள்ள மூன்று தந்திகளில் வாத னம் செய்யலாம். மத்யமம், முதல் விரல் நகநுனி களால் நேராக விரைந்து நான்கு சுண்டுதல்களை ஒரு மேலுள்ள தந்தியில் ஒலிக்கச் செய்து மீண்டும் அவ்வொலியைத் தொடர்ந்து பின்னதாகவிரைந்து நான்கு சுண்டுதல்களை அதே வண்ணம் செய்வது தான் கர்ந்தரீ என்ற வீணையின் வாதனமாகும். இவையே மிகையாதலின் மேல் விளக்கமின்றி வலக்கை விரல்களின் கிரியைகளை கொடுக்கப்பட் டுள்ளன.

### இடக்கை விரல்களின் கிரியைகள்

இடக்கை விரல்கள் வீணை வாசித்தலின் முறைகளை நான் இப்பொழுது விவரிக்கிறேன். மேலுள்ள கம்பிகளோடு நடுவிரல் உயரும் நிலை யில் செல்ல வேண்டும். நடுவிரலால் சப்திக்கப் பட்ட நாதத்துடன் முன்னதான ஸ்வரத்தை ஒலிக்கச் செய்யாமல் சுண்டுவிரல் நடுவிரலைப் பின்றொடர்ந்து செல்ல வேண்டும். (௩௪-௩௫)

ஆனல் கீழ் திரும்பு நிலையிலோ சுண்டுவிரல் ப்ரதிஹதியைப் போன்று வீணைவாதனத்தின் வெவ்வேருன முறைகளையும், நிலை நிறுத்தவோ

அல்லது பரிசீலிக்கவோ செய்து செல்ல வேண்டும். சிலர் மேல் செல்லு நிலையில் சுண்டுவிரல் நடுவிரலுடன் ஸ்வரத்தை ஒழுங்கு பெற ஒலிக்கவும் செய்யலாம் என்றும் கூறுவர்.

சுத்த நாட்டை போன்ற ராக வியல்பிலே சுண்டுவிரல், மோதிரவிரல், நடுவிரல் மூன்றும் தந்திகளின் மந்த்ர, அநுமந்த்ரப் பகுதிகளில் நெடுகச் செல்ல வேண்டும். மத்ய, தாரஸ்தாயி தந்திகளில் இடக்கை சுண்டுவிரலும் நடுவிரலும் மாத்திரம் செல்லவேண்டும். வீணாவாதனத்தின் நுட்ப விளக்கங்களை இனித்தருவோம்:—

**குறிப்பு:**—இந்த 129 சுலோகங்களும் மொழி பெயர்க்க வொண்ணாதவைகளாகும். எனினும் அவற்றில் விரிவாக விளக்கம் செய்யப்பட்ட ஐம்பத்தோரு ராகங்களையும் வீணை பயிலுவதின் நிமித்தம் வருமாறு நாம் வகுத்துரைக்கலாம்.

உதயகாலத்தில் பாடத்தக்க ஏழு ராகங்களாம். (௩எ-௫0)

ஸூர்யோதயத்தில் பாடப்படும் நான்கு ராகங்கள். (௫௧-௬௧)

காலையிலே பாடப் பெறும் நான்கு ராகங்கள்) (௬௧-எ௧)

நண்பகலிலே பாடும் நான்கு ராகங்கள்.(எ௧-எ௯)

நண்பகலின் பின்னர்ப் பாடப்படும் நான்கு ராகங்கள். (எ௯-௯0)

மாலையில் பாடப்படும் ஆறு ராகங்கள்.(௯0-௧0௧)

அந்தி மயங்கு வேளையில் இசைக்கும் ஆறு ராகங்கள். (௧0௧-௧௨௩)

இரவிலே பாடப்பெறும் ஆறு ராகங்கள்.
(கஉரு-கசரு)

எப்பொழுதுமே பாடத்தக்க பத்து ராகங்கள்.
(கசரு-கசுசு)

இவ்வாறு அமைந்த ராகங்கள் மத்யஸ்தாயில் அமைக்கப்பட்டுள்ளன. ஏனைய மந்த்ர, தாரஸ்தாயிகளிலும் இதே வண்ணமான முறைப்பாடு அமைவனவாகும். எனவே ஒவ்வொன்றூன ஐம்பத்தோரு ராகங்களுக்கும் சப்த ஆதாரமான நாதமூலமான அநேக ரூப (தோற்ற) வகைகளும் விவரிக்கப்பட்டன. (கசுஎ,கசுஅ)

## (உ) தேவதாத்ம ரூபங்கள்

மேற்கூறிய ஐம்பத்தோரு ராகங்களுக்கும் அவ்வவற்றிற்குரிய தேவதைகளை இங்கு விளக்குவாம். (கசுஅ)

சங்கராபரணத்தின் தேவதை, எழிலும் வெண்ணிறமும் கொண்டு விளங்கும். எப்பொழுதும் நடனம் செய்வதில் பெருவிருப்பு. நெற்றியில் விபூதியும், தாமரைமலர்மாலையை அணிந்தும், இடையிலும் ஆகமுழுவதும் சிவந்த ஆடையை உடுத்தித் தோன்றும். (கசுகூ)

நீல நிறத்தினள்; பனங்காட்டினுள் தனக்குரிய தலைவனைத் தேடுவாள் போலும் அங்கு மிங்கும் திரிபவள்; அவளுடைய அந்த மெய்ப்பாடு அவளது மாலையை அலைத்து அவளுடைய கரங்களுக்குள் அதைச்சிறைப் படுத்தும்; இவளே வேலாவலீ.
(கஎ0)

பூபாளியோ, மஞ்சள் நிறத்தினள்; மின்னும் மாலையினள்; கானகத்திலே காதலனைத் தேடி

அங்கு மிங்கும் அலைபவள்; அவனைக் காணும் ஆசையில் நொடிக்கு நொடித்துள்ளித்திரியும் இயல்பினள். (௧எ௧)

சுத்த லலிதையோ, வெண்ணிறமேனியாள்; வெண்பட்டாடையையும், நல்லணிகள் பலவும் பூண்டிருப்பாள். வைகறையிலே ஸ்ரீ உமேசனை வழி படுவாள்; மங்கலஹாரதீ எடுக்குங் கடப்பாட்டினள். (௧எ௨)

வஸந்தனோ, வெண்ணிறத்தன்; நீர்க்காவி படிந்த வஸ்திரத்தைத் தரித்துத் தன் சிரத்திலே பலாச (புரசு) மலர்களைத் தரிப்பன்; குயில் தனது அலகால் அடிக்கடி தெளிக்கப்பட்ட தானிய மணிகளைக் கொத்தித் தின்னும் அந்த மாமரத்தின் வேரடியிலே நிரந்தரம் (எப்பொழுதும்) தனது வாஸத்தைச் செய்வன். (௧எ௩)

வெண்ணிறமும், தீர்ந்த அழகும், அசோகம், சம்பகம், கமலம் இம்மூன்று மலரும் விரவித் தொடுத்த மலர் மாலையுமுடையவன்; யுவதிகள் பலர் வேண்டுதலில் அங்கு மிங்கும் ஓடியாடி மகிழ்பவன்; ஊஞ்சலில் உட்காரும் வேட்கை மிக்குடையோன். இவனே ஹிந்தோளன். (௧எ௪)

புறவழகும், அகவிகாரமும் கொண்டவன் விபாஸலலிதன்; சரீரஅழகும், நேர்மையற்ற நெஞ்சினனும் ஆவன்; பரத்தையரோடு இரவு முற்றும் இன்பம் நுகர்ந்து, அவ்வலங்காரத்துடன், நொந்து நையும் தனது சொந்த மனைவியை வைகறையிலே அணுகி உண்மையான அன்பினன் போல் நடித்தும், ஆதரவான அருமையும், அழகுமுடைய வாசகங்கள் சில கூறுமியல்பினன். (௧எ௫)

தனது தலைவன்பால் நழுவா அன்பும், திறனும், ஒருங்கே பெற்றவள் ஜைதாஸ்ரீ. இனியகுணமும், நடைத்தையுமுடையவள். நகரத்தின் நாகரிக மொழியிலே நன்கு பயிற்சி பெற்றவள். (கஎசு)

தனஸ்ரீயோ, (தன்யாஸி) நீல அருக்கன் புல்போன்ற வண்ணமுடையாள்; காதலனது பிரிவாற்றாமையால் விம்மி வழியும் கண்ணீரால் நனைந்த மார்பகமும், கண்டப்பிரதேசம் வெளிர்த்தும், கூந்தல் பராமரிப்பின்றி அவிழ்ந்தும், தனது வஸ்திரத்தின் தலைப்பிலே அவரது உருவை வரைந்த வாறிருப்பள். (கஎஎ)

வெண்மையான நிறம்; எழில் மிக்கவர்; த்ரிநேத்ரமும், டமருகமும், த்ரிசூலத்தையும் பெற்றவர். நாகாபரணம் பூண்டவர்; மேனி முற்றும் பூசிய வெண்ணீறு. பத்தையான சடையிலே பாதிமதியும், கங்கையும் சூடியவர்; யானையுரி போர்த்தவர்; இவரே பைரவி ஆவர். (கஎஅ)

வெளிர்த்ததும், மெலிந்ததுமான மேனியாள்; கஞ்சுகத்தையும் மறைத்துப்புரளும் வார்குழலினள்; நீலவாடை யணிந்தவள்; வஸந்தருதுவைக் காண மகிழ்பவள்; ஊஞ்சலில் அமர்ந்து வீசியாட்டும் விருப்பினள்; இவளே பௌரவிகா. (கஎசு)

பச்சை நிறவடிவினள்; அலங்காரத்திலே ஆசையுள்ளவள் மதுர மொழியினள்; பழுப்பாடை யணிந்தவள்; வனத்திலே வாஸத்தையுடையவள்; வளர்ப்பு மானொன்றுடையவள்; வேணுநாதம் புரிந்துகொண்டிருப்பவள்; தவள புஷ்பத்தின் மணமிக்க கேஸரத்தாதுப் பொடியை மேனி முற்றும் மணக்கப் பூசுபவள். இவளே தோடிதேவதையாம். (கஅ0)

துருஷ்கதோடியோ; பாதிவ்ரத்ய மிக்கவள்; வெளிர்த்த மேனியாள்; சொருகிமுடிந்த பெரிய கொண்டையினள்; நீண்ட நீல ஆடையினள்; பிரிவாற்றாது பிரிந்த காதலனின் நாமத்தை அக்ஷமாலைகளால் உருட்டியவாறு உச்சரித்த வண்ண மிருப்பாள். (கஅக)

மல்லாரி ஒருபெருவீரன்; மேகம்போன்ற நீல நிறத்தினன்; மஞ்சள் ஆடை தரிப்பவன்; புன்முறுவலும், இனிய தோற்றத்துடனும் சாதகப் பறவைகளின் அதிக தாப வேட்கையைச் சமனம் செய்வதிலும் ஈடுபாடுடையவன். (கஅஉ)

நடமல்லாரி தெய்வமோ; வெள்ளைப்படிவத்தன்; குதூஹலத்துடன் தானே நாட்டியமாடுவதுடன், தன்னால் வளர்க்கப் பெறும் மயில்களையும் ஆடச் செய்பவன்; நிரந்தர பாதுகாப்பான அந்தச் சூழ்நிலையிலே ஸ்வஸ்தமாக அடை (கூடு) கட்டுகின்ற தேனீக்களின் குழுவின்கீழ் கடம்ப விருக்ஷத்தின் வேரடியிலே காம்பீர்யமாக நிற்பதுண்டு. (கஅங)

தேனீப்போல சுறுசுறுப்பினன்; வேட்டுவன்; மஞ்சள் நிறத்தன்; பழுத்த முடிமயிரிலே மயிற் பீலியைச் சொருகியவன். மலைமல்லிகைமாலை மார்பிலே துவள, இடக்கரத்தே வில்லும், வலக் கரத்தே அம்பும்கொண்டு விளங்குவான் கோண்டை ராகத்தினன். (கஅச)

பூர்வகௌளடை ராகமோ; மகத்தான பெருமையுடையவன்; தாமரைக் கண்ணன்; சிறுவன். சந்திரனுக்குச் சமானமான தண்மையும், நிறமும் கொண்டவன்; நீர்க்காவி வஸ்திரம் இரண்டையணிந்திருப்பன்; தாமரை மலர் மாலைகளை வனைந்து, சிவபெருமானுக்குப் புனைந்து மகிழ்பவன். (கஅரு)

மந்தமான கம்பீரத் தோற்றமும், ரத்தின மிழைத்தப் பொற்கிரீடமும், அரவிந்த மலர்போன்ற நேத்ரங்களும், அருணோதயம் போன்ற நிறமும் கொண்டு, பன்னிறமுள்ள ஆடையை உடுத்தி, வலக் கரத்தில் உருவிப் பிடித்த பட்டாக்கத்தியு முடையது தேசிகார மென்ற ராக தேவதை. (கஅசு)

மிக வெளிர்ந்த மேனியாள்; நீலப்புடவை யணிந்திருப்பாள்; மந்தாரம் முதலிய மலர்களால் அலங்கரியாநின்ற கூந்தலாள்; இரங்கத் தக்கவாறு வன மத்தியிலே காதலனைத் தேடுவதில் முயற்சி யுடையவள் சுத்தவராடீயாவள். (கஅஎ)

இருண்ட நீலநிறத்தினள்; மெலிந்த உடற் கட்டுடையவள்; கரங்களில் தாம்பூலம் கொண்டிருப் பள்; அழகிய கச்சணிந்தவள்; தானே விநோத விளையாட்டுக்களில் ஈடுபடுவாள்; இங்குமங்கும் அந் தத்துடன் மந்தகதியில் நடப்பதால் அவளுடைய அடர்ந்த கூந்தலும், புடவையின் கரைகளுமின்ன அங்குமிங்கும் அலைவனவாகும்; இவளே பஹுலீ. (கஅஅ)

மந்தஹாஸத் தோற்றமும், இருண்ட நீல வண்ணமுடையவன் ஸாரங்கராக தேவதை; மஞ்சள் பட்டு உடுத்தியவன்; தடந்தோளிலே தாங்கிய வில்லும், அம்பறாத்தூணியு முடையவன்; கருடனாது பலத்திலே வாழ்பவன்; தன்னுடை கரங்களில் முறையே சங்கம், சக்ரம், கதை, பத்மம் இவற்றைத் தரித்திருப்பவன். (கஅகூ)

தீர்ந்த அழகும், மின்னும் குண்டலங்களையு மணிந்து, இந்தீவரம் (கரு நெய்தல்) போன்ற மேனி நலமும் கொண்டவன் நடநாராயணன்; சிரத்திலே

பொற்கிரீடம் சூட்டியிருப்பவன்; பீதாம்பரம் இங்குமங்கும் அசைந்தாட இனிய முகபாவமும், ஊக்கமுங் கொண்டு நடனஞ் செய்வதில் விருப்பமுள்ளவனுமாவன். (௧௧௦)

தேவக்ரீ; ஈடுசோடில்லாத அழகியும், மந்தஹாஸினியுமாவாள். காந்திமிக்க அவளது காத்திரம் நறுமணங்கமழும்; என்னேயோ? அவளது இருக்கை, அப்பொழுதே அலர்ந்த கற்பகவ்ருக்ஷ மலர்களால் அலங்கரிக்கப் பெற்றதாதலின்; தன்னைத் தாங்கவொரு அரியணையும் அவளுக்குண்டு. (௧௧௧)

ஸௌராஷ்ட்ரியோ மிதமிஞ்சிய வெண்ணிறத்தினள்; பலநிற வாடைகள்; நீலநிறக்கச்சணிந்தவள்; மாதுள முத்துப்போன்ற பற்களை யுடையவள்; சந்திரனினும் தண்ணிய சாயலுடையவள்; பிரிந்த காதலனை எண்ணித் துயருற்று, அவனைத் தேடுமியல்பினள். (௧௧௨)

தாமரைக் கண்ணினளும், அமர்ந்த அழகிய பார்வையும்,நீண்ட கரங்களும் பெற்று, வெண்ணிறமாகக் காணப்படுவாள் கௌடை; பாற்கடலொத்த வெண்ணிறப் புடவை தரித்திருப்பாள்; நாகப்பிடியுடைய குடையொன்றைக் கரத்திலே கொண்டு விளங்குவாள். (௧௧௩)

மட்டற்றமேனியுடையாள்; வெண்ணிறத்தாள்; நீர்க்காவி படிந்த ஆடையுடையவள்; மாம்பூங் கொத்துக்களால் அலங்கரியாநின்ற கர்ணங்களை யுடையவள்; குயிலினுமினிய குரலுடன் இன்னிசை யமுதத்தைப் பொழிந்தவாறு வனத்திலே சஞ்சரிப்பாள்;இவளே சைதீ.(சைதீ கோடை) (௧௧௪)

பூர்வியோ; ராங்கி மிக்கவளும், உயர்ந்துள்ள வளும், அழகியுமாவள்; தர்வீப் புல்போன்ற வெண் பச்சை நிறத்தினள்; கரங்களிலும், சரணங்களிலும் செம்பஞ் சூட்டிய செவ்விய அலங்கார முடையவள்; பலவித பூஷணங்களைத் தரிப்பவள்; இவற்ருலேயே தன் காதலனை வசப்படுத்தியவள். (கசரு)

மஞ்சள் நிறத் தோற்றத்தாள்; ஒல்லியான துவளும் ஆகிருதி; வசீகரிக்கும் கூந்தல் முடியாள்; நன்கு எடுத்துக்காட்டும் நலமிக்க மலர் மாலை யுடையவள்; வாழையினருகில் வீற்றிருந்து தனது விம்மிப்புடைத்த கொங்கைகளால் கணவனை வசீ கரிப்பவள்; இவளே த்ராவணீயாவள். (கசசு)

இருண்ட நீலநிறமும், கரிய அடர்ந்த கேசபார மும், அழகிய மலர் மாலையையும் கொண்டவள்; குயிலின் குரலோசை கேட்டு திகைத்து நிற்பவளும், வேற்ருகத்தோன்றி முன்னேறிவரும் மாற்றவரைக் கண்டு வெருள்பவளும், தன்னந்தனியே தனது இல்லில் வீற்றிருந்து பிரிந்து சென்றுள்ள தனது காதலனின் பெயரை அகத்திலே கூவிக் கண்ணீர் வடிப்பவளுமாய்க் காம்போதீ தோன்றுவள். (கசஎ)

நாட்டையோ; ஒரு புரவி வீரன்; அரு ணோதயம் போன்ற அழகிய தெளிந்த நிர்மலசிவ சூழும் கண் விழியினன்; தீரநெஞ்சினன்; மஞ்சள் நிறத்தினன்; முத்து மாலையணிந்தவன்; யுத்த களத்திலே கத்தியும், கேடயமும் கொண்டு மாற் ருரை வெட்டிமாய்ப்பவன். (கசஅ)

இனிய குரலோசையும், தண்ணிய சாயலுமுடை யவள் ஆபீரீ தேவதை; இருண்ட நீலநிறமும், கரிய குழலுமுடையாள்; நீல நிற ஆடையணிந்தும், பவழ

மாலையினை தரித்துமிருப்பாள்; காந்தி எழும் காதோலையிரண்டை யணிந்தவள். (௧௯௯)

கல்யாண தேவனே; ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருக்கும் ஒருவேந்தனைப் போல்றவர்; வெண் பட்டுடுத்தி, ரத்தினஹாரம் ஒன்றைக் கழுத்திலே அணிந்திருப்பன்; தன்னதான பூர்வீக வெண் வட்டக்குடையின் நடுவணே, அசைந்து காற்று வீசும் சாமரங்களோடு தாம்பூலம் தரித்துச் சுவைப் பவனுவான். (௨00)

படர்சினப் பருமயானையின் மீது கனகக் குடையின்கீழ் வீற்றிருப்பன் ஸ்ரீ ராகன்; சிரத்திலே தாமரைப் பூமாலையைச் சூடியிருப்பன்; எல்லா இன்பங்களையும் அநுபவிக்கும் பெருந்தகைமை யுடையான்; பவனி வருங்கால் அவனது ஆடைகள் அங்குமிங்கும் காற்றில் ஊசலாடும். (௨0௧)

மாளவ கௌடையோ; ஒரு வேந்தன்; கிள்ளையைப் போன்று பசுமையான நீல நிறத் தினன்; கைகளிலே கடகமும், கழுத்திலே மாலையு மணிந்தவன்; நடன ஸங்கீதக்கலைகளில் வல்ல ஒரு போதகன்; தன்னருங்காதலியால் அடிக்கடி முத்த மிடப்படுவதால் மிகுந்தெழுந்த வேட்கையுடன் இங்குமங்கும் ஊசலாடுமியல்பினன்; அவனது முடி யும் அவ்விதமே இயங்கும். (௨0௨)

சுத்த கௌடையோ; அழகிய மேனியன்; கழுத்திலே மலர் மாலையும், கரங்களிலே தாம்பூல மும் கொண்டு விளங்குவன்; கஸ்தூரீ திலகம் நெற்றியிலே இட்டிருப்பவன்; மஞ்சள் பழுப்பான காவி ஆடையணிந்து, மணங்கமழும் தோற்ற முடையவன். (௨0௩)

கர்ணுடையோ; ஒரு வேட்டுவச்சி; நீல நிறக் கழுத்தினள்; கத்தியும் யானை மருப்பும் கரங்களிலே கொண்டவள்; தனது வண்ணத்துக்கேற்ப வீரமும் பொருந்தியவள்; காதுகளிலே மகரக் குழை யுடையவள். (உ0ச)

அடாணு தேவதையோ; வானத்தின் வண் ணங் கொண்டது; மலைமல்லிகை மலர்மாலை யணிவது; மன்மத பாணத்தால் அடிக்கப்பட்டு அடிக்கடி ரதிகேளிக்கையில் ஈடுபடுமியல்புடைய தாகும். (உ0ரு)

நாட்டையின் நிழல் (சாயாநாடை) என்று கூறும் வர்ண நாட்டையோ; கதிரொளி வீசுங் கண்ணி னன்; மாலை யணிந்திருப்பன்; வெண்ணிற மேனி யான்; மகளிர்பால் காதலும், வீரர்பால் சமரும் புரிய வல்லவன்; தூய்மையான பனிபோன்ற வஸ்திரத்தினன்; வெண்சிவப்பான தலைப்பாய் அணிந்தவன். (உ0சு)

ஹம்மீரை தேவனே; ஒரு 'ஹாக்கி' வீரன்; வாலிபன்; வெண்ணிறத்தான்; என்றும் இனிய முகரஸிகன்; சிவந்தவுடுப்பை யணிந்தவன்; தாம் பூலம் தரிப்பதில் விருப்புடையோன்; விளையாட்டிலே ஊக்கம் பெரிதும் கொண்டவன்; எனவே தன் னுடன் ஒரு பந்தும், தடியும் எப்பொழுதும் வைத் திருப்பன். (உ0எ)

கேதாரமோ; யோகத்திலாழ்ந்த ஓர் தபஸ்வீ; த்யானத்திலாழ்ந்தவர்; பத்தையான ஜடாமகு டத்தை யுடையவர்; இளம்பிறையையும், கங்கையை யும் சிரத்திலே சூடியவர்; உடல் முற்றும் வெண் ணீறு பூசியிருப்பர்; கழுத்திலே காலநாகங்கள் கூட்டமாக மாலையாகிச் சீறும். (உ0அ)

விஹூங்கடனே; வெண்ணிறமும், நறுமணங் கமழும் மேனிவண்ண முடையான்; தன்னுடன் கொஞ்சுங்கிள்ளை யொன்றை கையிலேந்தித் திரிவன்; காதல் வாய்ப்பட்ட காரிகையரையும், அவரது மனதையும் திரியவைப்பான்; நல்லாடை பூண்டு அம்பும் வில்லும் சுமந்து திரிவான் என்க. (உ0௯)

மானினும் மருண்டவிழியாள்; மலர் மாலையணிந்திருப்பள்; ஓசிந்துவளையும் மேனியாள்; தாமரை மலர் கரத்திலே வைத்துக் கொண்டிருப்பாள்; மாமரத்தின் வேரடியிலே நின்று இன்னிசையுடன் பாடுவள்; தன் கொழுநனைக்காண மகிழ்ந்து புன்முறுவல் கொள்வள் மாலாஸ்ரீ. (உக0)

அழகொழுகும் வடிவினள்; கற்பூரஹாரத்தியை கௌரீதேவிக்கு எடுத்து வழிபடுபவள்; வெண்ணிற மேனியாள்; அழகிய தந்த வரிசைகளைப் பெற்றவள்; மஞ்சளில் நனைத்த அழகிய ஆடையை யுடையவள்; அதிமங்களை; மேகலாபரணம் பூண்டவள்; இவளே தவளா ஆவள். (உகக)

ச்யாம வடிவினள்; ஸகல கலாவல்லி; வீணையை ஏந்தியிருப்பள்; மார்பகத்திலே துவளும் ரத்தினாபரணங்களை யுடையவள்; கழிகாம வயத்தளாகிப் பிரிவாற்றாமையைத் தாளாது மூர்ச்சிப்பவள் முகாரீயாவள். (உகஉ)

ராமக்ருதிதேவதையோ; வசீகரிக்கும் எழிலாள்; பொன்னிற வண்ணத்தள்; ஒளிவீசும் பற்களினாள்; நீலச்சேலை புனைந்து, மின்னும் பல பணி பூண்டிருப்பாள்; காதலனைக் கடுகியுற்று, பிறரறியா வண்ணம் மெலிந்த குரலிலே பேசு மியல்பினள். (உகந)

பாவக ராகதேவன்; ஓர் ஆயர்மகன். கட்டழகன்; கனச்யாம வண்ணத்தன்; வீணுவாதனம் செய்பவன்; இன்ப விளையாட்டுக்களில் ஓய்வற்றவன்; வாஸனைப் பொருள்களால் கமழும் காத்திரன். (உகச)

உயர்ந்துள்ள வடிவினள்; வெண்ணிறத்தாள்; ஒசிந்தொடியும் தோற்றம்; கோபமிக்க முகபாவமுடையவள்; பெரியதான ஜகலங்களை யுடையவள்; மதகரிமா நடையினள்; செவ்வாடை யுடுத்தி, திரிசூலத்தை ஏந்தி நிற்பள்; யுத்தம் செய்வதில் பெருவிருப்புடையாள்; இவளே ஸைந்தவீ. (உகரு)

நீல நிறத்தினள்; கருணைவடிவினள்; இல்லக் கிழத்தி; மயிற்பீலியால் நெய்யப்பட்ட புடவையை உடுப்பவள்; மலையபர்வதம் போன்ற மாண்புடைய மலைக்கும் தோற்றத்தாள்; அசைந்தாடும் வாழையிலையைக் குடையாகப் பெற்றவள்; குழல் கொண்டு இன்னிசை எழுப்புவள் ஆஸாவரீராகதேவதை. (உகசு)

தேவகாந்தாரராகதேவனே சாந்தமான தோற்றமும், வெண்ணிறமும் கொண்டவன்; நாநாவித மின்னுபரணம் பூண்டவன்; வெண்பட்டுடுத்தி, வெண்டாமரை மலரொன்றைக் காத்திலே கொண்டிருப்பான். தேவர்கள் துதிசெய்து போற்ற, அரியணையிலே அழகுற வீற்றிருப்பவன். (உகஎ)

மாரவீ தேவதையோ; உயர்ந்தவள்; பொன்னிறங் கொண்டவள்; மதிமுகத்தாள்; நீண்ட கூந்தலாள்; மருளு நோக்குடைய இணையற்ற வடிவழகி; நீர்க்காவிபடிந்த ஆடையணிந்துச் சமரபூமியிலே, செங்கோல் வேந்தர் பலரையும் வென்றோடச் செய்வாள். (உகஅ)

பரஜுராகதேவனே, உயர்ந்துள்ள வடிவினன்; வெண்ணிறத்தினன்; நடுத்தரமேனியன்; அம்பையும்; வில்லையும் கரங்களில் கொண்டுள்ளவன்; தன்னை அந்தரங்கத்திலே துதித்துத் தாளவரிசை பிறழாது தாளமிட்டுப்பாடும் ப்ராவேசிகிகீதத்தால் முகமலர்ந்தவனாகி, அம்மங்கையரிடையே மலர்மாலையணிந்து தோன்றுபவன் ஆவன். (உகக)

## ஆசிரியரது நோக்கம்

இந்த தேவதாத்மராகரூபங்கள் தேசரீதிகளில் மாறுபடும்; தன்மைகள், மொழி இவற்றின் பேதத் தொடர்பாலேயே ஒவ்வொரு நாட்டிலும் அவை வெவ்வேறான நாமதேயங்களுடனும், பழக்க வழக்கங்களுடனும் காணப்படும். எனவே இஃது நமது விருப்பத்துக்கு அத்துணை அவசியமன்று. (உ௨0)

## நாதமயமும், தேவமயமும்

தேவதாத்மகராகரூபங்களோ ஒருசில; சப்தாத்மகராகரூபங்களோ ப்ரஹ்மஸ்ருஷ்டிபோன்று எண்ணற்றதுகளும், முடிவற்றதுகளுமாகும். (உ௨க)

திறமையும் வன்மையுங் கொண்டு இந்நூல் விளங்கின போதிலும், ஆதாரமும், பலமுமற்றது இஃது என்றும், மந்த அறிவுடையோரே சிலாகிக்கத்தக்க யோக்கியதையுடையது என்றும் கூறிவிடும் விமர்சகரின் கூற்றுக்கு நான் கூறும் உத்தரம் இஃதொன்றுதான்! நேரிய நடு நோக்குடைய அறிஞர் இதனைப் பரிசீலனை செய்வாராயின் முற்கூறிய கூற்று அடிபட்டுவிடும். என்னையோ? எனது கிரந்தமாகும் இக்கொடிக்கு, ஸங்கீத

ஸாஹித்யத்தில் வல்ல எனக்கு முன்னவர்களான எழுத்தாளர்களே வேர்கள் ஆவர்; இந்நூலை முற்றும் படித்துணர்ந்து புலமையுடன் விளங்குவோர் இக் கொடிக்கு இலைகள் ஆவர்; நடு நிலையுடைய அறிஞர், இத்தகைய இதன் ஆற்றலினின்றும் பெற்றுள்ள திருப்திகரமே இதன் மலர்கள்; என்னுடைய இந்நூலை உமாபதிக்கு நான் முடிவாக ஸமர்ப்பணம் செய்திருப்பதே இதன் பலன்களாகும். (உஉஉ,உஉ௩)

## முடிவுரை

முத்கலஸூரியின் மகன், ஸோமநாதன் இந்நூலை 'கடுௗக சகத்தில், ஸௌம்ய வருஷம், புரட்டாசித் திங்கள், சுக்லபக்ஷம், ஹஸ்த நன்னாளில், அக்னிதிதியில், ஸோமவாரத்தில் முற்றுப்பெற வியற்றி முடித்தனன். (உஉ௪)

இவ்விதம் ஸ்ரீஸோமநாதரியற்றிய 'ராகவிபோதம்'
என்னும் நூலின் 'ராக அமைப்புக்கள்'
என்னும் ஐந்தாம் விவேகம்
இவண் முற்றும்.

---

Printed at Thompson & Co., Ltd., (Minerva Press),
33, Broadway, Madras, (P.I.C. No. MS. 15).
9-4-'47—Copies-1,000.

40/1

157